
சூரியன்
பதிப்பகம்

அதிசயம் அனேகமுற்ற பழநி



சித்ரா மூர்த்தி

அதிசயம் அனேகமுற்ற பழநி

சித்ரா மூர்த்தி

சூரியன் பதிப்பகம்

229, கச்சேரி ரோடு,
மயிலாப்பூர், சென்னை-600 004.

ISBN: 978-93-85118-40-1

Title :
ATHISAYAM ANEHAMUTRA PAZHANI
© CHITRA MOORTHY

சூரியன் பதிப்பகம்
வெளியீடு: 102

நூல் தலைப்பு:
அதிசயம் அனேகமுற்ற பழநி

நூல் ஆசிரியர்:
சித்ரா மூர்த்தி

முதற்பதிப்பு:
அக்டோபர் 2015

இரண்டாம் பதிப்பு:
மே 2016

விலை:
ரூ.100/-

சூரியன் பதிப்பகம்
229, கச்சேரி ரோடு, மயிலாப்பூர்,
சென்னை–600004.
விற்பனைப் பிரிவு தொலைபேசி :
044 4220 9191 Extn: 21125
மொபைல்: 72990 27361
இ–மெயில் : kalbooks@dinakaran.com

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்	:	ஆர்.எம்.ஆர்.ரமேஷ்
ஆசிரியர் குழு	:	தி.முருகன்
		வள்ளி, கே.என்.சிவராமன், பிரபுசங்கர், வெ.நீலகண்டன்
சீஃப் டிசைனர்	:	பி.வேதா

பழநிப் பதிவாழ் பாலகுமாரன்

ஆறுமுகன் திருத்தலங்களில் 'பழநி'க்குத் தனி மகத்துவம் உண்டு என்பார்கள். இந்தக் குமரன் ஞானத்தை போதிக்கிறான். ஒரு போட்டியில் தனக்குப் பழம் கிடைக்காத கோபம்தான் அவனை அழைத்துவந்து இந்த மலைமீது நிலைநிறுத்தியது என்பது மேலோட்டமான புராண உண்மை. ஒரு பழம் கிடைக்காத வருத்தத்தைவிட, போட்டியில் தோற்றுவிட்ட அவமானம் அவனை இந்த முடிவெடுக்கத் தூண்டியது என்பதும் அத்தகையதே.

ஆனால் பற்றற்ற தன்மையும் அதை அடையவேண்டிய மனோபாவமுமே இந்தச் செயலின் உட்பொதிந்த தத்துவம். பழம் கிடைக்காத ஏமாற்றம், பந்த பாசங்களை உதறிச் செல்ல வைத்தது என்றால் அது கோபத்தின் விளைவு என்பதைவிட, விவேகத்தின் துவக்கம் என்றே கொள்ளவேண்டும். 'பொடியதனால் முழுக்காடிக் கீளொடு வெண் கோவணமும் புனைந்து கையில் தடிபிடித்துப் பழநிவெற்பில் குலவும்' அவன், மனித வாழ்க்கையின் யதார்த்தத்தை உணர்த்துகிறான்.

ஆசாபாசங்களை அறுத்தெறிந்து ஆன்ம சுகம் பெற வெண்ணீறும், வெண் கோவணமும் போதும் என்ற எளிமை உணர்வை நாம் கைக்கொள்ள நமக்கு வழிகாட்டும் குரு அவன்.

அந்தப் பழநிவேலனையும் அவன் கொலுவிருக்கும் பழநி மலையையும், அங்கே முருக வேள்வி தொடங்கியதும், தொடர்வதுமான விஷயங்களை அருணகிரிநாதரின் பாடல்கள் வாயிலாக எளிமையாக இந்தப் புத்தகத்தில் விளக்குகிறார், ஆசிரியர் திருமதி சித்ரா மூர்த்தி.

இந்த பஞ்சாமிர்தத்தைச் சுவைத்துப் பாருங்கள், பழநி வேலவனையே சிந்தையால் சுவைத்து இன்புறுவீர்கள்.

– ஆசிரியர்

என்னுரை

நினைத்தாலே பஞ்சாமிர்தம் போன்று இனிக்கும் பழநி ஆண்டவனை விரும்பித் தொழும் அடியார்கள் எண்ணற்றவர்கள். முருகப் பெருமான், தானே விரும்பிச் சென்றமர்ந்த மலை என்பதாலும் பழநிமலைக்குத் தனிச்சிறப்பு உண்டு. 'அதிசயம் அநேகமுற்ற பழநிமலை மீதுதித்த அழகா' என்பார் அருணகிரியார். பழநித் திருப்புகழில் 'இசைபயில் ஷடாட்சரமதாலே, இகபர சௌபாக்யம் அருள்வாயே' என்று வேண்டுகிறார். "சுப்ரமண்யர், பரம வைராக்யமாக, ஞானியாக, ஆண்டியாக, தண்டபாணியாக இருக்கிறார். அவரே வள்ளி-தேவசேனா சமேதராக, கல்யாண சுப்ரமண்யராகவும் இருக்கிறார். இம்மை - மறுமை இரண்டுக்கும் உதவுபவராகவும் வழிகாட்டுபவராகவும் அவர் இருப்பதையே இவ்விரண்டு கோலங்களும் காட்டுகின்றன. அவரை நாம் எல்லோரும் பக்தி செய்து இக-பர க்ஷேமத்தைப் பெற வேண்டும்" என்பது மஹா பெரியவர் வாக்கு.

பழநி ஆண்டவனைப் பற்றியும், பழநியம்பதி பற்றியும் எழுத முடிவு செய்தபோது அவன் பொழிந்த அருள் மழையில் நனைந்த அனுபவம் வார்த்தைகளில் வடிக்க இயலாது. கட்டுரையை வடிவமைக்க ஆரம்பித்ததும் பழநி பாதயாத்திரை தொடர்பான பல புத்தகங்களைத் தந்துதவிய என் சிறிய தகப்பனார் திரு.ஆர்.சங்கரராமன் அவர்களுடன், என் கணவர் திரு.ஈ.என். மூர்த்தி அவர்களும், சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல், பல இடங்களுக்கும் உடன் வந்து குறிப்பெடுக்க உதவியதை மறக்க முடியாது. பழநி பற்றிய பல அரிய தகவல்களையும் புகைப்படங்களையும் தந்துதவிய இளம் வழக்கறிஞர் திரு.அனிருத் கர்கா, பிரபல சித்தநாதன் விபூதிக்கடை உரிமையாளர் திரு.சிவநேசன், கிடைத்தற்கரிய பழநித் தலபுராண நூலைத் தந்துதவிய முருகனடிமை திரு.எம்.பாலசுப்ரமணியன் ஆகியோரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

1930களில் கரடு முரடான பழநிமலைப் பாதையில் கிருத்திகை தோறும் ஏறிச் சென்று முருகனைப் பூசித்துப் பாடி வந்த முதியவர் சப்பாணிப் பண்டாரம்

அவர்கள், தம் அனுபவங்களைக் கூறக்கேட்டது ஒரு உணர்ச்சிமயமான தருணம். சதாகாலமும் பழநிமலையைத் தரிசிக்கும் விதமாக அவர் தன் தங்கும் அறையை அமைத்துக் கொண்டிருப்பது கண்டு வியந்தேன். பழநி நகரின் பிரபல மருத்துவர் டாக்டர்திரு.எஸ்.சங்கரராமன் (காஞ்சிப் பெரியவரால் 'வைத்ய சேவா ரத்னா' பட்டமளிக்கப்பட்டவர்) அவர்கள் சிவசண்முக குருக்கள் வீட்டிலிருந்த ஒரு சிறு நூலகம் பற்றிய தகவலை அளித்தது நான் பெற்ற பெரும்பேறு என்றே கூறலாம். பழநி பற்றிய ஆதார பூர்வமான ஒரு தகவல் பெட்டகமே அங்கு எனக்காகக் காத்திருந்தது. இதுகாறும் குறிப்பிடப்பட்ட பெருமக்களுக்கும் எனது கட்டுரைத் தொடரை வெளியிட்டு வெகுவாக ஊக்குவித்த 'ஆன்மிகம் பலன்' இதழ் ஆசிரியர் திரு. பிரபுசங்கர் அவர்களுக்கும், தொடரை நூல் வடிவில் வெளிக்கொணரும் சூரியன் பதிப்பகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.


- சித்ரா மூர்த்தி

A1, Limelight,
S14-MG Road,
Sastri Nagar,
Adyar, Chennai - 600020.
Mobile: 9962577577

சமர்ப்பணம்

அருணகிரிநாதரின் திருப்புகழ் முதலான
அரிய நூல்கள் மூலம் எனது ஆன்மிக
நாட்டத்திற்கு வித்திட்ட குருஜிஅமரர்
திரு.ஏ.எஸ்.ராகவன், திருப்புகழ் அடிமைஅமரர்
திரு.எஸ்.நடராஜன் ஆகியோரது கமல
பாதங்களுக்கு...

அதிசயம் அனேகமுற்ற பழநி



"சரண கமலாலயத்தை அரை நிமிஷ நேரமட்டில்
தவமுறை தியான ம் வைக்க அறியாத
ஜட, கசட, மூட, மட்டி பவ வினையிலே ஜனித்த
தமியன் மிடியால் மயக்கம் உறுவேனோ"

-என்று சுவாமி மலையில் நின்று பாடிக் கொண்டிருந்த அருணகிரிநாதரின் மனக்கண் முன் பழநியாண்டவன் தோன்றினான் போலிருக்கிறது, உடனே, "அதிசயம் அனேகமுற்ற பழநிமலை மீதுதித்த அழக! திருவேரகத்தின் முருகோனே..."

- என்று அப்பாடலை நிறைவு செய்கிறார். இதைப் படிக்கும்பொழுது 'பழநி அதிசயங்கள், என்னென்னவாக இருக்கலாம் என்ற கேள்வி எழுவது இயல்பே. அருணகிரிநாதர் காலத்திற்கு முன்னரும், பின்னரும், ஏன் இன்றுவரையிலும் பழநியில்

உற்ற அநேக அதிசயங்கள்தான் என்னென்ன?

முருகப்பெருமானுக்குகந்த வாசஸ்தலங்கள் ஆறு. அவை: திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, சுவாமிமலை, திருத்தணி மற்றும் பழமுதிர்ச்சோலை. இந்த ஆறும் மலைத் தலங்களாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. திருச்செந்தூரும் கடற்கரையில் அமைந்த மலைத்தலமாகவே இருந்தது. சந்தன மலையாக இருந்த பாறைகளைக் குடைந்தே தற்போதைய செந்திலாண்டவர் கோயில் கட்டப்பட்டது. "சந்தனத்தின் பைம்பொழில் தண் செந்திலில் தங்கும் பெருமாளே" "உயர் சந்தனாடவியினும் உறை குறமகள்" என்பது அருணகிரியார் வாக்கு.

முருகனை உல்லாச, நிராகுல, யோக, இத, சல்லாப, விநோத மூர்த்தியாகக் காணும் அருணகிரியார், இவற்றுள் மூன்றாவதான யோக மூர்த்தியாகப் பழநி ஆண்டவனைக் குறிப்பிடுகிறார். மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை எனும் ஆறு ஆதாரங்களுள் மூன்றாவதாக விளங்கும் மணிபூரகத்திற்குரிய திருத்தலம்தான் பழநி என்பார் வாரியார் சுவாமிகள்.

தாழக்கோயில் எனப்படும் திருஆவினன்குடி என்பதே ஊரின் பெயர் என்றும், 'பழநி'யை மலையின் பெயர் என்றும் கூறுவார் உண்டு. பழங்காலத்தில் ஆவியர் குலத்தில் பிறந்த குறுநில மன்னர்கள் இவ்விடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். ஆவியருடைய நல்ல குடி ஆதலின் ஆவிநன்குடி என்று பெயர் வந்ததாகக் கருத்து உண்டு. ஆ(காமதேனு), இனன்(சூரியன்), கு(பூமி) டி(அக்னி) ஆகியோர் பூஜித்தத் தலமாதலால் ஆவினன்குடி என்று அழைக்கப்படுவதாகவும் கூறுவர்.



பழங்காலத்தில் பழநி மலையைப் 'பொதினி' என்றும் அழைத்தனர். ஆவினன்குடியைப் போலவே பொதினியாகிய பெருங்கல்லிலும் முருகன் இருந்து மக்களைக்காத்தான் என்பதற்குரிய குறிப்புகள் சங்ககால நூல்களில் உள்ளன என்கிறார் வாகீச கலாநிதி கி.வா.ஜகன்னாதன் அவர்கள். அது மலைத்


இடும்பன் மலைக் கோயில்

தொடரும் அன்று, சிறு குன்றும் அன்று என்பதால் 'பெருங்கல்' எனப்பட்டது. ஆவினன்குடியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த கடையேழு வள்ளல்களுள் ஒருவனான பேகனை, 'பெருங்கல் நாடன் பேகன்' என்று பாடுகிறார் புலவர் பெருஞ்சித்திரனார். அதன் உச்சியிலே அருந்திறற் கடவுள் நின்று காக்கிறது என்று கூறப்படுவதால் அது பழநியைக் குறிப்பதாகவே கொள்ளலாம்.

பழநி எனும் பெயரைக் கேட்டதுமே விபூதி, பஞ்சாமிர்தம், மலையின் மலைக்க வைக்கும் அழகு, வேலாண்டியாக ஞான தண்டத்துடன் மேற்கு திசை நோக்கிக் குடிகொண்டிருக்கும் பழநி ஆண்டவன், விநாயகருக்கும், முருகனுக்கும் இடையே நாரதர் நடத்தி வைத்த மாதுளங்கனித் திருவிளையாடல், நவபாஷாணத்தாலான ஒப்பற்ற முருகன் திருவுருவம் எல்லாம் நினைவுக்கு வரும். சித்தன் வாழ்வு, பொதினி, பழனாபுரி, சிவகிரி போன்ற பல பெயர்களை உடையது பழநி. ஊர் பெயரும் மலையின் பெயரும் ஒன்றாக அமைந்த பல திருத்தலங்களுள் ஒன்று இது. பிற உதாரணங்கள்: சுவாமிமலை, திருச்செங்கோடு, சென்னிமலை, திருவண்ணாமலை. பழநியைச் சிறப்பித்து, "காசியின் மீறிய பழநி", "பிரகாசம் பழனாபுரி", "பதினாலுலகோர் புகழ் பழநி" என்றெல்லாம் பாடும் அருணகிரிநாதர், 97 பாடல்களையும் 'திருப்பழநி வகுப்பு' என்ற ஒரு தனித் தொகுப்பையும் பாடியுள்ளார்.

திருமுருகனின் தந்தை இருப்பது கயிலைமலை, திரிபுரம் எரிக்க அவர் எடுத்தது மேருமலை, பார்வதியை அவருக்களித்தது இமயமலை, மாமன் ஆயரைக் காக்க குடையாய்ப் பிடித்தது கோவர்த்தனமலை, அவரது வேல் பிளந்தது கிரௌஞ்சமலை, விரும்பிச் சென்றமர்ந்தது பழநிமலை, தெய்வயானையைத் தந்தது பரங்குன்றம், வள்ளியை அளித்தது வள்ளிமலை – இவ்வாறு சுவைபடக் கூறுகிறார் புலவர். சே.த. ராமலிங்கம் பிள்ளையவர்கள். எனவேதான் 'குறிஞ்சிக் கிழவன்' என்று குவலயம் ஓதுகின்ற முருகப் பெருமானை 'மலைக்கு நாயக', 'சிலோச்சய', 'குறிஞ்சி மகிழ் அயிலா' என்றெல்லாம் அருணகிரியார் விளிக்கிறார் போலும்!

"கோமின் ஐயன் வில் என்பதும் குன்றமே
மாமன் வெண்குடை என்பதும் குன்றமே
நீ மன்னும் தென் நிகேதனம் குன்றமே
பூமின் நின் அயில் போந்ததும் குன்றமே"
– என்று பாடுகிறார் பாம்பன் சுவாமிகள்.

மலைகளின் அழகும் இயற்கை வளமும் நம்மை மலைக்க வைப்பவனவாக உள்ளன. மலைகளில் மூலிகை நிறைந்திருப்பதால் ஓய்வெடுக்கவும், நோய் தீரவும் ஆண்டாண்டு காலமாக மக்கள் மலைத்தலங்களுக்கு விரும்பிச் செல்கிறார்கள். இத்தகு பெருமையுடைய மலைகளை 'கிரிராஜகுமாரிமகன்' விரும்பித் தன் இருப்பிடமாகக் கொள்கிறான் என்பது சாலப் பொருத்தமே.

அருணகிரிநாதருக்கு அதிசயங்கள் அநேகம் காட்டிக் கொடுத்த பழநி மலை எவ்வாறு தோன்றியது?


கயிலை மலையில் நாள்தோறும் சிவபெருமானைக் குறித்துப் பூஜை செய்துவந்தார் அகத்திய முனிவர். அவரைத் தென்னாட்டிலுள்ள பொதிய மலைச்சாரலில் சென்று தவம்புரியுமாறு கூறினார் சிவபெருமான். அகத்தியரது தனிப்பூஜைக்காகத் தமது அம்சமாகிய சிவகிரி, சக்தியின் அம்சமாகிய சக்திகிரி ஆகிய இரு மலைகளை அளித்து, தமிழ்மொழி அறிவையும் வழங்கினார். இறைவனருளால் பந்து போல லேசாகத் தோன்றிய இரு மலைகளையும் சுமந்த வண்ணம் நடக்க ஆரம்பித்தார் அகத்திய முனிவர்.

கேதாரத்தை அடுத்த பூர்ச்சவனத்தை அடைந்ததும் அந்த இரு மலைகளும் கனக்கத் தொடங்கின. தொடர்ந்து அவற்றைச் சுமக்க முடியாததால், அந்த மலைகளை அங்கேயே விட்டுவிட்டுச் சென்றார் அகத்தியர். நெடுந்தொலைவு சென்றபோது எதிரே உயர்ந்த தோற்றமும், பரந்த மார்பும், அசுர உருவமும் கொண்ட ஒருவன், ஒரு பெண்ணுடன் நடந்து வருவதைக் கண்டார். அவனது தோற்றத்துக்குச் சற்றும் பொருந்தாத வகையில் நெற்றியில் பளிச்சென்று திருநீறு துலங்கியது. தன்னைக் கண்டு வணங்கிய அவனிடம், "நீ யாரப்பா?"

இடும்பன் மலை



என்று அன்புடன் வினவினார் அகத்தியர். "என் பெயர் இடும்பன்; இவள் என் மனைவி இடும்பி, நான் சூரபத்மாதியர்களுக்கு வில்லாசிரியனாக விளங்கியவன். முருகப்பெருமானது கருணைக் கோலம் கண்டு அவனது பக்தனாகி இப்புறம் வந்து விட்டேன். அடியேனுக்குத் தாங்கள் இடும் பணி எதுவாக இருந்தாலும் சிரமேற்கொண்டு செய்வேன்" என்று கூறி முனிவரை வணங்கினான் இடும்பன்.


இடும்பனுக்குப் பாலாபிஷேகம்

பூர்ச்சவனத்தில் தாம் விட்டு வந்த மலைகளைச்சுமந்துகொண்டு வரும் பணியைச் செய்யக்கூடிய வல்லமை உடையவன் இவனே என்றெண்ணிய அகத்தியர், நடந்தவற்றை இடும்பனிடம் விவரித்தார். பூர்ச்சவனம் செல்லும் வழியை விளக்கி அத்துடன் 'ஷடாக்ஷர' மந்திரத்தையும் உபதேசித்து அவனை வழியனுப்பி வைத்தார்.

அகத்தியர் காட்டிய பாதையில், கந்தனைக் கருத்திலும் அவன் நாமத்தை நாவிலும் வைத்து மனைவியுடன் பூர்ச்சவனத்தைநோக்கிச் செல்லலானான் இடும்பன். காடும், நதியும், மலையும் கடந்து பூர்ச்சவனம் சென்றடைந்தபோது, இறைவன், இறைவியின் அருளே திரண்டாற்போல் நின்ற சிவகிரி-சக்திகிரி எனும் அப்புண்ணிய மலைகளைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தான் இடும்பன். அவற்றை மனமார வணங்கி மனைவியுடன் வலம் வந்து ஷடாக்ஷர மந்திரத்தை ஜபித்த வண்ணம் இருந்தான். கந்தபிரானருளால் பூமி பிளக்க, அப்பிளவிலிருந்து எட்டு பாம்புகள் தோன்றின. வானத்திலிருந்து பிரம்ம தண்டு ஒன்றும் வந்தது. பாம்புகளைப் பக்கத்திற்கு நாலாகப் பிரித்து உறிபோல் ஆக்கி இரு மலைகளையும் உறியில் வைத்து, பிரம்ம தண்டத்தால் அவற்றை இணைத்தான் இடும்பன். மலைகளைத் தூக்கி, காவடி போல் தோளில் வைத்து நடக்கத் தொடங்கினான். கணவனுக்கு மலைகளின் பாரம் தெரியாமலிருக்க இடும்பியும் இடைவிடாது ஆறெழுத்து மந்திரத்தை ஜெபித்த வண்ணம் அவனைப் பின் தொடர்ந்தாள்.

வெகு தொலைவு சென்றபின், வழி இரண்டாகப் பிரிந்தது கண்டு சற்று மயங்கி நின்றான் இடும்பன். அடியார்க்கு நல்ல

பெருமாளாகிய முருகன், காற்றிலும் கடுகிச் செல்லும் குதிரை மீதேறி வேட்டைக்குச் செல்லும் அரசகுமாரன் போல் வேடந்தாங்கி, இடும்பன் எதிரே வந்தான். இடும்பனுக்குச் சரியான பாதையைக் காட்டிக் கொடுத்தான், பின் மாயமாய் மறைந்தான். இதேபோன்ற ஒரு நிகழ்ச்சி பிற்காலத்தில் அருணகிரிநாதர் வாழ்விலும் நடந்தது. வயலூரிலிருந்து விராலிமலை செல்லும் வழி தெரியாமல் நின்ற அவருக்கு, முருகப்பெருமான் வேடன் உருவில் வந்து வழிகாட்டிப் பின் மறைந்து போனான். இந்நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து,

"வாதனை தவிர்த்த குருநாதனும், வெளிப்பட மகா
அடவியில் நிற்பதோர் சகாயக்காரனும்"
திருவேளைக்காரன் வகுப்பு
– என்றார் அவர்.

இடும்பனும், வந்தவன் முருகன் என்றுணராமல் இளவரசன் காட்டிய பாதையில் நடந்தான். தொடர்ந்து செல்லமுடியாதபடி, பசியும், பாரமும் அவனைத் தளர்த்தின. மலைகளை ஓரிடத்தில் இறக்கி வைத்துவிட்டு, மனைவி பறித்து வந்த கனிகளை உண்டு இளைப்பாறினான். இடும்பி, அந்த மலைச்சாரலின் அழகை அனுபவித்த வண்ணம் சற்று தொலைவு தனியாக நடந்து சென்றாள். உறங்கிக் கண் விழித்த இடும்பன், 'முனிவர் காத்திருப்பாரே, காலதாமதம் ஆகிவிட்டதே' என்று எண்ணி பரபரப்புடன் எழுந்தான். மலைகளைத் தூக்க முயன்றான். அவை முன்பைவிட அதிகமாகக் கனத்தன. மலைகளை உற்றுப் பார்த்தபோது, சிவகிரி மேல் ஒரு புதிய குராமரம் தெரிவதைக் கண்டான். அது மட்டுமா, அந்த மரத்தடியில்,

"பிடர்பு இழந்த புன் குஞ்சியும், பெருகிய
கருணைக்கடல் அலம்பு கண்களும், கவின் ஒழுகிய
முகமும், வடிவு நூல் மார்பும், கை ஒண் கோலும்
வயங்க நெடிய கோவண உடையுடன்"

ஒரு சிறுவன் மரத்தடியில் நிற்கக் கண்டான். (பாலசுப்ரமண்யக் கவிராயரின் பழநித் திருத்தல புராணம்)

இடும்பன் சிறுவனை நோக்கி, "சிறுவ! நீ ஏன் இங்கு தனியாக நிற்கிறாய்? வழி தவறி வந்துவிட்டாயோ?" என்று கேட்டான். பதில் ஏதும் கூறாமல் புன்னகை பூத்த சிறுவன் மீது கோபம்கொண்டான் இடும்பன். அசுரகுணம் தலைதூக்கியது. "சிறுவ! நீ இம்மலையை விட்டு இறங்கு; நான் ஒரு கொலைகாரன்; நினைவிருக்கட்டும்; என்று கர்ஜித்தான். "ஒரு பெரிய மலையைத் தூக்கும் வலிமை உடைய உனக்கு நான் ஒரு பாரமா? முடியுமானால் என்னையும் சேர்த்துத் தூக்கு" என்று புன்முறுவலுடன் கூறிய சிறுவன் மேல் திடீரென்று பாய்ந்தான் இடும்பன். அடுத்த வினாடியே பெரிய அலறலுடன் கீழே விழுந்து மாண்டான். இடும்பனின் அலறலைக் கேட்டு ஓடி



வந்தாள் இடும்பி. கணவனின் கோலம் கண்டு கதறி அழுதாள். அவள் கண்களுக்குக் குரா வடிவேலன் காட்சியளித்தான். தன் கணவன் அறியாமல் செய்த குற்றத்தை மன்னித்தருளி அவனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்குமாறு வேண்டி நின்றாள். சற்று நேரத்தில் இடும்பனும் கண் விழித்து எழுந்தான். குராவடிக் குமரனிடம் பிழை பொறுத்தருளுமாறு வேண்டினான். இடும்பனை நோக்கி குகன் கூறினான்: "இம்மலை இங்கேயே இருக்கட்டும். இதில் நான் விரும்பி அமர்வேன். என்னுடன் நீயும் தங்குவாயாக! என்னைக் காண வரும் பக்தர்களும் தங்கள் நிவேதனப் பொருட்களைக் காவடி கட்டி சுமந்துகொண்டு வந்து உன்னைத் தரிசித்தபின் என்னைக் காண வரவேண்டும்" என்று ஆசி கூறினான்.

இதற்குள் பிரம்ம தண்டமும் பாம்புகளும் அகத்தியரிடம் செய்தியைத் தெரிவிக்க, உடனே அங்கு வந்த அகத்தியர் முருகவேளை வணங்கி "நீ எழுந்தருள விருப்பமுடையதாயின் இம்மலை இங்கேயே இருக்கட்டும்" என்று கூறினார். இதையே அருணகிரிநாதர்,

"பரகிரி உலாவு, செந்தி மலையினுடனே, இடும்பன்
பழநிதனிலே இருந்த குமரேசா"

- என்று கதிர்காமத்தில் பாடுகிறார்.

பழநியில் சிவகிரியும் சக்திகிரியும் அடுத்தடுத்து இருந்தாலும் முருகப்பெருமான் சிவகிரி மீதமர்ந்து இடும்பனுக்கு அருள்புரிந்தமையால் அச்சிறப்புப் பெயரே மலைக்கு வழங்கலாயிற்று.

"பழநிச் சிவகிரி மீதினில் வளர் பெருமாள்" *(கலக்கயல் திருப்புகழ்)*;

"அருள்சேர் பழநிச் சிவகிரி வாழ் ஐயா வருக வருகவே" *(பழநிப் பிள்ளைத்தமிழ்)*; "பழநிச் சிவகிரிதனிலுறை கந்தப் பெருமாளே" *(புடவிக்கணி திருப்புகழ்)*

இவை தவிரவும் அத்வைத சாஸ்திரத்தின் சாரத்தைப் பிழிந்து கொடுக்கும் 'குககிதை' என்றநூல், அகஸ்தியரின் வேண்டுகோளின்படி 'குகனே பிக்ஷு வடிவில் வந்து இடும்பனுக்கு உபதேசித்தான்' என்கிறது. இவ்வரிய உபதேசம் பெற்ற இடும்பன், ஷண்முகனைப் பரமேஸ்வர ரூபம் காட்டி அருள வேண்டிய போது, யுத்தகளத்தில் சூரனுக்கும் வீரவாகுவிற்கும் காட்டிய விசுவரூப தரிசனத்தை இடும்பனுக்கும் காட்டியருளினான் என்ற குறிப்பு அந்நூலில் வருகிறது. இவ்வாறு இடும்பனைத் தடுத்தாட்கொண்ட குராவடி வேலவனையும், இடும்பனையும் பழநிமலைப் படிகளில் ஏறிச் செல்லும்போது காணலாம். பெரும்பான்மையான முருகன் கோயில்களில் தனி இடும்பன் சந்நதியைக் காண்கிறோம். பழநியில் இடும்பனுக்கு, கள்ளும் சுருட்டும் நைவேத்தியம் செய்வதாகக் கேள்விப்படுகிறோம். அசுரனாயிற்றே, அதனால்தான் போலிருக்கிறது!



எல்லாம் சிவத்துள்; சிவத்துக்குள் எல்லாம்!



அருணை முனிவருக்கு அதிசயம் அனேகம் காட்டிய அழகிய பழநிக்கு, அதற்குரிய பெயரும் அதிசயிக்கும் வண்ணம்தான் அமைந்தது.

பழநி என்றதுமே நாரதரின் மாதுளங்கனித் திருவிளையாடல்தான் நினைவுக்கு வரும். “தெய்வம், குரவன், அரசன், திருமுன்பு செல்வோர் மெய்வந்த அன்னார் அருள் வேண்டி விரும்பியதே தேனும் கைவந்த பெற்றுச் செலீர் கண்தவர்” என்ற குசேலோபாக்கியான வாக்கின்படி, நாரதரின் மகதி யாழின் கீதத்தைக் கேட்டு மகிழ்ந்து பிரம்மதேவர் அவருக்குத் தந்த மாதுளங்கனியை சிவனுக்குக் காணிக்கையாக எடுத்துக்

சித்ரா மூர்த்தி

கொண்டு கயிலை சென்றார். (இக்கனியை மாங்கனி என்று கூறுவோரும் உண்டு.)

"உவகாரி, அன்பர்பணி கலியாணி, எந்தை இடம்
உறை நாயகம் கவுரி சிவகாமி
ஒளிராளையின் கரமில் மகிழ் மாதுளங்கனியை
ஒரு நாள் பகிர்ந்த உமை அருள்பாலா"

- என்று திருப்புகழிலும்,

"முண்டகச் சது மறையவன் முடி முறை துளக்கி
வண்டிருக்கையி லிருந்த மாதுளங்கனி ஒன்றைப்
பண்டு நல்கினன் பரமனுக் கென்றனன் பதுமத்
தண்டர் கோனுநங் கருத்தும் அற்றே என அறைந்தான்"

- என்று பழநிப் புராணம் திருஆவினன்குடிச் சருக்கத்திலும் குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து சிவபெருமானுக்குத் தரப்பட்டது மாதுளங்கனியே என்பது புலனாகிறது.

ஞானம் ஞானத்தையே விரும்பும் என்பதால் ஞான தொப்பை அப்பனும், ஞான பண்டித சாமியும் அந்த ஞானக் கனியையே விரும்பினர்.

"அடியார்கள் கருதா வகைக்கு வரம் அருள் ஞான தொப்பை"
('இரு நோய்' திருப்புகழ்)

"ஞான பண்டித சாமி நமோ நம"

('நாத விந்து' திருப்புகழ்)

ஆனால், சிவபெருமானோ அகில உலகங்களையெல்லாம் நொடிப்பொழுதில் வலம் செய்பவருக்கே இக்கனி வழங்கப்படும் என்று ஒரு போட்டியை அறிவித்தார். குமரன் கோலமயில் மீது ஏறி உலகை வலம் வந்தான். அதற்குள் 'அம்மையப்பருள் அகில உலகமும் அடக்கம்' என்று கூறி விநாயகர் அம்மையப்பனை வலம் வந்து கனியைப் பெற்றுக்கொண்டு போய்விட்டார். உலகை நொடியளவில் வலம் வந்த முருகப்பெருமான் அண்ணன் கையில் கனியைக் கண்டதும் கோபமுற்று சிவகிரி மீது ஏறி நின்றான்.

இந்நிகழ்வை அருணகிரிநாதர்,

"படியில் பெருமித தகவுயர் செம்பொற்கிரியைத் தனிவலம் வர,
அரன் அந்தப் பலனைக் கரிமுகன் வசமருளும் பொற்பதனாலே
பரன் வெட்கிட உளம் மிகவும் வெகுண்டு, அக்கனியைத்
தரவிலையென அருள் செந்திற்
பழநிச் சிவகிரிதனிலுறை கந்தப் பெருமாளே"

- என்று பழநியிலும்,

"இனிய கனி கடலை பயறொடியல் பொரி அமுது செயும்
இலகு வெகு கட விகட தடபார மேருவுடன்
இகலி முது திகிரி கிரி நெரிய வளை கடல் கதற
எழுபுவியை ஒரு நொடியில் வலமாக ஓடுவதும்"



– என்று சீர்பாத வகுப்பிலும் பாடுகிறார்.

பழ நிமலனும் பழ நிமலையும் குழந்தையைத் தேடி சிவகிரி வந்து சமாதானம் செய்தனர். "நீயே ஒரு ஞானப்பழமாயிற்றே! உன்னையே விநாயகனிடம் கொடுத்தோம் பழம் நீ" என்று கூறியதால் சிவகிரி, பழநி என அழைக்கப்படலாயிற்று. (உருபியல் சூத்திர முறைப்படி 'ம்' எனும் மெய்யெழுத்து மங்கி "நீ" என்பது "நி"யாகக் குறுகியது.)

இத் திருவிளையாடலின் உட்கருத்து உணரத்தக்கது. விநாயகர் நினைத்தால் நொடியில் உலகை வலம் வந்திருக்க முடியாதா? அம்மையப்பருள் உலகமே அடக்கம் என்று முருகப்பெருமானுக்குத் தெரியாதா? நாரதரும், அம்மையப்பரும் நிகழ்த்திய மாதுளங்கனித் திருவிளையாடலின் உட்கருத்து என்ன? இந்நாடகம், நமக்களிக்கப்பட்ட ஓர் அருளுபதேசம் எனலாம். கனியைத் தரவில்லையென்று கோபித்தவன் போன்று, கயிலையினின்றும் நீங்கி, தென்னாட்டிலுள்ள திருஆவினன்குடியில் ஓங்கி உயர்ந்து நின்ற சிவகிரி மீது எழுந்தருளினான் சிவகுமரன். அவனைப் பின் தொடர்ந்து அம்மையப்பனும் அம்மலைக்கு வந்ததால் அம்மலை மேலும் மேன்மை உடையதாயிற்று. சிவத்திற்கு இரு தன்மைகள் உண்டு:

1. எல்லாம் சிவத்துள் ஒடுங்கியிருக்கிறது;
2. எல்லாவற்றிற்குள்ளும் சிவம் தங்கியிருக்கிறது.

அம்மையப்பருள் பிரபஞ்சமே அடக்கம் என்பதை நமக்கு எளிதாகப் புரியவைக்க, விநாயகர் பெற்றோரை வலம் வந்தார். புவனத்தில் பார்க்கும் இடந்தோறும் அம்மையப்பரே நீக்கமற நிறைந்திருக்கின்றனர் எனும் உண்மையை உலகோருக்கு உணர்த்த, முருகப்பெருமான் பிரணவ மயிலில் ஏறி நொடியளவில் உலகைச் சுற்றி வந்தார்.

"வடவரையின் முகடு அதிர ஒரு நொடியில்
வலம் வரு மரகத மயில் வீரா!" ('கடலைபொரி' திருப்புகழ்)
"பார்திசை வான முற்றும் பரியென நடாத்த லுற்றான்
மேருத் தடவரை இடிய கலாபம் வீசி ஏகிற்றுத் தோகை மஞ்ஞை"
(கந்தபுராணம்)

"அங்கிங்கெனாதபடி எங்கும்" எனும் தாயுமானவர் வாக்கை இங்கு நினைவுகூரலாம். அண்ணன், சிவத்துள் அனைத்தையும் கண்டார்; தம்பியோ அனைத்துக்குள்ளும் சிவத்தைத் தரிசித்தார் எனும் பேருண்மையை இந்நாடகம் நமக்கு விளக்குகிறது.

அம்மையப்பர் முருகப்பெருமானை நோக்கி, 'பழம் நீ' என்று கூறியதன் உட்பொருளையும் உணர்ந்து அனுபவிக்கலாம். சரியை, கிரியை, யோகம் எனும் மூன்று படிகளைக் கடந்தே ஞானம் எனும் உச்சியை அடைய வேண்டும். அரும்பைப் போன்றது சரியை. உதாரணமாக, கோயிலுக்குச் சென்று வழிபடுதல், கோயில் வளாகத்தைத் தூய்மையாக்குதல் போன்ற செயல்கள். மொட்டாக வந்து மலர்தலை ஒத்தது கிரியை. அதாவது, முறையாக மந்திரோ பதேசம் பெற்று உருவ வழிபாடு செய்தல். காயைப் போன்றது யோகம். இது மானசீக அல்லது அருவ வழிபாடு செய்வதைக் குறிப்பது. எல்லாம் கடந்த பேரின்ப நிலையை அடைவதே ஞானம். காய் கனிந்து பழமாவதைப் போன்றது இது. காயாக இருக்கும்போது மனத்தில் ஆணவமாகிய துவர்ப்பும், கோபமாகிய புளிப்பும் நிறைந்திருக்கும். அதுவே பழமாகும்போது, இனிப்புச் சுவையை மட்டுமே கொண்டதாக விளங்கும். காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியம் எனும் அறுபகைகளற்ற மனமே ஞானத்தை அடையத் தகுதியானது. ஞானப்பழம் ஞானமலையில்தானே கிடைக்கும்! இதை உணர்த்தவே ஞானப்பழமாகிய முருகன், ஞான பண்டிதனாக பழநிமலை மேல் நிற்கிறான். ஒவ்வொருவரும் சரியை, கிரியை, யோகம் எனும் மூன்று படிகளோடு நின்றுவிடாமல், ஞானமாகிய இறுதி நிலையை அடைவதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்பது உள்ளீடு.

ஒருவரைப் பார்க்கும்போது, 'சென்ற காரியம் காயா? பழமா? என்று கேட்கிறோம். பழம் என்பது வெற்றியையும் பூரணத்துவத்தையும் குறிக்கும். "கடைச்சிறியேன் உளம், பூத்துக் காய்த்ததொரு காய்தான் விளக்கமுறப் பழுத்திடுமோ?" என்பது ராமலிங்க அடிகளாரின் ஏக்கம்!

'காசியின் மீறிய பழநி' என்று பாடுகிறார் அருணகிரிநாதர். காசி என்பது ஆக்ஞாஸ்தலம்; புருவ நடுவைக் குறிக்கிறது. அங்கு வீற்றிருப்பவர் சதாசிவமூர்த்தி. அவர் 'பழம் நீ' என்று சுட்டிக்காட்டிய மூர்த்தி, ஞானதண்டாயுதபாணி. ஆக்ஞையில் அமர்ந்த சதாசிவப்பெருமான் 'பழநி' என்று உணர்த்தியதால் பழநி காசியினும் மேம்பட்டது என்று இதற்கு உரை கூறுகிறார் வாரியார்



சுவாமிகள்.

எல்லாம் சிவத்துள்;
சிவத்துக்குள் எல்லாம்!

''கூறுடையாளும், குன்றாக் குணப் பெரும் குன்றும், ஞானப் பேறுடைப் பழ(ம்)நீ யென்னப் பெயரதும் அருளி எங்கள் ஆறுமாமுகவன் வைகும் நகரமும் அன்று தொட்டு வீறு தொல் பழநியென்றே விளம்பின உலக மூன்றும்''

– பழநி தல புராணம்.

ஒருவரது ஊர்ப்பெயரைக் கூறி, அவ்வூருக்கு அப்பெயர் அமைந்த காரணத்தைக் கேட்டால், விதவிதமான விளக்கங்களைக் கூறுவார்கள். ஆனால், பழநி என்றதுமே சிறு குழந்தைகள் கூட அப்பெயர்க் காரணத்தைக் கூறிவிடுவார்கள். அம்மையப்பரது திருவாக்கினின்றும் தோன்றிய ஒரே காரணத்தால் மலைப் பெயராகிய 'பழநி' என்பது ஊரின் பெயராகவே நிலைத்துவிட்டது. பழநி எனும் ஊர்ப்பெயரை பழனி என்று எழுதும் வழக்கமும் நடைமுறையில் உள்ளது.

'பழனம்' எனும் சொல் வயல்களைக் குறிக்கும். வயல்வளம் நிறைந்த ஊராக இருப்பதனால் 'பழனி' என்று கூறும் வழக்கம் உண்டாயிருக்கலாம்.

"பழனம் உழவர் கொழுவில் எழுது
பழைய பழநி அமர்வோனே"
('கரிய பெரிய' திருப்புகழ்)
"பழன வயல்கள் கமுகு கதலி பனசை உலவ
பழநி மருவு பெருமாளே" (பனசை – பலா)

– என்று பாடுகிறார் அருணகிரிநாதர். அவர் பாடிய திருப்பழநி வகுப்பிலும், பழனியின் வயல்வளம் விரிவாகப் பாடப்பட்டுள்ளது.

"செந்தளிரை முந்துபடம் என்றுள மருண்டு நிறை
சந்தன வனம் குலவு மந்தி குதி கொண்டயல்
செறிந்த கமுகின் புடை பதுங்கிட வளைந்து நிமிர் மடல்சாடவே
சிந்திய அரம்பை பலவின் கனியில் வந்து விழ
மென்கனி உடைந்த சுளை விண்ட நறை கொண்டு சிறு
செண்பக வனங்கள் வளர் தென்பழநியம்பதியின் முருகேசனே"

(செந்தளிரைப் பாம்பின் படம் என்று அஞ்சிய குரங்கு, கமுகின் மடல் மேல் குதிக்க, மடல் தாக்கியதால் வாழை, பலாப்பழத்தின் மேல் விழ, உடைந்த பலாப்பழத்தின் சாற்றில் ஊறி, சிறு செண்பக வனங்கள் வளர்கின்ற பழனியில் வாழும் முருகேசனே!)

சித்ரா மூர்த்தி

பழனி என்பதற்குப் புலவர் சே.த.ராமலிங்கம் பிள்ளை அவர்கள் கூறும் விளக்கம் மிக அருமையானது. "இருவினை ஒப்பு- மலபரிபாகம் பெற்று பக்குவமடையும் ஆன்மாவில், திருவருட்சக்தி பதிவிற்கு ஏற்ற அன்பர்கள் இதயமாகிய வளமான வயல் இடத்தைக் குறிப்பது இதன் தத்துவம் எனலாம். அல்லது பழனியை வழிபடுவோர் இதயங்களெல்லாம் சிவஞான பண்டிதனின் அருள் எனும் பயிர் தழைக்கும் வளமிக்க வயல்களாக மாறும் என்றும் கொள்ளலாம் என்பது அவர் கருத்து.

பழநியின் ஒரு பழைய பெயர் 'சித்தன் வாழ்வு' என்பதாகும். பழநிக்கு இப்பெயர் உண்டென்பது திருமுருகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையினால் தெரியவருகிறது. பழநியைச் சுற்றிய மலைச்சாரல்களில் ஏராளமான சித்தர்கள் வசித்துவந்த காரணத்தினாலும் இப்பெயர் உண்டாகியிருக்கலாம்.

"நல்லம்பர் நல்ல குடியுடைத்து சித்தன் வாழ்வு இல்லந்தொறு மூன்று எரியுடைத்து..." என்பது ஔவையாரின் பாடல். பழநியில் அந்தணர்கள் வேத வித்துக்களாய் விளங்கி வீடுதோறும், ஆகவனீயம், தாட்சணாக்கியம், காருகபத்யம் என்ற தீ மூன்று வளர்த்தனர் என்பது பொருள். சித்தன் என்பது முருகனின் நாமங்களுள் ஒன்று என்று நச்சினார்க்கினியார் கூறுகிறார். மேலும் ஸ்ரீசுப்ரமண்ய ஸஹஸ்ரநாமாவளியின் 898ம் நாமம் 'ஓம் சித்தாய நம:' என்பதாம்.

முருகனது பரம்பரையும் சித்தர் பரம்பரை என்றே கூறலாம். அவனது தந்தையார் சோமசுந்தரர் மதுரையில் சித்தராக வந்து ஏழைகளின் வீடுகளில் பொன்னும் தானியமுமாக நிரப்பினார். மக்கள் உடற்பிணிகளை நீக்கினார். பாண்டிய மன்னன் அவர் நிஜமான சித்தர்தானா என்றறியச் சோதனை செய்த போது, கல் யானையைக் கரும்பு தின்ன வைத்தார். இதேபோன்று, திருப்பூவனமென்ற தலத்தில், ஹேமநாதை என்ற நர்த்தகிக்காக ரசவாதம் செய்து வீட்டிலிருக்கும் இரும்பு, செம்பு, வெள்ளி இவற்றை உருக்கி, பொன்னாக மாற்றி, அவள் விருப்பப்படி உற்சவமூர்த்தி செய்ய உதவினார். எனவேதான் "சிலமேத்திய சித்தப்பிரசித்தரான அருணகிரிநாதர் பழநிப் பாடலொன்றில் 'முக்கண்



சித்தருக்குப் புத்திர" என்று முருகனைப் பாடுகிறார். பெருமை வாய்ந்த சித்தரின் புத்திரரான முருகனும் பெரும் சித்தன்தான்!

மேலும், "செச்சை உலாவு பதத்தினர் மெய்த்தவர் வாழ்வு பெறத்தகு சித்த விசாக"! என்றும், "வெற்றியுள்ள குறவர்கள் பெற்ற கொடிக்கு மிக்க மகிழ் வித்தக சித்த" என்றும் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கவை.

இந்திரியங்களை வென்ற சித்தர்களின் சித்தத்தில் உறைபவனும் முருகப்பெருமானே எனவும் கூறலாம்.

அடுத்து பழநித் திருநாமத்தின் மகிமையைக் காணலாம்.



பாதயாத்திரையின்போது முருகனே பக்தரைக் காண வருவான்!



நூற்றியெட்டு செய்யுட்கள் அடங்கிய கந்தர் அலங்கார நூலில் அருணகிரிநாதர், ஊர்ப்பெயரையே திருநாமமாக வைத்து வழிபட்டிருப்பது பழநியை மட்டுமே.

கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் பழநிமலையைத் தொலைவிலிருந்து கண்டதுமே புளகாங்கிதம் அடைகிறார்; கூடவே வருத்தமும் மேலிடுகிறது.

"ஒரு பொழுதும் இரு சரண நேசத்தே வைத்துணரேனே
உனது பழநி மலையெனும் ஊரைச் சேவித்தறியேனே"

- என்று வருந்துகிறார்.

மற்றொரு பாடலில்,

பரமமய, சோதிச் சிவமயமா நின்
பழநி தனில் போய் உற்பவ வினைவிள, கன்சேர் வெட்சி
குரவு பயில் நற்றாள் பற்றுவதொரு நாளே"

– என்று இறைஞ்சுகிறார்.

பின், தன் மனத்தை முன்னிலைப்படுத்திப் பாடுகிறார்:

"படிக்கின்றிலை பழநித் திருநாமம்; படிப்பவர்தாள்
முடிக்கின்றிலை; முருகா என்கிலை; முசியாமல் இட்டு
மிடிக்கின்றிலை; பரமானந்தம் மேற்கொள விம்மி விம்மி
நடிக்கின்றிலை; நெஞ்சமே! தஞ்சம் ஏது நமக்கு இனியே!"

– (கந்தர் அலங்காரம் எண்: 75)

"மனமே! பழநித் திருநாமத்தைத் திரும்பத் திரும்பக் கூறினாய் இல்லை. அவ்வாறு ஓதுபவர்களின் பாதங்களைச் சென்னியில் சூடினாய் இல்லை. முருகா என்று சொல்லவில்லை; வறியோர்க்குத் தளராமல் தானம் செய்ததில்லை; பரமானந்தம் அடைய அவன் நாமத்தை ஜெபிக்கும்போது துளிர்க்கும் கண்ணீரால் அபிஷேகம் செய்தாய் இல்லை; நெஞ்சமே! மரணம் என்று ஒன்று வரும்போது நமக்குத் தஞ்சமளிக்க எவரும் இருக்க மாட்டார்கள் என்பதை உணர்வாயாக!"

– என்று உருகுகிறார்.

கந்தர் அந்தாதியில், "செல், வந்தி – கழுமலம் நெஞ்சமே" (கழுமலம் = சீகாழிப்பதி) என்கிறார் அருணகிரியார். மற்றொரு செய்யுளில், "உவா இனன் குடி, வானார் பரங்குன்று, சீரலைவாய், திரு ஆவினன்குடி, ஏரகம், குன்று தோறாடல், சென்று அதிர் உவா இனன் குடிகொண்ட தண்கார்வரை செப்பு" என்றும் பாடுகிறார்.

("இளையோனாம் முருகன் எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றம், செந்தூர், ஆவினன்குடி, ஏரகம், குன்று தோறாடல், பழமுதிர்சோலை ஆகிய தலங்களைக் கூறித் துதியுங்கள்.")

'சுருதிமுடி மோனம்' எனத்துவங்கும் திருப்புகழில் அருணகிரியார், "பணியும் அடியார் சிந்தை மெய்ப்பொருளதாக நவில் சரவணபவா ஒன்று வற்கரமுமாகி வளர் பழநிமலை மேல் நின்ற சுப்ரமண்யா!" என்று முருகனை விளிக்கிறார். "பணிகின்ற அடியார், தமது உள்ளத்தில் மெய்ப்பொருளாகக் கருதிப் போற்றும் 'சரவணபவா' எனும் ஆறெழுத்துகள் பொருந்திய வலிய பேரொளியாகி வளர்கின்ற பழநிமலை' என்பது இதன் பொருள். பழநிமலை ஷடாக்ஷர மலையாகும். ஆதலால் ஷடாக்ஷரத்தை ஓதும் பலன், 'பழநி' எனும் திருநாமத்தை ஓதுவதாலேயே கிட்டிவிடும் என்று கொள்ளலாம். எனவேதான் நெஞ்சை விளித்து 'படிக்கின்றிலை பழநித் திருநாமம்' என்று சாடுகிறார் அருணகிரிநாதர்.

தமிழ்க்கடவுளான முருகப்பெருமான், தண்டாயுதபாணியாக பழநி மலையிலும், குழந்தை வேலாயுதனாகத் திருஆவினன் குடியிலும்,

வள்ளி-தெய்வானையுடன் இணைந்த முத்துக் குமரனாகப் பெரியநாயகியம்மன் கோயிலிலும் காட்சி அளிக்கும் தனி அழகைப் பழநியில்தான் கண்டுகளிக்கலாம். பழநி யின் மேற்குப் பாகத்தில் குடிகொண்டிருக்கும் பெரிய நாயகி அம்மையையும் அருணகிரியார் பழநித் திருப்புகழில் துதிக்கிறார்:

"பறைகள் பேணிய ருத்ரி, கரிய கார் அளகத்தி
பரமர் பாலுறை சத்தி எமதாயி
பழைய பார்வதி கொற்றி பெரிய நாயகி பெற்ற
பழநி மாமலையுறை பெருமாளே"

– ('அறமிலா' திருப்புகழ்)

'குழலடவி' எனத்துவங்கும் பாடலில், 'பழநி மலைவரு பழநிமலை தரு பழ நிமலை முருக விசாக' எனும் வரிகளை, 'பழநி மலைவரு பழநிமலை தரு பழநிமலை முருக விசாகா' எனப் பொருளுணர்ந்து பிரித்துப் பாடும் இன்பமே தனிதான்.

(பழநி = கனி போன்றவன். மலைவரு பழ நிமலை தரு = மலையில் அவதரித்தவளும் மூத்தவளும், மலமற்றவளும் ஆகிய உமை பெற்றருளிய பழநிமலை முருக - பழநிமலையில் வாழும் முருகப்பெருமானே) பொள்ளாச்சி - பழநி சாலையில் சண்முக நதிப் பாலத்தைக் கடக்கும்போதே மனம் உற்சாகமுற்றுப் பழநி ஆண்டியைத் தரிசிக்கத் தயாராகிவிடுகிறது. சண்முக நதி எனும் இந்த ஆறானது, பாலாறு, வரத்தாறு, பொருந்தலாறு, சுருளியாறு, கல்லாறு, பச்சையாறு எனும் ஆறு சிற்றாறுகள் கூடிப் பெருக்கம் பெற்று ஏற்படுவதாகும்.



"ஆறு முகமான பொருள் நீ அருளல் வேண்டும்" எனும் பாடல் வரிகளை நினைவூட்டுவதாக ஓடுகிறது சண்முகநதி. மலை மீதுள்ள ஆண்டிக்கு சண்முகநதியுள் கலக்கும் வரத்தாற்றிலிருந்துதான் தொன்று தொட்டு வரும் வழக்கப்படி புனிதநீர் கொண்டுவரப்படுகிறது. சண்முகநதிக் கரையிலே சுந்தர விநாயகருக்கும் தட்சிணாமூர்த்திக்கும் அழகிய சிறு கோயில்கள் உள்ளன. இவற்றுள்ளே ஆறு யானை முகங்களை ஒருங்கே உடைய சண்முக விநாயகர் திருமேனி காணத்தக்கது.

பழநி என்றதுமே நமக்கு நினைவுக்கு வருவது, பக்தர்களின் பாதயாத்திரை. பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வரும் பழநிப் பாத யாத்திரை எங்கே, எவ்வாறு துவங்கியது?

பக்தர்கள் பாவடியிலும் காவடியிலும் மகிழ்ச்சி கொள்ளும் முருகப் பெருமானுக்குத் தலைமுறை தலைமுறையாகத் தொண்டு செய்து வருபவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள். தமிழகத்திலும், தாம் சென்று குடியேறிய நாடுகளிலும் நகரத்தார் செய்த திருப்பணிகள் பல. இவற்றுள் மிகப்பழமையானது அவர்கள் சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன் பழநியில் செய்த இறைப்பணியே எனலாம். கடல் கடந்து வாணிபம் செய்த நகரத்தார்கள், ("செட்டிக் கப்பலுக்குச் செந்தூரான் துணை" என்பது ஒரு பழமொழி) பாண்டிய நாட்டிற்குக் குடிபெயர்ந்தபின் உள்நாட்டு வாணிபம் செய்யத் தொடங்கினர். வாணிபத்தில் வந்த லாபத்தில் ஒரு பங்கைத் தண்டபாணிக்கு எடுத்து வைத்து அத்தொகை பெருகியதும் அதை வைத்துத் திருப்பணிகள் செய்தனர். அவர்கள் பெருமையைக் கூறும் எட்டு அறப்பட்டயங்கள் கி.பி. 1600 முதல் 1805 வரையுள்ள காலத்தில் எழுதப்பட்டுள்ளன என்கிறார் பேராசிரியர் சொ.மீ. சுந்தரம். இவற்றுள் முதலில் குறிப்பிடப்பட்ட பழநிகோயில் நடப்பு அட்டவணையில் பாதயாத்திரை வரலாறு விளக்கமாகத் தரப்பட்டுள்ளது.

இளையாத்தங்குடி ஏழு நகரத்தார்களில், நேமங்கோயிலைச் சேர்ந்த குமரப்பன் என்பவர் பழநி ஆண்டியைத் தரிசிக்கவும், பழநியில் உப்பு வியாபாரம் செய்யவும் எண்ணங்கொண்டு, தான் ஒரு உப்புக் கடகத்தைத் தூக்கிக்கொண்டு, மரவன் தேவன் தலைமையில் பத்துக் கடகம் தூக்கி வரச்சொல்லி, சுப்ரமண்ய வேளாண் என்பவனைச் 'சோறு வடிக்க' கூட்டிக்கொண்டு பழநிக்கு நடைபயணமாகச் சென்றார். ஆவணி மூலவீதியில், தெய்வநாயக பண்டாரத்தின் மனையில் வந்திறங்கி, உப்பு வியாபாரம் தொடங்கி, ஒரு பணம் லாபம் கிடைத்தால் 1/8 பணத்தை அறப்பணிகளுக்காக எடுத்து வைத்தார். தெய்வநாயக பண்டாரத்தின் மனைவி பார்வதி அம்மாள் 'சோறு வடித்துப்' போட, பரதேசிகளும் சோறுண்டு மகிழ்ந்தனர். பண்டாரம், அவர்களுக்கு மலையில் வழிபாடு செய்து

வைத்தார். (போக மாமுனிவரின் சீடர் புலிப்பாணி பாத்திர உடையாருடைய சீடர்களாய், சைவ மரபில் வந்தவர்கள் பண்டாரங்கள்; வரத்தாறிலிருந்து மலைமேலுள்ள ஆண்டவனுக்குத் திருமஞ்சன நீர் கொண்டு வருவது போன்ற பல திருத்தொண்டு புரிபவர்கள்) பண்டாரத்திற்கு ஒரு பணமும், பார்வதி அம்மாளுக்கு ஒரு பணமும் கொடுத்து அடுத்த மாதம் வருவதாகச் சொல்லி குமரப்பன் ஊர் திரும்பினார். தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் வியாபாரம் நடைபெற்றது.

விரைவிலேயே பெரும் செல்வம் திரண்டது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு கலாமடம் ஈசானிய சிவாச்சாரியரின் வேண்டுகோளின்படி, குமரப்பன் காவடி கட்டி எடுத்துக்கொண்டு நடந்து வந்து பழநியை அடைந்தார். இவ்வாறு ஒருசிலரோடு துவங்கிய பாதயாத்திரை இன்று நகரத்தார் அல்லாதவரும் பங்கு பெறுகின்ற பெரும் விழாவாக மாறிவிட்டது. குமரப்ப செட்டியார் தன்னுடன் விபூதிப் பையை மட்டும் கொண்டு வந்தார். பின்னர் காவடியும், ரத்தினவேலும் சேர்ந்து கொண்டன. கண்டனூர் குட்டையன் மேல் முருகன் 'அருள்'வர அவர் 'அருளாடியார்' என்றழைக்கப்பட்டார். அருள்வாக்கு கூறிவந்த அவர், களைத்தவர்களுக்கு விபூதி இட்டு, அவர்கள் களைப்பை நீக்கவும் உதவினார்.

இன்றளவும் 'அருளாடியாராக' வருபவர் எடுத்துவரும் ரத்தினவேல், 170 ஆண்டுகளுக்கு முன், பாதயாத்திரைக் குழுவினருக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டதாகும். அன்னதான கல் மண்டபம் கட்டுவதற்கான பணி தடைப்பட்டபோது முருகனே அதை நீக்கி பணியை முடிக்க உதவினான் என்று ஒரு பட்டயம் கூறுகிறது. மண்டபத்திற்குக் கல் திருப்பணி செய்தவர் பரம்பரையில் வந்தவர்களுக்கு இன்றளவும் தனி மரியாதை அளிக்கப்படுகிறது.

பழநிப் பாதயாத்திரையின்போது செம்மடைப்பட்டி என்ற ஊரில் வெள்ளி ஊஞ்சல் வைக்கப்பட்டு புனிதமான ரத்தினவேல் இருக்கும் விபூதிப் பையையும், அதன் பின்னால் ஒரு பெரிய வேலினையும் அலங்கரித்து வைத்து, பக்தர்கள் அனைவரும் பாடிய வண்ணம் ஊஞ்சலை ஆட்டி மகிழ்வார்கள். பல இடங்களில் காவடிப் பூஜையும், வேல் பூஜையும் நடத்தப்பட்டு அன்னதானமும் செய்யப்படுகிறது. குழந்தை வேலன் கோயிலில் நேர்த்திக்கடனாக செலுத்தப்படும் மிட்டாய்கள் அன்பர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

பழநி ஆண்டவன் மேற்கு நோக்கி நிற்பதாலேயே அத்திசையிலுள்ள கேரளம், நீர் நிலவளம் நிரம்பியதாகத் திகழ்கிறது என்று ஒரு பரவலான கருத்து உண்டு. தைப்பூசத்தின்போது கேரளத்திலிருந்து ஏராளமான மக்கள் காவடி எடுத்துக்கொண்டு பழநிக்கு நடந்து வருவதைக் காணலாம். "தைப்பூயக் காவடி ஆட்டம், தங்க மயில் பீலியாட்டம், மனசிலே அம்பலத்தின் தேரோட்டம்" போன்று



காவடிக்குறிப்புகள் அடங்கிய பாடல்களும் உள்ளன. ஆலப்புழையை அடுத்த ஹரிப்பாடு சுப்ரமண்ய சுவாமி கோயிலில் காவடி ஆட்டத்தில் சுமார் 5000 காவடிகள் பங்கு பெறுகின்றன! வைக்கம் ஊரில் தைப்பூசத்தின்போது பஞ்சா மிர்தக் காவடி, பால் காவடி, விபூதிக் காவடி ஆகியவற்றைக் காணலாம். செங்கன்னூர் எனுமிடத்தில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட காவடிகள் தைப்பூச விழாவில் பங்கு பெறுகின்றன.

அனைத்து ஊர்களிலும் நடக்கும் காவடி ஆட்டத்திற்கும் பாதயாத்திரைகளுக்கும் முன்னோடி பழநிப் பாதயாத்திரையே எனலாம். சபரிமலை யாத்திரை செல்பவர்கள் கட்டாயம் பழநி வந்து பிரார்த்தனை செய்கிறார்கள்.

வாகனங்களில் செல்லும்போது நாம் முருகனைக் காணச் செல்கிறோம். பாதயாத்திரையின்போது முருகனே நம்மைக் காண வந்துவிடுவான் என்பது பல முருகனடியார்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை. இசைப்பிரியனான முருகனுக்குகந்த பாதயாத்திரையில் இசை வழிபாடும் சேர்ந்துகொள்ளும்பொழுது அதன் மகிமை இரட்டிப்பாகிறது.

"திருப்புகழை உரைப்பவர்கள் படிப்பவர்கள் மிடிப்பகைமை செயித்தருளும் இசைப்பிரிய" ('கருப்பு விலில்' திருப்புகழ்) என்று பழநியில் பாடுகிறார் அருணகிரிநாதர். இசையை விரும்பும் முருகன் நாம் பாடும்போது நம்முடன் இருப்பான்; அவனைத் துதித்துப் பாடிய வண்ணம் நடக்கும்போது அவனும் நம்முடனே வருவான். 'தமிழ் பாடி நடந்தால் தாள்வலி என்ன, பிறவித் தாள்வலியும் மறைந்துவிடும்' என்கிறார் ஒரு பக்தர்!

பாதயாத்திரை செய்பவர்களை ஊக்குவிக்கப் பாடப்படும் ஓசையுடன் கூடிய இசையை 'காவடிச்சிந்து' என்பர். நாட்டுப்புறப் பாடல் வகைகளுள் ஒன்று சிந்துப் பாடலாகும். முருகனடியார்கள் காவடி தூக்கிச் செல்லும்போது பாடும் பாடல்கள் இந்த மெட்டில் அமைக்கப்படுகின்றன. நமக்குக் கிடைத்துள்ள காவடிச் சிந்துகள் பல இருந்தும் அவற்றுள் மிகப் பழமையானது திருநெல்வேலி சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் அவர்கள் கழுகுமலை முருகன் மீது பாடிய காவடிச் சிந்துப் பாடல்களேயாம்.

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலம் சிந்து இலக்கியம் பதிப்பிக்கப்பட்டபொழுது, திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகத்திலுள்ள ஏட்டுச் சுவடிகளுள் இருந்த 'பழநி ஆண்டவர் காவடிச் சிந்து" எனும் நூல் அச்சில் பதிப்பிக்கப்பெற்றது. இது சுத்தமடம் முத்துக்கருப்பண்ணன் என்பவர் எழுதிய சிறு நூல். மொத்தம் 11 பாடல்களே உள்ளன. ஆசிரியர், தன்னை அடியவராக அமைத்து, தோகை மயிலை நோக்கி, 'மயிலே! நீ விரைவாகச் சென்று முருகனைக் கூட்டிக்கொண்டு வா' என்று கூறுவதாகவே பாடல்களை அமைத்திருக்கிறார்.

'உள்ளம் உருகுதையா முருகையா' என்ற காலத்தாலும் அழியாத பாடலைஎழுதிநம்உள்ளங்களைக்கொள்ளைகொண்ட ஆண்டவன் பிச்சை அம்மா அவர்கள் தம் பழநிப் பதிகத்தில் இவ்வாறு பாடுகிறார்:

"பாவடிக் கிசைந்து வரும் காவடிகள் ஆட்டமும்
சேவடிகள் காணவரும் அடியார்கள் கூட்டமும்
மாவடிவங் கொண்டவனை மாய்த்தவன் மேல் நாட்டமாய்
தாவடி ஓட்டும் மயில்போல தாவி ஓடிற்றம்மா"

இவை தவிர,

"வள்ளிக் கணவன் பேரை வழிப்போக்கர் சொன்னாலும்
உள்ளம் குழையுதடி கிளியே, ஊனும் உருகுதடி
மாடுமனை போனால் என்ன, மக்கள் சுற்றம் போனா லென்ன
கோடிச் செம்பொன் போனாலென்ன குறுநகை போதுமடி
– முருகன் குறுநகை போதுமடி"

– எனும் காவடிச் சிந்து கிளிக் கண்ணியும் மிகப் பிரபலமான காவடிப் பாடலாகும்.

காவடிப் பாடல்களைப் பற்றி எண்ணும்போது சென்ற நூற்றாண்டில் பக்திப் பரவசப் பாடல்களால் மக்களை மயக்கிய பெங்களூர் ரமணி அம்மாளைப் பற்றிய நினைவு வரும்.

"பால் மணக்குது பழம் மணக்குது பழநிமலையிலே
மலையைச் சுற்றி முருகன் நாமம் எங்கும் ஒலிக்குதாம்
பழநி மலையைச் சுற்றி முருகன் நாமம் எங்கும் ஒலிக்குதாம்...
பால் காவடி, பன்னீர்க் காவடி, புஷ்பக் காவடியாம்
சர்க்கரைக் காவடி, சந்தனக் காவடி, சேவல் காவடியாம்
சர்ப்பக் காவடி, மச்சக் காவடி, புஷ்பக் காவடியாம்
மலையைச் சுற்றிக் காவடி ஆட்டம் தினமும் நடக்குதாம்
வேலனுக்கு அரோஹரா, முருகனுக்கு அரோஹரா,
கந்தனுக்கு அரோஹரா அதோ வாரான்டி பழநி ஆறுமுகம் தாண்டி..."

– போன்ற அவரது எளிய பாடல்களை ஆண்டுகள் பல சென்ற பின்னும், இன்றளவும் மக்கள் பாடிக்களிக்கின்றனர்.

அருணகிரிநாதரும் பல திருப்புகழ் பாக்களைக் காவடிச் சிந்து மெட்டில் பாடியுள்ளார். கீழே தரப்பட்டுள்ள பொதுப்பாடல்

இவ்வகைக்குரியது.

“ஏட்டிலே, வரை பாட்டிலே,
சில நீட்டிலே இனிதென்று தேடி
ஈட்டு மா பொருள் பாத்துணாதிகல்
ஏற்றமான குலங்கள் பேசி
காட்டிலே, இயல் நாட்டிலே,
பயில் வீட்டிலே உலகங்கள் ஏசக்
காக்கை நாய் நரி பேய்க் குழாமுண
யாக்கை மாய்வதொழி ந்திடாதோ
கோட்டுமாயிர நாட்டனாடுறை
கோட்டு வாலிப மங்கை கோவே
கோத்த வேலையில் ஆர்த்த சூர் பொரு
வேல் சிகாவள கொங்கில் வேளே
பூட்டுவார் சிலை கோட்டு வேடுவர்
பூட்கை சேர் குற மங்கை பாகா
பூத்தமாமலர் சாத்தியே சுழல்
போற்று தேவர்கள் தம்பிரானே.”

காவடி சுமந்து, பாட்டுப்பாடி, மலை ஏறுமுன், நக்கீரர் திருமுரு காற்றுப் படையில் குறிப்பிட்டிருக்கும் ஆற்றுப்படை வீடுகளுள் ஒன்றான ‘தாழக்கோயில்’ எனப்படும் புராதனமான திருவாவினன்குடிக் குழந்தைவேலாயுதன் கோயிலுக்குச் செல்வோம்.



திருஆவினன்குடி தீரன்



'வடிவேலர் சந்நதி முறை' எனும் நூலில் பழநி முருகனைக் கண்டு வழிபட வேண்டிய முறை அழகாக விளக்கப்பட்டுள்ளது.

"தரும் இரவி உதயமது கண்டு, வைகாபுரிதனைக் கண்டு, சுத்தி கண்டு
சண்முகப் புனல் கண்டு, நியமாதி கண்டு, பின் சரவணப் பொய்கையாடி,
அருள் பெருகும் ஆவினன்குடி கண்டு, கைலாசர், அம்மை,
பெரியம்மையைக் கண்டு
அம் பொன்மலை கண்டு, அதில் இடும்பர் சந்நதி கண்டங்கு
அநேகக் கண் காட்சி கண்டு
கருணை கண்டு, அருள் வள்ளி தெய்வானையைக் கண்டு
களி கண்டிருக்கும் உன்றன்

கமலபாதம் கண்டபேர் ஒருக்காலும் அக் காலனைக் கண்டிடுவரோ?
பரிதிவலி கண்டவன் தனை வென்ற தம்பி தன் பராக்ரமங் கண்டிடு துரையே!
பழ மறை சொலிய சீல! தொழுமவர்கள் அனுகூல!
பழநிமலை வடிவேலனே!"

என்பது அப்பாடல்.

(நியமாதி கண்டு = சந்தியா வந்தனம் முதலான நித்ய அனுஷ்டானங்கள் செய்து; பரிதி வலி கண்டவன் தனை வென்ற தம்பி = பானுகோபனை வென்ற வீரபாகு)

சுற்றுக் காவடி (காவடி எடுத்துக்கொண்டு ஊர்ப் பெரிய கோயில்களை தரிசித்த பின் மலை ஏறுவது) எடுத்துச் செல்லும் பக்தர்களோடு சேர்ந்து நாமும் இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவினன்குடி குழந்தை வேலாயுதன் கோயில், ஊர்க்கோயில் எனப்படும் பெரியநாயகி அம்மை திருக்கோயில் மற்றும் பெரியாவுடையார் திருக்கோயில் ஆகியவற்றைத் தரிசித்தபின் கிரிவலம் வந்து மலை ஏறுவோம்.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிட்டிருக்கும் ஆறு ஆற்றுப்படை வீடுகளுள் ஒன்று ஆவினன்குடி. (மற்றவை – பரன்குன்று, சீரலைவாய், ஏரகம், குன்று தோறாடல், பழமுதிர் சோலை) பழம் பெருமை வாய்ந்த ஒரு ஊரின் பெயர், காலப்போக்கில் அரசாட்சி,

சமயச் செல்வாக்கு, புராண அடிப்படை முதலிய காரணங்களால் மாறுபடக்கூடும். புராண அடிப்படையில் ஆவினன்குடி போன்ற சிற்றூர்கள் அடங்கிய பகுதி இன்று பழநி என்ற ஒரே பெயரால் அறியப்படுகின்றன. மலை அடிவாரத்திலுள்ள திருஆவினன்குடிக் கோயிலில் முருகப்பெருமான் குழந்தை வேலாயுதசாமி என்ற பெயருடன் மூலவராகத் திகழ்கிறான். காவடி எடுத்துவரும் பக்தர்கள் கோயிலின் அருகே உள்ள சரவணப்பொய்கையில் நீராடி, ஆவினன்குடி ஆண்டவனைத் தரிசித்து, பின் மலை ஏறுவது தொன்று தொட்டு வரும் வழக்கமாகும்.

நக்கீரர் தாம் பாடிய ஒவ்வொரு ஆற்றுப்படை வீட்டிற்கும் தனித் தனியே பெருமை பாடியுள்ளார்.

அவற்றுள் "தாவிய கொள்கை மடந்தையொடு சின்னாள் ஆவினன்குடி அசைதலும் உரியன" எனும் வரிகளில், (முருகப் பெருமான் தன் மனைவி கற்பினுக்கணியாம் தேவ சேனையுடன் ஆவினன்குடியில் தங்குதற்குரியன) ஆவினன்குடியின் சிறப்பைக் கூறுகிறார்.

ஆனால், திருஆவினன்குடியில் இருப்பவன் குழந்தைவேலாயுதன் ஆயிற்றே என்ற கேள்வி எழலாம். இந்திரன், சூரனுக்கு எதிரான போரில் தனக்கு உதவியதற்காகத் தன் மகள் தெய்வயானையைப் பங்குனி உத்திர நன்னாளில் முருகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். (இன்றளவும் பங்குனி உத்திர விழாவிற்கான



கொடியேற்றம் திருவாவினன்குடியில்தான் நடைபெறுகிறது.) "போரில் பெற்ற வெற்றியும், அதன் விளைவாகத் தெய்வயானையை மணமுடிக்கப் பெற்றதும் தன் வேலினால் வந்த பெருமையே" என்றான் முருகன். "அவ்வேலுக்கு ஆற்றல் வழங்கியவன் நானே" என்று பிரம்மன் மார்தட்ட, "நீ மண்ணுலகில் சென்று பிறப்பாயாக" என்று சபிக்கப்பட்டான். தேவர்களனைவரும் திரண்டு முருகனைக் கண்டு மன்னிப்புக் கோர நினைக்கின்றனர். தேவர்களுக்காகவும் பூவுலகிலிருக்கும் பிரம்மனுக்காகவும் மண்ணுலகிலுள்ள திருஆவினன்குடிக்கு வருகிறான் முருகன். இனி வரும் காட்சியை நக்கீரர் பாடுகிறார்:

"மரவுரி உடுத்து, மான் தோல் போர்த்தி, உண்ணா நோன்பால் மெலிந்து, நரை மிகுந்து, தூயராய்க் காட்சியளிக்கும் தவமுனிவர்கள், சினத்தை நீக்கி, அறிவு மிகுந்து இன்னெஞ்சினராய் முருகனை வழிபட ஆவினன்குடியில் முந்துகின்றனர். அங்கு கந்தர்வர் மெல்லாடையும், மார்பிலே மாலையும் அணிந்து, மென்சொற்களைப் பேசித் தம் மனைவியருடன் யாழினை இசைத்துச் செல்கின்றனர். பிரம்ம தேவனைச் சிறை மீட்டற் பொருட்டுத் திருமாலும், ருத்ரனும், பிற தேவர்களும், பதினெண் கணங்களும் தம் குறை தீர வந்து வழிபட்ட தலம் ஆவினன்குடியாகும். அவர்களுடன் நூறு வேள்விகளை இயற்றிய இந்திரனும் தன் ஐராவதத்திலேறி முருகனை வழிபட வந்தான். அங்கு முருகன் குற்றமில்லாத கற்புடைய மடந்தையுடன் சிலகாலம் எழுந்தருளியிருந்தான்" என்று கூறுகிறார் நக்கீரர்! பின்னர் எப்போதும்போல் தன் இளமைக் கோலத்தோடு தோன்றி ஆவினன்குடியில் அருள்பாலித்து வருகிறான் என்பது நாம் நினைவில் கொள்ள வேண்டிய கருத்தாகும்.

ஒரு காலத்தில் அடர்ந்த நெல்லி வனமாக இருந்த இடம் திருஆவினன்குடி. செந்தாமரையில் வீற்றிருக்கும் லட்சுமி தேவி, ஒருமுறை திருமாலால் புறக்கணிக்கப்பட்டபோது, புண்டரிக பாகவதர் எனும் பெரியார் அறிவுரைப்படி,

"அண்டர் முனிவர் தொழும் குழகன் மாமூதூர் ஆமலகவனம் கண்டு புரிந்தாள் அருந்தவம்" என்கிறது பழநித் தலபுராணம். *(ஆமலகவனம் = நெல்லி வனம்)* இந்திரனும் இவ்விடத்தில் தவம் புரிந்தான் என்பதை அருணகிரிநாதர், "அமரர்க்கிறையே வணங்கிய பழநித் திருஆவினன்குடி" என்று பாடுகிறார். *('பகர்தற்கரிதான' - திருப்புகழ்)* இலக்குமி தேவி (திரு), இந்திரன், இவர்கள் தவிரவும் விசுவாமித்திரர் படையை வென்ற அகங்காரத்தால் தனது பலமிழந்த காமதேனுவும் (ஆ), தன்னால்தான் உயிர்கள் அனைத்தும் வாழ்கின்றன என்ற கர்வம் கொண்ட காரணத்தால் சிவபெருமான் சாபத்திற்கு ஆளான சூரிய பகவானும் (இனன்), திருமாலால் புறக்கணிக்கப்பட்ட மற்றொரு தேவியான பூதேவியும் (கு), தக்ஷனது யாகத்தில் கலந்து கொண்டு வீரபத்ர மூர்த்தியால் தண்டிக்கப்பட்டு ஒளி இழந்த அக்னி தேவனும் (டி), இத்தலத்தில் வழிபட்டு தத்தம் குறை நீங்கப் பெற்றனர் என்கிறது தலபுராணம். இதைத் தொடர்ந்து விளக்குகிறார் புலவர் சே.த.ராமலிங்கம்: "உயர் வாழ்க்கைக்குத் தேவை செல்வம் (திரு), பால் முதலான பண்டங்கள் (ஆ), சூரிய ஒளி (இனன்), மண்ணின் விளைவுகள் (கு), ஜீரணிக்கத் தக்க வெப்ப நிலை (டி), ஆதியன எல்லாம் உதவும் இறைவன் நிலையம் என்பது பொருள் போலும்!" முருகன் ஏன் திரு ஆவினன்குடிக்கு வந்தான் எனும் கேள்வி பழநித் தலபுராண ஆசிரியர் மனதில் தோன்ற, உடனே பாடலும் பிறக்கிறது.

"பாயும் விடை ஊர் பகவானுக்கும் தனக்கும் பழைய பதி என்றோ?
ஆய திரு ஆ இவரை அளித்தும் என்றோ? ஏனவரை
ஏய சாரல் உறும் தவமோ? யாதோ யாவர் அறிகிற்பார்
சேய திரு ஆவினன்குடியில் சென்றான் குன்று தொறு நின்றான்."

(தாவிச் செல்லும் ரிஷப வாகனத்தை உடைய சிவனாருக்கும், தமக்கும் உரிய பழைமையாக விளங்கும் தலம் என்று எண்ணியோ? பூசித்த லட்சுமி, காமதேனு, சூரியன் எனும் இவரைக் காப்போம் என்று கருதியோ? வராக மலையில் பொருந்திய சாரல் செய்த தவமோ? யாதோ எவர் அறிய வல்லார்? மலைகள்தோறும் தங்கி அருளும் குமாரக் கடவுள் செம்மையான திருஆவினன்குடியிற் சென்றார்)

இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வாழ்ந்த கவிராஜ பண்டிதர் புதுக்கோட்டை நா.கனக ராசையா அவர்கள் 'திருவாவினன்குடித் திருவாயிரம்' என்ற பெயரில் ஆயிரம் பாடல்கள் கொண்ட நூலொன்றைப் பாடியுள்ளார். எளிமையும், ஓசை நயமும், கருத்துச் செறிவும் மிக்க இப்பாடல்களிலும் முருகன் ஆவினன்குடி

வந்த வரலாறு கூறப்பட்டுள்ளது.

சந்தப் புலவர் அருணகிரிநாதர் பாடிய பாடல்களுள் நமக்குக் கிடைத்த ஆவினன்குடிப் பாடல்கள் 12, அவர் வாழ்ந்த காலம், மாதம் மும்மாரி பெய்த காலமாக இருந்திருக்கலாம்!

ஏனெனில், பல பாடல்களில் திருஆவினன்குடியின் இயற்கை எழிலைப் புகழ்ந்து போற்றுகிறார்.

"ஆலையும் பழனச் சோலையும் புடை சுற்று
ஆவினன்குடியிற் பெருமாளே"
(ஆலை = கரும்பாலைகள்) என்றும்,
"கொந்தவிழும் தடமே நிரம்பிய
பண்பு தரும் திருவாவினன்குடி"

என்றும் பாடுகிறார். அவரது காலத்திலேயே கோயில்கள் நிறைந்த ஊராகத் திருஆவினன்குடி திகழ்ந்தது என்பதற்குச் சான்றாக, "கோமளம் பல சூழ் கோயில் மீறிய ஆவினன்குடி" என்றும் பாடி யுள்ளார்.

உபதேச மந்திரப் பொருளையும், செப மாலையையும் தனக்குத் தந்த ஆவினன்குடி முருகனைத்துதித்துப் பாடுகிறார் அருணகிரிநாதர்:

"செப மாலை தந்த சற்குருநாதா
திரு ஆவினன்குடிப் பெருமானே
உபதேச மந்திரப் பொருளாலே
உனை நான் நினைந்தருள் பெறுவேனோ"

('அபகார' - திருப்புகழ்)


(செப மாலையை அடியேனுக்குத் தந்த சற்குருநாதா! நீ அடியேனுக்கு உபதேசித்த மந்திரப் பொருளைத் துணையாகக் கொண்டு உனை தியானித்து அருள் பெறுவேனோ?)

"பரிந்து ஒரு கால் உகந்து திருவாவினன்குடி
என்று உரைத்தோர் முத்தி அடைவர் உண்மை"

(பழநித் தல புராணம்)

இனி திருவாவினன்குடிக் குழந்தை வேலாயுதன் திருக்கோயிலுக்குச்செல்வோம். மேற்குநோக்கிய பிரதான வாயிலில் நுழையுமுன் விசாலமான திருப்புகழ் மண்டபமும், மயில் மண்டபமும் நம்மை வரவேற்கின்றன. திருப்புகழ் மண்டபம் 1998ம் ஆண்டு நடைபெற்ற திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவையோட்டி கட்டப்பட்டது. கோயிலினுள் நுழைந்ததும் வெளிச்சுற்றுப் பிராகாரம் தெரிகிறது.

இடதுபுறம் கிழக்கு நோக்கிய விநாயகர், எதிரே அண்ணாமலையார், உண்ணாமுலையம்மை, தெற்குநோக்கிய தட்சிணாமூர்த்தி ஆகியோரைத் தரிசிக்கிறோம். வெளிச்சுவரையொட்டிய நிலையில் நக்கீரர், அருணகிரிநாதர் ஆகியோர் திரு உருவங்கள் கிழக்கு நோக்கி சுவாமியைப் பார்த்த வண்ணம் நிறுவப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் அருணகிரிநாதர் ஜெயந்தி நாளான ஆனி மூல தினத்தில்



திருப்புகழ் அன்பர்களால் நடத்தப் பெறும் சிறப்பு திருப்புகழ் இசை வழிபாடு நிகழ்ச்சியில் எண்ணற்ற பக்தர்கள் கலந்துக் கொண்டு வேலன் அருளுக்குப் பாத்திரமாகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கோயிலின் வடபகுதியில் சனீஸ்வரர், சொக்கநாதர், மீனாட்சி அம்மன், வடக்கு நோக்கிய துர்க்கை ஆகியோரை தரிசிக்கலாம்.


மேற்கு நோக்கி நின்று அருள்பாலிக்கும் குழந்தை வேலனைத் தரிசிக்க மேற்குத் திசையிலுள்ள கேரளாவில் வசிக்கும் மலையாள அன்பர்கள் பெரும் அளவில் வருகின்றனர். கொங்குதேசத்துடன் என்றென்றும் தொடர்புகொண்டுள்ள கேரள மக்கள் காலம் காலமாகப் பழநி முருகனை வணங்கி வருகின்றனர். கேரளத்தில் உள்ள பல கிராமங்களில் வாழும் வேலன் எனும் இனத்தினர் வேலாயுதனைத் தங்கள் குலதெய்வமாக வணங்குகின்றனர். அங்கும் மிக அழகான காவடி ஆட்டம் உண்டு. முன்னோர்கள் காலம் காலமாக வந்து வேலாயுதனைத் தரிசித்துச் செல்வதைத் தாங்கள் தொடர்வதாகக் கூறுகின்றனர். தைப்பூசத் திருவிழாவின்போது எண்ணற்ற மலையாளப் பக்தர்கள் காவடி எடுத்துக்கொண்டு பாத யாத்திரை வருவதைக் காணலாம். கேரளாவின் பெரும்பகுதியையும் கொங்கு நாட்டின் சில பகுதிகளையும் ஆண்ட சேர மரபினரைத் தொடர்ந்து வீரகேரளர்கள் என்ற பட்டப் பெயருடன் சுமார் ஒரு நூற்றாண்டிற்கு மேல் ஆட்சி செய்த அம்மன்னர்கள் முருக வழிபாட்டை ஆதரித்தனர். கேரளத்தில் வேலாயுதன் என்ற பெயர் கொண்டவர்களும் அநேகம் பேர். மொழிவாரி மாகாணங்கள்

பிரிக்கப்பட்ட பின்னரும் கேரளர்கள் பங்குனி உத்திரம், வைகாசி விசாகம் மற்றும் தைப்பூசம் ஆகிய பெரும் வைபவங்களில் தமிழர்களோடு சேர்ந்து பங்கு பெற்று மகிழ்கின்றனர்.

தேவர்களே திருஆவினன்குடிக்கு வந்து தம் குறை தீரப் பெற்றனர் எனும்போது மண்ணுலகினரான நாமும் வேலாயுதனிடம் நம் குறை கூறி அவை தீர்க்கப்பெற்று இன்பமுறுவோம் என்பது உறுதி. "காலத்தால் முற்பட்டு விளங்கிய திருவாவினன்குடிக் கோயில் இன்று துணைக்கோயிலாகத் திகழ, பின்னர் குன்றின் மீது தோன்றிய குமரன் கோயில் முதன்மைக் கோயிலாக விளங்குவது 'அதிசயம் அநேகமுற்ற பழநி' என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகலாம்" என்பது பேராசிரியர், முனைவர் அ.மா.பரிமணம் அவர்கள் கூறும் சுவையான குறிப்பு!



முத்துக்குமரனே கிரிவலம் வரும் அற்புதம்!



தேவியருடன் முருகப்பெருமான்

முற்காலத்தில் பழநி, சேரமன்னர்கள் ஆட்சிக்குட்பட்ட கொங்கு நாட்டின் தெற்கு எல்லையாக விளங்கியது. பழநி மலையை யொட்டி இருக்கும் பகுதியை வைகாவூர் நாடு என்றழைத்தனர். மலைக்கோயிலிலுள்ள கல்வெட்டுகளும் பழநிப் பகுதியை வைகாவூர் நாடு என்றே கூறுகின்றன. கல்வெட்டுகளில் ‘வைகாவூர் நாட்டுப் பழநியில் சுப்ரமண்யப் பிள்ளையார்’ என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அருண கிரிநாதரும் “சேரர் கொங்கு வைகாவூர் நனாடதில் ஆவினன்குடி” என்று பாடுகிறார்.

சுமார் 1360 ஆண்டுகளுக்கு முன்னர், சேர நாட்டில்,

கொடுங்கோளூர் எனும் தலத்தில், சேரமான் பெருமாள் எனும் அரசர் ஆண்டு வந்தார். மிகுந்த சிவபக்தி காரணமாக, குடி மக்கள் கூறுவனவற்றைத் தாம் இருந்த இடத்திலேயே தெரிந்து கொள்ளும்படியான வரம் பெற்றிருந்ததால் கழற்றறிவார் நாயனார் என்றழைக்கப்பட்டார். இவரது உற்ற நண்பரான சுந்தரர், இறைவன் அனுப்பிய வெள்ளை யானையின் மீதேறி கயிலைக்குச் சென்றபோது, தமது நண்பரான சேரமானை நினைத்தார். இதை உணர்ந்த அரசர் தனது குதிரையின் செவிகளில் பஞ்சாட்சரத்தை ஓத, அது விரைந்து சென்று சுந்தரரது யானையை வலம் வந்து, அவருக்கு முன்னதாகக் கயிலையைச் சென்றடைந்தது. ஆனால், அரசருக்கு உள்ளே செல்ல அனுமதி கிடைக்கவில்லை.

சுந்தரருக்காகக் காத்துக்கொண்டிருக்கும் காலத்தை வீணாக்க விரும்பாத அரசன், அங்கிருந்தபடியே 'திருக் கயிலாய ஞான உலா' எனும் பிரபந்தத்தை ஆசு கவியாகப் பாடினார். 'உலா' நூல்களுள் இது முதன்மையானது. சுந்தரர் வந்தபின் அவருடன் சென்று சிவபெருமானைத் தரிசித்து, நூலை அரங்கேற்றினார் அரசர். இத்தகு பெருமை வாய்ந்த சேரமான் பெருமானுக்கு உரித்தான கொங்கு மண்டலத்து வைகாவூர் எனும் நாட்டுப் பகுதியில் உள்ள ஆவினன்குடியில் வாழும் முருகப் பெருமானே என்று பாடுகிறார் அருணகிரியார்.

ஆதரம் பயில் ஆரூரர் தோழமை
சேர்தல் கொண்டவரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மா கயிலையில் ஏகி
ஆதி அந்த உலா ஆசு பாடிய
சேரர் கொங்கு வைகாவூர் நனாடதில்
ஆவினன்குடி வாழ்வான் தேவர்கள் பெருமாளே

('நாதவிந்து' - ஆவினன்குடித்திருப்புகழ்)



பாடல் பெற்ற தலமாகிய 'தாழக்கோயில்' எனப்படும் திருவாவினன்குடி வாழ் குழந்தை வேலாயுதனைத் தரிசித்த பின், 'ஊர்க்கோயில்' என வழங்கப்பெறும் பெரியம்மை திருக்கோயிலைத் தரிசிப்போம்.

பெரியநாயகி அம்மைத் திருக்கோயில் பழநியின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் தனிச்சிறப்பு, சத் (உண்மை) சித் (அறிவு) ஆனந்தம் (இன்பம்) எனப்படும் சோமாஸ்கந்த தத்துவத்தை உணர்த்தும் வகையில் சந்நதிகள் அமைக்கப்பட்டிருப்பதுதான். சிவபெருமானுக்கும், உமைக்கும் நடுவே முருகன் வீற்றிருக்கும் அல்லது நின்றிருக்கும் திருக்கோலமே 'சோமாஸ்கந்தர்' எனப்படும். பெரியநாயகி அம்மை, கைலாஸநாதர் இருவர் சந்நதிகளுக்கும் நடுவே முருகப்பெருமான் சந்நதி அமைந்துள்ளது. உமைக்கும் சிவனுக்கும் நடுவே முருகன் விளங்குவதைப் பகலுக்கும் இரவுக்கும் நடுவே தோன்றும் மாலைப்பொழுதுடன் ஒப்பிட்டுப் பாடுகிறார் கச்சியப்ப சிவாச்சாரியார்.

ஏலவார் குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞான மேலுறும் இரவொடு பகலுக்கும் நடுவாய்
மாலையானதொன்று அழிவின்றி வைகுமாறொக்கும்

- என்பது அப்பாடல். கிழக்கு நோக்கி அமைந்துள்ள மூவர் சந்நதிகளுக்குத் தெற்குப்பாகத்தில் ஒரு அழகிய மண்டபத்துள் முத்துக்குமார சுவாமி தேவியருடன் அமர்ந்திருக்கிறார். விழாக் காலங்களில் தேவியருடன் ஊர்வலம் வரும் இப்பெருமானின் அழகைக் காணக் கண் கோடி வேண்டும். அம்மையும் அப்பனும் இருபுறங்களிலும் இருந்தபோதிலும், கோயில் கொடிமரம் முருகன் சந்நதிக்கு எதிரிலேயே அமைந்துள்ளது.

கோயிலின் கிழக்குத் திருவாயிலில், ராஜகோபுரம் கட்டி முடிக்கப்படாமல் பாதியிலேயே விட்டு வைக்கப்பட்டுள்ளது. கோயில் பதினாறாம் நூற்றாண்டு மதுரை நாயக்கர் காலத்ததாகக் கருதப்படுகிறது. ஆனால், ஆதாரமாகக் கல்வெட்டுகள் எதுவும் இல்லை. விசாலமான நவரங்க மண்டபம் ஒன்று காணப்படுகிறது. அவ்வப்போது கோயிலைச் சீர்திருத்திப் புதுப்பித்த பெரியோர்களின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. தலவிருட்சம் வில்வம். தண்டாயுத பாணி சார்புக் கோயில்களுள் ஒன்றான இக்கோயிலிலும் ஆறுகால பூஜைகள் நடத்தப்பெறுகின்றன.

பழநி தைப்பூச விழாவிற்கான கொடியேற்றம் அம்மையின் கோயிலில்தான் நடைபெறுகிறது. உற்சவ மூர்த்தியான முத்துக்குமார சுவாமி, பார்வதி-பரமேஸ்வரர் திருமணம் உட்பட அனைத்து விழாக்களிலும் முக்கியப் பங்கு ஏற்கிறார். வைகாசி

விசாகத்தையோட்டி, 10 நாட்கள் இங்கு விமரிசையாக உற்சவம் நடைபெறுகிறது. விசாகத்தன்று சுவாமி திருத்தேரில் புறப்பாடு காண்பார். அன்றைய தினம் முருகனுக்குப் பால் அபிஷேகம் செய்து வணங்கினால் வாழ்வில் வளங்களும் பால்போல் பொங்கும் என்பது பக்தர்களின் அசையாத நம்பிக்கை.

15 நாட்கள் பழநியில் நடக்கும் அக்னி நட்சத்திர விழாவில், 14ம் நாளன்று முத்துக்குமார சுவாமி, அடிவாரத்திற்கு எழுந்தருளி பூச்சட்டி மண்டபத்திற்கருகே பக்தர்களுக்குத் தீர்த்தம் வழங்குகிறார். பின்பு இரவில் கிரிவலம் வந்து மீண்டும் அம்மையின் கோயிலுக்குத் திரும்பும் காட்சி உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாக இருக்கும். சித்ரா பௌர்ணமி அன்று முத்துக்குமாரர் வெள்ளி ரதத்தில் வந்து அருள்பாலிக்கிறார். இவை தவிர சூரசம்ஹாரம், விஜயதசமி ஆகிய விழாக்களிலும் முக்கிய நாயகனாக வலம் வருகிறார். விழாக்கள் முடிவுறும்போது கோயில் யாகசாலையில் வைக்கப்பட்டுள்ள தீர்த்தக் குடத்தை எடுத்துக் கொண்டு போய், மலையில் எழுந்தருளியிருக்கும்

பழநியாண்டிக்கு அர்த்த ஜாம பூஜையின்போது அபிஷேகம் செய்வது வழக்கம்.

பழநிப் புராணத்தில் பெரிய நாயகி அம்மையின் சிறப்பு பற்றிய பாடல் ஒன்று அமைந்துள்ளது.

அருவுருவம் தணிந்த சச்சிதானந்த நிமலன் அருள் சக்தி, முத்திக்கு
ஒரு முதல்வி, தொழில் ஐந்தும் இயற்றி, நால்வகைத் திறனும் உயிர்க்கு நல்கி
இருவினை ஒத்தவர் ஏத்த, மனத்தவிசில் இனிது வீற்றிருந்து, எஞ்ஞான்றும்
கருணை பொழி பெரிய நாயகி மலர்ச்சீறடி எமது கருத்துள் வைப்போம்

(அருவமும் உருவமும் இல்லாத, சத்து - சித்து - ஆனந்தம் என்னும் மூன்றினையும் உடைய நிர்மலரான சிவபெருமானது திருவருட் சத்தியும், முத்திக்கு ஒரு தலைவியும், ஸ்ருஷ்டி - ஸ்திதி - ஸம்ஹாரம் - திரோதானம் - அனுக்ரஹம் எனும் ஐந்தொழில்களையும் செய்து, ஆன்மாக்களுக்கு அவற்றால் தனு, கரண, புவன, போகம் எனும் நால்வகைப் பொருட்களையும் கொடுத்து, நல்வினை-தீவினை எனும் இருவினைகளும் சமமான பக்குவமுடைய அடியார் துதிக்க, அவரது மனமாகிய கமல ஆசனத்தின் கண், இனிமையுடன் வீற்றிருந்து எந்நாளும் திருவருளைப் பொழிகின்ற பெரிய நாயகி அம்மையாரது தாமரை மலர் போலும் திருவடிகளை எமது மனக்கண் வைத்துத் தியானிக்கிறேன்)

அருணகிரிநாதரும் 'போர்ப்பறையை விரும்பும் ருத்ரி, கரியமேகம் போன்ற கூந்தலை உடையவள், பரமர் பக்கம் உறைகின்ற சக்தி, எமது தாய் பழைய பார்வதி, துர்க்கை, பெரியநாயகி எனும் திரு

நாமத்தை உடையவள் பெற்ற பெருமாளே," என்று பழநியில் பாடியுள்ளார்.

அடுத்து நாம் செல்லவிருப்பது, பழநிக்கு வடக்கே பழைய

தாராபுரம் சாலையிலுள்ள பெரிய ஆவுடையார் கோயில். சேர, சோழ, பாண்டியரால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. ஈசுவரன் சுயம்புலிங்கம், மேற்கு நோக்கிய கோலம்.


பிரதோஷ நாயகர்

நாரதர் அளித்த பழம் தனக்குக் கிட்டவில்லை என்ற காரணத்தினால் அனைத்தையும் துறந்து தண்டாயுதபாணி எனும் கோவணாண்டியாக, சிவகிரி மேல் வந்தமர்ந்த தம் மகனைத் தேடிக்கொண்டு, அம்மையும் அப்பனும் பழநி வந்தனர். ஷண்முக நதிக்கரையில் இருந்த பசுமையான வயல்களும், அங்கு உலவிக்கொண்டிருந்த மான்களும் மயில்களும் சிவபெருமானை ஈர்த்தன. அவர் அவ்விடத்தை விட்டு நீங்க மனமின்றி அங்கேயே அமர்ந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க சித்தமானார். மகனைத் தேடியல்லவா வந்தோம்! என்று அம்பிகை நினைவுறுத்தியதும் 'அதோ' என்று சிவகிரியைச் சுட்டிக் காட்டினார் இறைவன். உடனே சென்று குழந்தையைப் பார்க்க வேண்டும் என்று தாயுள்ளம் ஏங்க, உமை ஈசனிடமிருந்து பிரியாவிடை பெற்றாள். பிரிய மனமில்லாமல் அம்பிகை சென்றதால், பிரியாநாயகி என்றும், விடை கொடுக்க மனமில்லாமல் ஈசன் விடை கொடுத்ததால் பிரியா விடையார் என்றும் அழைக்கப்பட்டனர். இதுவே காலப்போக்கில் மருவி பெரிய நாயகி என்றும் பெரியாவுடையார் என்றும் பெயர்வரக் காரணமாயிற்று. ஷண்முக நதிக்கரையில் நதியை நோக்கிய வண்ணம் உறைந்தார் ஈசன்.

நாயக்க மன்னர்கள் ஊருக்குள் பெரியநாயகி அம்மைக்குக் கோயில் எழுப்பினர். ஈசன் தேர்ந்தெடுத்து உறைந்த ஷண்முக நதிக்கரையில் நின்று ஒரு காலத்தில் அது சுழித்தோடிய காட்சியை மனக்கண்முன் கொண்டு வருகிறோம். ஷண்முகநதியின் பெருமையை பாலசுப்ரமணியக் கவிராயர் தனிச் சருக்கமாகவே பாடியுள்ளார்.

"சத்தியோஜாதம் ஆதி முகங்களில் கொன்றை,
சாமம் சுத்தம், மாயார்த்தம், ஞானநதி இவை தோன்றி,
மூலவத்திரம் தனில் மைந்தோகை மாநதி தோன்றி, கங்கை
ஒத்த ஷண்முக தீர்த்தத்தில் கூடி ஒன்றாய தன்றே"

சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் எனும் ஐந்து முகங்களினின்றும் முறையே கொன்றை நதி, சாமதீர்த்தம், சுத்தநதி, மாயா தீர்த்தம், ஞானநதி ஆகிய ஐந்து நதிகளும் தோன்றியும், மூல முகத்தினின்று பசிய மயூரநதி உற்பவித்தும், கங்கா நதியை ஒத்த

ஷண்முக தீர்த்தத்தில் ஒன்றாய்க் கலந்தன என்றும், பின் தருக்கள் நிறைந்த கோங்கவனத்தின் கணுள்ள தேனு தீர்த்தத்தை அடைந்து அங்கு வீற்றிருந்தருளும் சிவ பெருமானது திருவடிகளைத் துதித்துச் செல்கிறது என்றும் பாடுகிறார்.

ஷண்முகநதிக்கரையில் குடிகொண்ட சிவபிரான் அங்கும் ஒரு திருவிளையாடலை நிகழ்த்தினார். விராட மஹாராஜா காட்டு விலங்குகளை விளையாடச் சென்றபோது சிவனார் ஒரு அழகிய மான் உருவம் கொண்டு அவன்முன் ஓடினார். மானை உயிருடன் பிடிக்க எண்ணி, அதன்பின் ஓடினான் அரசன். மானும் அரசன் கையில் சிக்காமல் ஓடிக்கொண்டேயிருந்தது. இறைவன் இன்று லிங்க வடிவில் வீற்றிருக்கும் இடம் வந்ததும் புதருக்குள் மறைந்துவிட்டது. கோபம் கொண்ட மன்னன் மான் இருக்குமிடம் நோக்கி அம்பைச் செலுத்தினான். மான் மறைந்தது. மாறாகக் குருதி பெருக்கெடுத்து ஓடியது. பதறிய மன்னன், தான் எய்த அம்பு ஒரு லிங்கத்தின் மீது தாக்கி அதிலிருந்து செங்குருதி பெருக்கெடுத்ததைக் கண்டான். தனது தவறை எண்ணி அவன் புலம்பியபோது இறைவன் அசரீரியாக எழுந்து தனக்கு அவ்விடத்தில் ஒரு கோயில் கட்டுமாறு பணித்தார்.

அரசன் மானைத் துரத்தியபோது, அது ஓடிய இடம் இன்றும் 'மானூர்' என்று அழைக்கப்படுகிறது. அம்பினால் ஏற்பட்ட வடு லிங்கத்தில் உள்ளது. அம்மையும் அப்பனும் லிங்கத்தில் உறைகின்றனர் என்பதைப் புலப்படுத்தும் வகையில், லிங்கத்தின் மேல் பகுதியில் சக்தி வடிவத்தில் ஓர் அங்கம் உள்ளது. பெரியாவுடையாரே சிவசக்தி ரூபத்தில் உள்ளார் என்று கருதப்படுவதால் அம்பாளுக்குத் தனிச்சந்நதி ஏதும் இல்லை. அதுமட்டுமின்றி, கோயிலில் எந்தப் பெண் தெய்வ சந்நதிகளும் இல்லை என்பது வியப்பிற்குரியது. பழநி ஆண்டவனைப் போலவே பெரியாவுடையாரும் மேற்கு நோக்கி இருக்கிறார். சத்யோஜாத மூர்த்தி என்று அழைக்கப்படுகிறார்.

வேறு எங்குமில்லாத வகையில் பிரதோஷ நாயகர், தாண்டவ நிலையில் ஒரு காலைத் தூக்கிக்கொண்டு நடராஜராக, கையில் டமருகத்துடன் காணப்படுவது, பெரியாவுடையார் கோயிலின் மற்றொரு அதிசயம். பொதுவாக நடராஜர் சிவகாமியுடன் சேர்ந்துதான் காணப்படுவார். ஆனால், இங்கு சிவகாமி இல்லை. நடராஜர், கருங்கல் சிலையாக உள்ளார். உடல் முழுவதும் கறுப்பு வண்ணத்திலும், முகம் வெண்மையாகவும் காணப்படுகிறது.

மஹாநந்தி பிரமாண்டமாக அமைந்துள்ளார். மிக அழகான தக்ஷிணாமூர்த்தியையும் தரிசிக்கலாம். ஒரு கையில் ஓலைச் சுவடியும், ஒரு கை சின்முத்திரையும் கொண்டு வீற்றிருக்கும் இவர் மேதா தக்ஷிணாமூர்த்தி எனப்படுகிறார். கடப்பமரம் இத்தலவிருட்சம். 1915ம் ஆண்டு நடைபெற்ற சீரமைப்பின்போது, கோயில் சுவரிலுள்ள கல்வெட்டுச் செய்திகள் பலவும் சிதிலமடைந்துவிட்டன.



இறைவனிடம் பிரியாவிடை பெற்ற பெரிய நாயகி அம்மை, ஆடி 18ம் பெருக்கன்று பெரியாவுடையார் கோயிலில் எழுந்தருளி மாங்கல்ய நோன்பு கொண்டாடி, பின் மாலை மீண்டும் தன் இருப்பிடத்திற்கே சென்றுவிடுகிறார். அன்றைய தினம் பெண்கள் ஷண்முக நதியில் நீராடி அம்மையப்பராகக் காட்சி தரும் பெரியாவுடையாரைத் தரிசித்து வணங்கி, மாங்கல்யச் சரடு கட்டிக்கொண்டு நோன்பு கடைப்பிடிக்கின்றனர்.

பழநியையொட்டி அமைந்துள்ள அஷ்ட மங்கல க்ஷேத்ரங்களுள் ஒன்றான கோதைமங்கலம் கோதீஸ்வரர் கோயில், பெரியாவுடையார் கோயிலுக்கு அருகாமையிலுள்ளது. விஜயதசமியின்போது, பெரிய நாயகி அம்மை கோயிலிலிருந்து முத்துக்குமார சுவாமி, தந்தப் பல்லக்கில் இங்கு எழுந்தருளி வன்னிகாசுர வதம் செய்து மீண்டும் தன் இருப்பிடத்திற்குச் செல்கிறார்.

பழநிக்குப் பக்தர்கள் எடுத்து வரும் காவடிகளுள் ஒருவகை, சுற்றுக் காவடி என்பது. காவடியைச் சுமந்துகொண்டு உள்ளூர்க் கோயில்களை வலம் வந்து பாதவிநாயகரை வணங்கி கிரிவலம் செல்வது சுற்றுக்காவடி எனப்படும். சுற்றுக்காவடி கொண்டு செல்வோர் திருவாவினன்குடிக் குழந்தை வேலாயுதன், பெரிய நாயகி அம்மை, பெரியவுடையார் ஆகியோரைக் கிரிவலம் வருகிறார்கள்.

"ஞான தத்துவத்தின் முன்னர் தோன்றுவது புத்தி தத்துவம். எனவே, ஞானபண்டிதனான பழநிப் பெருமானைத் தரிசிக்கும் முன்னர் புத்தி தத்துவ தலைவனான பாத விநாயகரைத் தரிசித்தல் வேண்டும்," என்பார் புலவர் சே.த.ராமலிங்கம் பிள்ளையவர்கள்.

மலைக்குப் படி ஏறத் துவங்குமிடத்தில் பாத விநாயகர் வீற்றிருக்கிறார். இது சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டப்பட்ட கோயில் என்றும் அங்கிருந்த ஒரு கிணற்றை மூடி அதன்மேல் சந்நதி அமைக்கப்பட்டது என்றும் கூறுகிறார்கள். மூன்று விநாயகர் திருவுருவங்கள், நாகர் மற்றும் கருப்பண்ணன் ஆகியோர் திருவுருவச் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. காவடி கொண்டு வருபவர்களும், கிரிவலம் செல்பவர்களும் இங்கு தேங்காய் உடைத்து, கற்பூரம் காட்டி வழிபட்ட பின்னரே மலை ஏறத் துவங்குகிறார்கள். கிரிவலப் பாதையில் நாம் என்னென்னவற்றை அனுபவிக்கிறோம் என்பதைப் பார்ப்போம்.



கிரிவலம் வாராக் கால்களால் என்ன பயன்?



தங்க மயில் வாகனத்தில் பழநியாண்டி

தன்னை வழிபட்டவர்கள் உள்ளத்தைப் பழநியாண்டவன் பழுக்க வைக்கிறான். பழநி மலை மீது ஏறிச்சென்று அவனை வழிபட்டால்தான் நற்கதி கிடைக்குமென்றில்லை. அவன் ஞானதண்டாயுதபாணியாகக் குடிகொண்டுள்ள ஞானமலையாம் பழநியை வலம் வந்து மனமார வணங்கினாலே மனம் பழுத்து விடும். ஒரு பழம் காரணமாக உமையம்மையோடு சிவபெருமானும் சேர்ந்து மலைக்கு வந்ததனால் “பைங்கயிலை போலும் பழநியே” என்று மாம்பழக் கவிசிங்கராலும், ‘காசியின் மீறிய பழநி’ என்று அருணகிரியாராலும் போற்றப்பட்ட பெருமை உடையது

சித்ரா மூர்த்தி

பழநி. திருவண்ணாமலையைப் போன்றே பழநி மலையையும் சிவசொரூபமாகக் காண்கிறார் பாலசுப்ரமண்யக் கவிராயர்.

"புவனி விண் அளக்கரும் பொலிவு கொண்டு மா
தவர் புகழ் சத்தி ஓர் இடம் தரித்து ஓரீ இ
நவை தவிர் குமரவேள் நடுவண் பைகலால்
சிவமலை சிவனையே சிவணி நின்றது."

(பூமியில் உள்ளவர்களாலும், ஆகாயத்தில் உள்ளவர்களாலும் அளந்தறிதற்கரிய பொலிவைக் கொண்டு, பெரிய தவத்தை உடைய முனிவரால் புகழப்படுகின்ற சக்தி மலையையும் தன் பக்கத்திற்கொண்டு, குற்றங்களை விட்டு நீங்கிய குமாரக் கடவுள் நடு இடத்தே இருத்தலால் சிவமலை எனும் அந்த மலை சிவபெருமானைப் போன்றே நின்றது.)

மற்றொரு பாடலில், "சிறந்த சூரியனும் சந்திரனும் தன்னிடத்தில் மருவப்பெற்று, பரிசுத்தமான வேலாயுதத்திற்குத் தலைவராகிய சுப்ரமண்ய கடவுளும் தோன்ற நிற்றலினால் சிவபெருமானது நெற்றிக்கண்ணையும் போன்றது சிவசைலம்" என்றும் பாடுகிறார். இத்தகு பெருமை வாய்ந்த மலையைச் சுற்றி நடந்து வந்து வணங்குவதும் ஒரு தனி இறையனுபவம்தான்.

பழநி கிரிவலப்பாதை சுமார் 2 1/2 கிலோ மீட்டர் தூரம் கொண்டது. பாத விநாயகரை வணங்கிய பின் எதிரிலுள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலுக்குச் சென்று நமக்குப் 'பழம் நீ' எனும் பெரிய தத்துவத்தைக் காட்டிய அம்மையையும் அப்பனையும் வணங்கிப் பின்னர் கிரிவலம் செல்வது உத்தமம். இக்கோயில் வாயிலுக்கு எதிரே கல்லாலான அழகிய மயில் சிற்பம் கொண்ட மண்டபம் உள்ளது. இதேபோன்று மேலும் மூன்று மண்டபங்கள் கிரிவலப் பாதையில் திசைக்கு ஒன்றாக அமைந்துள்ளன. ஐப்பசி மாதம் நடக்கும் கந்த சஷ்டி விழாவின்போது இம்மண்டபங்களையொட்டி சூரசம்ஹாரம் நடைபெறும். தங்க மயில் வாகனத்தில் சுவாமி எழுந்தருளி சூரசம்ஹாரம் செய்வார். இத்திருவிழாவின்போது கிரிவீதியைச் சுற்றிலும் பக்தர்கள் கூட்டம் நிறைந்திருக்கும்.

அம்மையப்பரையும், மயில் வாகனத்தையும் வணங்கி வடக்கு கிரி வீதியில் நடக்கத் துவங்கும்போது ஒரு திருப்புகழ்ப் பாடல் நினைவிற்கு வருகிறது.

"மவுன உபதேச சம்பு, மதி அறுகு வேணிதும்பை
மணிமுடியின் மீதணிந்த மகதேவர்
மன மகிழவே அணைந்து ஒரு புறமதாக வந்த
மலை மகள் குமார, துங்க வடிவேலா
பவனி வரவே உகந்து மயிலின் மிசையே திகழ்ந்து
படி அதிரவே நடந்த கழல்வீரா
பரமபதமே செறிந்த முருகன் எனவே உகந்து
பழநிமலை மேலமர்ந்த பெருமாளே"

('அவனிதனிலே' - திருப்புகழ்) (பரமபதம் = மோட்ச வீடு)

வடக்கு கிரி வீதியில் பயணிகள் தங்குவதற்காக தண்டபாணி நிலையம், கார்த்திகேயன் விடுதி மற்றும் சிறு குடில்கள் உள்ளன. 'இடும்பன் குடில்கள்' எனப் பெயரிடப்பட்டிருக்கும் நுழைவாயிலின் உள்ளே சென்றால் 'பிரம்ம தீர்த்தம்' எனும் மிகப் பழைமையான தீர்த்தத்தைக் காணலாம். பாதுகாப்பிற்காகச் சுற்றுச்சுவர்களும், படிக்கட்டுகளும் கட்டப்பட்டுள்ளன. சில படிகள் இறங்கிச் சென்றால் பிரம்மன், திருமால், சிவன் ஆகியோர் தத்தம் வாகனங் களுடன் குடிகொண்டிருக்கும் சிறு கோயில்களைத் தரிசிக்கலாம். (மழையின்மை காரணமாக இக்குளத்திலும் நீர் மிகக் குறைந்த அளவே காணப்படுகிறது.)

"பிரம்மன், தேவர்கள் தன்னை நெருங்கிவரச் சென்று, பொறிகளை உடைய அக்னி கொண்டு செய்த குண்டம்; குமரக் கடவுளுடைய அருள் மிகுந்த நல்ல பூக்களை உடையது; கந்தர்வர்கள், தேவர்கள், முனிவர்கள் மற்றும் அஷ்டதிக் பாலர்கள் நீராடிய பெருமை உடைய பிரம்ம தீர்த்தத்தில் நீராடுபவர்கள் முக்தி அடைவர்" என்பது பழநித்தல புராணக் குறிப்பு.

பழனியில், இது தவிர 'சூசிமுக தீர்த்தம், தேவ தீர்த்தம், அமுத தீர்த்தம், ஞான தீர்த்தம் என மேலும் நான்கு தீர்த்தங்கள் உள்ளன என்பர். இவையின்றி சண்முக நதி, சரவணப் பொய்கை, பிரம்ம



தீர்த்தம், வள்ளிசுனை, அர்ஜுனன் பொய்கை ஆகிய பஞ்ச தீர்த்தங்களும் உள்ளன என்று கூறுவதும் உண்டு.

இடும்பன் குடில்களைத் தாண்டிச் செல்லும்போது, இடப்புறம் இடும்பன் மலைக்குச் செல்லும் சாலை பிரிகிறது. இடும்பன் காவடியாகச் சுமந்துகொண்டு வந்த சக்திகிரியே இடும்பன் மலை எனப்படுகிறது. மலையையொட்டி 2000ம் ஆண்டு அமைக்கப்பட்ட பழநி புறவழிச்சாலை செல்கிறது. இச்சாலையில் சிவகிரிப் பட்டி என்றும் பழைய ஆயக்குடி என்றும் கூறப்படும் தலத்தில் புராதனமான இடும்பன் கோயில் அமைந்துள்ளது. (மலைமேல் உள்ள இடும்பன் கோயில் பிற்காலத்தில் கட்டப்பட்டதுதான்) இடும்பன் குளத்தயொட்டி பெரிய பாறைகளின் மீது கல்தூண்களுடன் விளங்குகிறது இப்புராதனக் கோயில்.

ஆனால், கனமான பெயின்ட் பூசப்பட்டு, சுவர்கள், தூண்களின் அழகும், அவை மீதிருந்த எழுத்துகளும் வெகுவாக மறைந்து விட்டன. பாலமுருகன், பாலகிருஷ்ணன், ரிஷப வாகனத்தில் உமையுடன் வீற்றிருக்கும் சிவகிரி நாதர் மற்றும் இடும்பன், கடம்பன் ஆகியோரது திருவுருவச் சிலைகளை இங்கு காணலாம். இடும்பன் அருகில் வைக்கப்பட்டிருந்த மரத்தாலான ஒரு பெரிய கதையை எடுத்து நம் தலையில் வைத்து பூசாரி ஆசீர்வதித்த செயல் மிக விநோதமாக இருந்தது!

இடும்பன் கோயிலுக்கருகில் உள்ள இடும்பன் குளம் மிகப் பெரியது. இக்குளத்தில் நீர் நிரம்பினால் பழநி ஊருக்கே தண்ணீர் தட்டுப்பாடு வராது என்று எண்ணத் தோன்றியது. கோயில் வாசலிலிருந்து தொலைவிலுள்ள மலைத்தொடர்களின் அழகைக் கண்டுகளிக்க முடிகிறது. குளத்தை அடுத்துள்ள பரந்த நிலம் ஒரு காலத்தில் பெரிய விவசாய நிலமாக இருந்ததாகக் கூறுகின்றனர் உள்ளூர்வாசிகள்.

இடும்பன் மலை அடிவாரத்திலிருந்து மலை உச்சி வரை செல்ல படி வழிப்பாதை, மின்விளக்கு, மலைக்கோயில் சுற்றுப்பிராகார விரிவாக்கம், குடிநீர் வசதிகள் முதலியன செய்யப்பட்டு 10-2-2000 அன்று கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. அடிவார இடும்பன் கோயிலிலிருந்து திரும்பவும் கிரிவலப் பாதை வந்தடைந்து தொடர்ந்து நடப்போம்.

பழநியம்பதியில் நடக்கும் விழாக்களுள் ஒன்று அக்னி நட்சத்திர விழா. சித்திரை மாதத்தில் கடைசி ஏழு நாட்களும், வைகாசி மாதத்தில் முதல் ஏழு நாட்களும் கிரிவலம் வந்து வழிபாடு ஆற்றுதல் இவ்விழாவின் முக்கிய சிறப்பாகும். பூமியின் வெப்பம் மிகவும் அதிகரிக்கும் அக்னி நட்சத்திர நாட்களில் பக்தர்கள் கிரிவலம் வந்து அக்னியில் தோன்றிய சிவகுமரனை வணங்குகின்றனர். இக்காலத்தில் மல்லி, முல்லை, இருவாட்சி ஆகியவை பூத்துக்

குலுங்குவதால் இறைவனின் அருளாட்சியையும் உணரலாம்.

"சுரலோக, பரிமள கற்பகாடவி வரி அளி சுற்று
பூ உதிர் பழநி மலைக்குள் மேவிய பெருமாளே"

– பழநி திருப்புகழ்

(தேவருலகில் இருக்கின்ற, வாசனை வீசுகின்ற கற்பகக்காட்டில் வரிகளுடன் கூடிய வண்டுகள் சூழ்ந்து மொய்ப்பதனால் மலர்கள் உதிர்கின்ற பழநிமலை மீது வீற்றிருக்கின்ற பெருமை மிகுந்தவரே!)

"செற்றை வரும் பழனம், சோலை, இஞ்சி திகழ்வரை மேல்
செல்தை வரும் பழநிக் கந்தா! தேற்றிடு!"

– கந்தர் அந்தாதி.

(செற்றை எனும் மீனினம் உலவும் வயலும், சோலையும்
மதிலும் திகழ்கின்ற மலையின் மேல் மேகம் தவழ்கின்ற
பழநி வாழ் கந்தனே! அபயம் தந்தருள்!)

அதிகாலை வேளையில் மலையைச் சுற்றி வீசும் காற்று, உடலுக்கும், உள்ளத்திற்கும் ஒருசேரப் புத்துணர்ச்சி அளிக்கும் சஞ்சீவிக் காற்று என்பதாலேயே நம் முன்னோர்கள் அவ்வேளையில் கிரிவலம் செல்லும் முறையை வகுத்திருந்தனர். "இயற்கை வாயிலாக இறைவனைக் காணல் வேண்டும் என்ற எண்ணம் நெஞ்சில் நிறைந்து நிற்றல் வேண்டும்" என்பர் திரு.வி.க. நடந்து செல்லும்போது நம் வலதுபுறத்தில், கடப்பம், மா, பலா, நாகலிங்கம், அரசு, ஆல், வேம்பு போன்ற பலவித மரங்களைக் காணலாம். தவிர சித்தர்கள் வளர்த்த பல மூலிகைச் செடிகளும் உள்ளன என்று கூறுவர். எனவே பழநி மலையே மருந்து; நவபாஷாணங்களால் உருவாக்கப்பட்டு மலை மேல் மருந்தாகவே நிற்பவன் தண்டபாணி. முன்னொரு காலத்தில் பெரியாவுடையார் கோயிலைச் சுற்றி வில்வ வனமும், திரு ஆவினன்குடியில் நெல்லி வனமும், மலையைச் சார்ந்த பகுதியில் கடம்ப வனமும் இருந்ததாகக் கூறுவர்.

"மயிலேறும் ஐயன் காலுக்கு அணிகலம்
வானோர் முடியும் கடம்பும்"
"தகட்டிற் சிவந்த கடம்பையும் நெஞ்சையும்
தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தருளாய்."

– கந்தர் அலங்காரம்.

அக்னி நட்சத்திர விழாவின்போது முருகனைக் குளிர்விப்பதற்காகப் பக்தர்கள் பல நதிகளிலிருந்தும் தீர்த்தம் எடுத்துக்கொண்டு சென்று மலைமேலுள்ள முருகனுக்கு அபிஷேகம் செய்கின்றனர். இதனைத் தீர்த்தக் காவடி என்பர். இத்தகைய நீர் அபிஷேகத்தினால் முருகன் திருவுருவச்சிலை, மேலும் உறுதிப்படுவதாக ஆன்றோர்கள் கூறுகின்றனர். தீர்த்தக்குடமானது தலையிலே சுமந்து செல்லப்படுகிறது. மனித உடலின் சிறந்த சக்தி ஊற்றான

ஸஹஸ்ராரசக்ரம் எனும் நரம்புத் தொகுதி தலை மேல் உள்ளதால் தீர்த்தக்குடம் தலையிலே சுமக்கப்படுவது சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

பழநி மலையிலும் கிரிவலப் பாதையிலும் எண்ணற்ற விநாயகர் கோயில்கள் காணப்படுகின்றன. இதற்குக் காரணமான ஒரு சம்பவத்தையும் உள்ளூர்வாசிகள் கூறுகின்றனர். பண்டைக் காலத்தில் பண்டாரங்கள் மலைமீது தமக்கென பிரத்யேக அறைகள் கட்டி வைத்திருந்தனர். அவை அனைத்திலும் விநாயகர் திருவுருவச்சிலைகள் இருந்தன. பின்பு நடந்த கோயில் சீரமைப்பின்போது இவ்வறைகள் இடிக்கப்பட்டு விநாயகர் சிலைகள் அகற்றப்பட்டன. இவற்றுள் சிலவற்றை மலைமேல் வள்ளி சுனை அருகே காணலாம். கனமான சில சிலைகள் மலைமேலிருந்து உருட்டிவிடப்பட்டு கீழே கொண்டுவரப்பட்டனவாம்.

மலையில் சுமார் 64 விநாயகர் சிலைகள் உள்ளன என்று ஒரு கணக்கு உள்ளது. பல சிலைகள் கிரிவலப் பாதையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. பஞ்சமுக விநாயகர், தலைவலி தீர்க்கும் விநாயகர், நினைத்தது முடிக்கும் விநாயகர், தென் கைலாயகிரி நின்ற விநாயகர், ஆத்ம சித்தி விநாயகர் மற்றும் பல பெயர்களைக் கொண்ட விநாயகர் கோயில்களைக் கிரிவலப் பாதையில் காணலாம். மயில் மண்டபங்கள் தவிர, அழகு நாச்சியம்மன், காளிகாம்பாள், வனதுர்க்கை, கனக துர்க்கை, வீர துர்க்கை, ஐயப்பன் கோயில்கள் மற்றும் பல பெரியோர்களது ஆசிரமங்கள் ஆகியவையும் கிரிவலப் பாதையில் அமைந்துள்ளன.



செந்தமிழ் இயல்பனைத்தும் உரைத்த செவ்வேள்



சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பழனித் தலப் பகுதிகளில் நிலத்தடி நீர் மிகுதியாகச் சுரந்த காரணத்தினால் ஓங்கி உயர்ந்த மலையின் மீதிலும், அங்கிருந்த சுனைகளிலும் மடுக்களிலும் நீரோட்டம் அபரிதமாக இருந்திருக்கிறது. எனவே அங்கு காணப்பட்ட வாழைத் தோட்டங்களும், தென்னஞ்சோலைகளும், பலா மரங்களும் மற்றும் மலர்த்தோட்டங்களும் நிறைந்து செழுமையுடன் காட்சி அளித்திருக்கும். இந்த உண்மையை மக்கள் மனத்திலும் நாவிலும் நீங்கா இடம்பெற்ற பல அழகிய பாடல்கள் வலியுறுத்துகின்றன. அருணகிரியாரின் பெரும்பான்மையான

சித்ரா மூர்த்தி

பழநிப் பாடல்களில் பழநியின் இயற்கை வளம் பற்றிய குறிப்புகள் சிறப்பிடம் பெற்றுள்ளன.

'கொண்டல் சூழும் அம் சோலை மலர்வாவி கயல்
கந்து பாய நின்றாடு துவர் பாகையுதிர்
கந்தியோடகஞ் சேர் பழநி வாழ்குமர'

('பஞ்ச பாதகன்' - திருப்புகழ்)

(மேகம் சூழ்கின்ற அழகிய சோலைகளும், மலர்கள் நிறைந்த குளங்களும், மீன்கள் குதிரைப் பாய்ச்சலாகப் பாய்வதனால் நின்று அசைகின்ற துவர்ப்புச் சுவை கொண்ட பாக்குகளை உதிர்க்கின்ற பாக்கு மரங்களும் தன்பால் விளங்குகின்ற பழநியம்பதியில் வாழ்கின்ற குமரனே!)

'பலவின் முதுபழம் விழைவு செய்தொழுகிய
நறவு நிறைவயல் கமுகடர் பொழில் திகழ்
பழநிமலை வரு புரவல'

(தகரநறுமலர் - திருப்புகழ்)

(பலா மரத்தின் முற்றிய பழங்களினின்றும் கண்டோர் விரும்புமாறு ஒழுகிய தேன் நிரம்பப்பெற்ற வயல்களும் பாக்கு மரங்கள் நெருங்கிய சோலைகளும் சூழ்ந்து விளங்குகின்ற பழநிமலை மேல் எழுந்தருளியுள்ள, எப்பொருட்கும் இறைவனே!)

மேற்கூறிய அளவுக்கு தற்போது ஊரில் செழுமை காணப்படா விட்டாலும் சில தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் மலையைப் பசுமையாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், மலை மேல் மருந்தாக நிற்கும் தண்டபாணித் தெய்வம் இன்றும் பெருமை குன்றாமல் கம்பீரமாக நின்றுகொண்டிருக்கிறான்.

'மருளார் பிறவித்துயர் தீர மருந்தொன்றுண்டு; மாநிலத்தே
இருளார் வினைகள் இயலாமே இதயத் தெளிவு தரு மருந்து;
பொருளார் பரமன் அருட்கனலில் பூத்த மருந்து; பழநிமலை
முருகா முருகா எனு மருந்து முத்தி மருந்து காண் மனமே'

– என்று பாடுகிறார் கவியோகி சுத்தாநந்த பாரதியார். 'மனமே! இந்த உலகில் மயக்கம் நிறைந்த பிறவித் துன்பம் நீங்க, இருண்ட வினைகள் செயல்புரியாத வண்ணம் இதயத் தெளிவு தரும் மருந்து ஒன்று உண்டு. அது சத்தியப் பொருளாம் சிவபெருமானின் அருள் நெருப்பில் பூத்து பழநி மலையில் இருக்கின்ற முருகன் எனும் மருந்தாகும். இதைத் தெரிந்து கொள்வாயாக' என்று கூறுகிறார்.

கிரிவலம் வந்து பாத விநாயகரை மீண்டும் வணங்கும்போது அவருடனிருக்கும் நாகரைத் தரிசிக்கிறோம். யோகமூர்த்தியாக விளங் கும் முருகப்பெருமானுக்கும், நாகருக்கும் உள்ள ஆதார தத்துவத்தை காஞ்சி மஹா பெரியவர் மிக அழகாக விளக்கியருளியுள்ளார்.

"யோகம் என்பது பிராண மூலத்தைக் கண்டுபிடித்து அதோடு சேர்கிற வழி; பிராணசக்தி என்பது சரீரத்தில் மூலாதாரம் என்கிற



இடத்தில் குண்டலினி எனும் சர்ப் பரூபத்திலேயே இருக்கிறது. நமக்கெல்லாம் அதன் அகசக்தி தெரியவேயில்லை.

அது குண்டலாகாரமாகச் சுருட்டிக்கொண்டு தூங்குகிற பாம்பாகவே இருக்கிறது.

தூங்கும் பாம்பைத்தட்டி எழுப்பு வதற்காகத்தான் யோகசாதனைகள் இருக்கின்றன. சுப்பிரமணியர் யோக ஸ்வரூபம். அதனால்தான் அவரை எப்போதும் பாம்போடு சேர்த்துப் பேசுகிறோம். 'வாஸுகி தக்ஷகாதி ஸர்ப்ப ஸ்வரூபதரணாய' என்று முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஸ்ரீஸுப்ரமண்யாய நமோஸ்தே' என்ற கிருதியில் குறிப்பிட்டுள்ளார். நாகர் பிரதிஷ்டை, சஷ்டியில் நாகராஜபூஜை என்றெல்லாம் சுப்ரமண்யரை உத்தேசித்தே செய்கிறோம்' என்பது பெரியவா கூறும் விளக்கம்.

எனவேதான் மலையேறத் தொடங்கும் இடத்தில் நாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

மலைமீதுள்ள தண்டபாணியின் திருமேனி, போகர் எனும் சித்தரால் ஆக்கப்பட்டது. அதன் காலம் சரியாக நிர்ணயிக்கப்பட வில்லை. ஆனால், நம் மனதைக் கொள்ளைகொள்ளும் பழநிமலைக் கோயில் எடுப்பிக்கப்பட்ட காலத்தைக் குறிக்க மட்டும் சில சான்றுகள் உள்ளன. போகரது கோயில் சேர மக்களின் பேரன்பைப் பெற்ற காரணத்தால் சேரமான் பெருமான் மிக மகிழ்ந்து மலைக் கோயிலைக் கட்டினான். மலை ஏறும்போது நம்மை எதிர்கொள்ளும் முதல் சந்நதி சேர விநாயகருடையது. சேர அரசன் குதிரை மீது விளங்குகின்றான்.

தம்பிரான் தோழனாகிய சுந்தரர் வெள்ளை யானை மீது கயிலாயம் செல்ல, அவர் தோழராகிய சேர அரசன் தமது குதிரையின் மீது அவரைப் பின்தொடர்ந்து சென்று, இருவரும் கயிலையில் ஈசன் அருளைப் பெற்றனர் என்று ஏற்கனவே பார்த்தோம். அவ்விருவரின் காலம் 9ம் நூற்றாண்டென ஆராய்ந்துள்ளனர். ஆதலால் சேரமானால் கட்டப்பட்ட ஆலயம், நாளடைவில் பாண்டியர்களாலும் மற்ற பல அரசர்களாலும் பக்தர்களாலும் புதுப்பிக்கப்பட்டும் பிற்காலத்தில் பல நூதன மண்டபங்கள் கட்டப்பட்டும் இன்று காணப்படுகின்ற அளவுக்குப் புதுமைப் பொலிவு கொண்டுள்ளது.

பூக்கட்டு மண்டபம் என அழைக்கப்படும் மண்டபத்தில் நம்

கண்களைக் கவர்கிறார் கண்ணப்ப நாயனார். காளத்தி நாதருக்காகத் தன் கண்ணைப் பிடுங்கி அப்பும் அந்தத் திருவுருவம் நம் மனதை உருக்குகிறது. கூடவே அருணகிரிநாதரின் அழகிய பாடல் வரிகளும் நினைவுக்கு வருகின்றன:

'இதவிய காண் இவை தகையென வேடுவன் எய்திடும் எச்சில் தின்று லீலாசலம் ஆடும் தூயவன் மைந்த!' (வதன சரோருக - திருப்புகழ்)

"கூசாது வேடன் உமிழ்தரு நீராடி ஊன் உண் எனும் உரை
கூறாமன் ஈய அவன் நுகர் தரு சேடம்
கோதாம் எனாமல் அமுது செய் வேதாகம் ஆதி
முதல் தரு கோ லோக நாத'

(சிறிதும் அருவருப்படையாமல் வேடனாகிய கண்ணப்பன் வாயினின்றும் உமிழ்ந்த நீர் அபிஷேகத்தைப் பெற்று, 'இந்த ஊன் சுவையானது, இதை உண்டருள்' என்று சொல்லி நிரம்பக் கொடுக்க, அவ்வேடன் எச்சில் செய்து கொடுத்த பாக்கி, குற்றமுள்ளது என்று பாவிக்காமல் அமுது செய்தவரும், வேத ஆகமங்களுக்கு ஆதி முதல்வரும் ஆன சிவபிரான் பெற்ற தலைவனே!)

கண்ணப்பர் தவிர, சூரசம்ஹார சுப்ரமண்யர், பைரவர், பைரவி, தெய்வயானை திருமணக்கோலம், வீரவாகு தேவர் என்றும் உருவச் சிலைகளைக் காணலாம். மலையைச் சுற்றிலும் அருள் மேகங்களை நாடி நிற்கும் மயில் சிற்பங்களைப் போன்ற ஒரு சிற்பத்தை இங்கும் காணலாம்.

"மயில் நீல நிறம், நாத தத்துவத்தின் நிறமும் நீலமே.
முருகன் செந்நிறம், ஞானக் கனலின் தத்துவ நிறம் செம்மை.
ஆதலால் நாதம் சூழ்ந்து கடந்த ஞானம் ஆவான் தண்டபாணி"
என்கிறார் புலவர் சே.த.ராமலிங்கம்.

"திந்தி திமி தோதித் தீதித் தீதி
தந்த தன தானத் தானத்தான
செஞ்செணகு சேகு தாளத்தோடு நடமாடும்
செஞ்சிறியகால், விசாலத் தோகை,
துங்க அனுகூல பார்வை, தீர
செம்பொன் மயில் மீதிலே எப்போது வருவாயே"

- என்று கேட்கிறார் அருணகிரியார்.

மயிலின் அழகைப் பருகிய வண்ணம் வரும்போது, முருகனின் இச்சா சக்தியான வள்ளியின் தனிச்சந்நதியைக் காணலாம். 'சுக குறமகள் மணாளன் என மறை பலவும் ஓதி தொழ முது பழநி மேவு பெருமாளே' (ஒருவரை ஒருவர் - பழநித் திருப்புகழ்)

பதினெட்டாம் படியில் காவல் தெய்வமான கருப்பண்ண சாமியும், கன்னிமார்களும் எழுந்தருளியுள்ளனர். இங்கிருந்து தான் மலை ஏறுவதற்குரிய செப்பனிடப்பட்ட திருப்படிகளின் எண்ணிக்கை துவங்குகின்றது. புதிய படிக்கட்டுப் பாதை 1927ம்



ஆண்டு ஆகஸ்ட் மாதம் பக்தர்களுக்காகத் திறக்கப்பட்டது என்று ஆலயக் குறிப்பேடு ஒன்று கூறுகிறது. பழைய பாதையின் ஒரு பகுதியை இன்றும் கருப்பண்ண சாமி சந்நதியின் எதிரே காணலாம். விழாக்காலங்க்ளில் யானை இவ்வழியே செல்கிறது.

தொடர்ந்து படி ஏறிச் செல்லும்போது, பாதி வழியில் இடும்பன் கோயில் வருகிறது. இங்குச் சற்று இளைப்பாறினால், வையாபுரித் துரை திருவுருவம், இடும்பன் சந்நதி, குராமரம், குராவடிவேலன் சந்நதி, கும்பினி வேலாயுதசாமி சந்நதி ஆகியவற்றைக் காணலாம்.

மெய்யான அன்பு செய்து வேலன் அருள் பெற்றவர்களுள் வையாபுரித்துரை என்ற வள்ளலும் குறிப்பிடத்தக்கவர். பழநியாண்டவர் மீது பெரும் பக்தி பூண்டிருந்த இவர், காலையும் மாலையும் மலை ஏறிச் சென்று வேலவனைத் தரிசிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

ஒரு சமயம் வெளியூர் செல்லவேண்டி வந்தபோது இறைவன் தரிசனம் தடைப்படுமே என்று மிகவும் ஏங்கினார் வையாபுரி. இறைவன் அவர் கனவில் தோன்றி "நீ நினைத்தபோது உனக்குக் காட்சி தருவோம்; வையாபுரி என்ற குரலும் கேட்கும்" என்று கூறி மறைந்தார். தினசரி வழிபாட்டில், கண்டராதித்த சோழனுக்கு தன் சிலம்பொலி கேட்க வைத்த சிவபிரானின் குமாரனல்லவா! வையாபுரிக்கும் அவ்வண்ணமே அருள்புரிந்தான் பழநி ஆண்டவன்.

அகத்தூய்மையுடன் வரும் பக்தர்கள் புறத்தூய்மை பெற எண்ணி ஊரில் பெரும் ஏரியை வெட்டினார் வையாபுரி. இதுவே இன்று குராவடிவேலன் சந்நதியிலிருந்து நாம் தொலைவில் காணும் வையாபுரிக்குளம். அது இன்று மழைக்காலத்தில் மட்டுமே நிறைந்து காணப்படுகிறது. பக்தர்கள் 'வையாபுரிக்கு அரோஹரா' என்ற கோஷத்துடன் படி ஏறுகின்றனர். இடும்பன் கோயிலையொட்டி

சுமார் மூன்று அடி உயரத்தில் ஜமீன் பட்டத்து உடையுடன் தலைப்பாகையும் அணிந்து இரு கைகளையும் மார்பில் வைத்து வணங்கும் வையாபுரித்துரையின் சிலையைக் காணலாம்.

இடும்பன் சந்நதியை அடைந்து மெய்மறந்து நிற்கின்றோம். முருகன் விரும்பி அமர்ந்த சிவகிரியை நமக்காகச் சுமந்து கொண்டு வந்தவனும் குராவடியில் முருகனின் திருக்காட்சி பெற்ற பேறுடையவனுமல்லவா இடும்பன்! 'அடியார்கள் பால், தயிர், தேன், சர்க்கரை, மலர் ஆகிய பொருட்களை உன்னைப் போல் காவடியாக்கி கட்டிக்கொண்டு வந்து முதலில் உன்னை வழிபட்ட பின்னரே என்னை வழிபடவேண்டும்' என்று கூறி அவனுக்கு மலையில் நிரந்தரமான கந்த சாயுஜ்ய பதவியை அளித்த குராவடிக் குமரனையும் இங்கு தரிசிக்கலாம்.

குராமரத்தையும், குராவடிவேலவனையும் பக்தியுடன் வலம் வந்து வணங்கு கிறோம். குராமரத்தின் பெருமையைப் பாடும் அருணகிரியார்,

"கொந்துவார் குரவடியினும், அடியவர்
சிந்தை வாரிஜ நடுவினு, நெறிபல
கொண்ட வேத நன்முடியினு மருவிய குருநாதா!"

- என்று பாடுகிறார். முருகன் விரும்பி உறையும் அடி, நடு, முடி ஆகிய இம்மூன்று இடங்களுள் குராமர நிழலை அவன் போற்று வதாகக் குறிப்பிடுகிறார். (கொந்து = பூங்கொத்துகள்) (திருத்தணித் திருப்புகழ்) 'குராப் புனையும் குமார' - தேவலோகப் பெண்ணான தெய்வயானை, பாரிஜாத மலரையும், பூலோகவாசியான வள்ளி குரா மலரையும் தொடுத்து மாலையாக முருகப்பெருமானுக்கு அணிவித்தனர் என்கிறது குராமரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட திருவிடைக்கழித் தல வரலாறு.

'குராப் புனை தண்டையந்தாள் தொழல வேண்டும்' (கந்தர் அலங்காரம்) குராமலர், ஞானாசிரியன் உபதேச காலத்தில் தரிப்பதாகலின், "யானே பரம குரவன்' என விளக்க குராமலர் மாலையை அணிகிறான் முருகன் என்பது குகஸ்ரீ ரசபதி அவர்களது விளக்கம்.

இத்தகு மகிமை வாய்ந்த குராமரத்தின் மீது பழநியில் பக்தர்கள் ஆணி அடித்துப் படங்கள் மாட்டி வைத்திருக்கும் காட்சி மனத்தை மிகவும் வருத்துகிறது.

அடுத்ததாக நாம் பார்ப்பது, தெற்கு நோக்கிய கும்பினி வேலாயுதசாமி. கும்பினிக்காரர்கள் என்றழைக்கப்பட்ட ஆங்கிலேயர் களால் கட்டப்பட்ட சந்நதி என்கின்றனர் ஒரு சாரார். 'அது அகஸ்தியர் வழிபட்ட முருகன். கும்பமுநி என்பது திரிந்து கும்பினி என்றாயிற்று' என்கின்றனர் மற்றொரு சாரார். எப்படியானாலும் சரி, நம்முடைய வேலாயுதனல்லவா, அவனையும் வணங்கி, அகஸ்தியர்

வழிபட்ட சிவலிங்கத்தையும் வணங்குகின்றோம்.

காசியில் சிவபெருமானை வணங்கிய அகஸ்தியருக்குச் செந்தமிழ் மொழியையும், சிவஞானத்தையும் போதித்தவர் சிவபெருமான் என்கிறது தொல்காப்பியம். திருவாவினன்குடிச் சாரலில் தவம் செய்துகொண்டிருந்த அகஸ்தியருக்கு, முருகன் ஞான தேசிகனாகக் காட்சியளித்து, வேண்டிய வரம் அளிப்பதாகக் கூறினான். "உனது தந்தை எனக்கு அருளிய செந்தமிழ் இயல்பனைத்தும் விரித்து உரைத்தருள்க" என்று வேண்டினார் அகஸ்தியர். அவ்வாறே கந்தவேள் அருளிச்செய்த செந்தமிழ்ப் பிரிவான இயல், இசை, நாடகம் எனும் மூன்றையும் கொண்ட அகத்தியம் எனும் அருந்தமிழ் இலக்கணத்தைச் சூத்திர வகையாகச் செய்து வடவேங்கடம் முதல் கன்னியாகுமரி வரையிலான தமிழகமெங்கும் தண்தமிழ் மணம் பொங்கச்செய்து தனது பன்னிரண்டு மாணாக்கர்களுக்கும் அதனைக் கற்பித்தார் அகஸ்தியமுனிவர்.

பழநி ஆண்டவன் அகஸ்தியருக்குத் தமிழின் விரிவிலக்கணம் அருளிச் செய்ததை அருணகிரியார் பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

"இயலும் இசைகளும் நடனமும்
வகை வகை சத்யப் படிக்கினிது
அகஸ்தியர்க்குணர்த்தியருள் தம்பிரானே"
(விகட பரிமள திருப்புகழ்)

"குறுமுநிவன் இருபொழுதும் அர்ச்சித்து முத்திபெற
அறிவு நெறி தவநிலைகள் செப்புத் தமிழ்க் கினிய
குரு குமர பழநி வளர் வெற்புத் தனில் திகழு பெருமாளே"
(சிறுபறை - பழநித் திருப்புகழ்)

"செந்தமிழில் உனையே வணங்கு குருநாதர்
தென்றல்வரை முநிநாதர் அன்று
கும்பிட நல்லருளே பொழிந்த
தென்பழநி மேல் உகந்த பெருமாளே"
(மந்திரமதன - திருப்புகழ்)

பழநித் தலபுராண அகஸ்தியச் சருக்கத்தில், கவிராயர் மேலும் விரிவாகக் கூறுகிறார்:

"ஓது இரண்டையும் உறழ்ந்து தந்திடில், இரு நூற்று ஒரு பத்தாறு
பேதமாய் நடப்பன உயிர் மெய்யும் பெற்றியின் வருஞ்சார்பு
நீ தெரிந்திடென்று அவற்றுள விரி நிகழ்த்திட நீடு அதிகாரம்
கோதில் ஐந்து என வரன்முறை உணர்த்தி, வேல்
குழகன் ஏகினன் கோயில்"

இச்செய்யுளின் பொருளாவது: சொல்லப்பட்ட உயிர் பன்னிரண்டையும், மெய் பதினெட்டையும் பெருக்கிச் சேர்க்கின் இருநூற்றுப்பதினாறு வகையாக நடக்கும் அவ்வெழுத்துகள் உயிர்

மெய் எனப்படும். அத்தன்மையாகப் பிறக்கும் சார்பெழுத்துகளை நீ உணரக் கடவாய் என்று அவற்றின் விரிவனைத்தையும் தெரிவித்து, பெரிய அதிகாரம், குற்றமில்லாத எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்தாக வைத்து அவற்றையும் உபதேசித்து கந்த கடவுள் திருக்கோயிலுக்கு எழுந்தருளினான்.

“செந்தமிழ் நாளும் ஓதி உய்ந்திட ஞானமூறு செங்கனிவாயில் ஓர் சொல் அருள்வாயே”

என்று நாமும் பழநி ஆண்டவனைப் பிரார்த்தித்த வண்ணம் தொடர்ந்து படியேறுகிறோம்.

மனத்தை ஒருமுகப்படுத்தி, பழநி ஆண்டவனை எண்ணத்தில் இருத்திப் படியேறும்போது, நமது முன் கன்ம வினைகள் இடைமறித்து அதைக் கலைக்கும். “பாழ்த்த கன்மங்கள் போராடுதே” என்று வருந்துவார் தாயுமானவர். இதைச் சரியென்று நிரூபிப்பது போல் பக்தர்களைப் படிகளில் கூட்டம் கூட்டமாய்க் குரங்குகள் வழிமறிக்கும். கையில் கோல் கொண்டு போவோரைக் கண்டதும் ஒதுங்கி வழிவிடும். வைராக்கியத்தைத் தடியாகவும் மனத்தைக் குரங்கென்றும் கூறும் தத்துவார்த்தத்தை இதில் காணலாம்.

‘தளராமை எனும் ஒரு தடி கொண்டு அடிக்கவோ வலியிலேன்; வாய் கொண்டு உரைத்தலரிது; என் செய்கேன்? வள்ளல் உன் சேவடிக் கண் மன்னாது (நிலைபெறாது) உழலும் என் மனம், பேய் கொண்டு, கள்ளுண்டு, கோலினால் மொத்துண்டு பித்துண்ட வன்குரங்கோ?’

என்றார் வள்ளலார்.

அருணகிரிநாதர் காலத்திலும் பழநிப் படிகளில் குரங்கினங்கள் ஓடி மகிழ்ந்திருந்தன போலும்!

‘கரியினை’ எனத் துவங்கும் பழநிப் பாடலில்,

“பரிமளப் பாகலில் கனிகளைப் பீறி நற்

படியினிட்டே குரங்கினமாடும் பழநி’’ (நறுமணமுள்ள பலாப்பழங்களைக் கீறி அவற்றைப் படிகளில் போட்டுக் குரங்குக் கூட்டங்கள் விளையாடும் பழநி) என்று பாடுகிறார் அருணகிரியார்.



தமிழ் வழிபாட்டில் மகிழும் முருகவேள்



'சித்தன் வாழ்வு' என்ற அதன் பெயருக்கேற்ப பழநிமலைக் குகைகளில் பல சித்தர்கள் வாழ்ந்துவந்தனர். பொதுவாகச் சித்தர்கள் எந்தத் தெய்வத்தையும் அருவமாக மனத்தில் இருத்தி வணங்குவார்கள். ஆனால், விதிவிலக்காகத் திருமுருகனுக்கு பற்பல வடிவங்களைத் தந்து பூஜைக்குரிய முறைகளையும் வகுத்துள்ளதாக சித்தர் இலக்கியங்கள் கூறுகின்றன. மக்கள் அதிகமாக இவர்களைத் தேடிச் சென்ற காரணத்தினால், தனிமை விரும்பிகளான சித்தர்கள்

சித்ரா மூர்த்தி

பழநிக் குகைகளை விட்டு வெளியேறினர். இதன்பின், பொதுமக்கள் சிலர், குகைகளை சட்ட விரோதமான காரியங்களுக்காக உபயோகிக்கத் தொடங்கிய காரணத் தினால் அவை இன்று பெரும்பாலும் அடைக்கப்பட்டுவிட்டன. அழகு நாச்சியம்மன் கோயிலிலும் மலை உச்சியில் போகர் சமாதிக்கருகிலும் குகைகள் இருந்தன. கனக துர்க்கை கோயிலின் மேலே இருந்த குகையில் அமர்ந்துதான் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் பழநி ஆண்டவன் பெயரில் பல நூல்களைப் பாடினார் என்பர்.

சுமார் 500 அடி உயரமுள்ள பழநிமலை மீது சென்றுவர, புராதனமான படிக்கட்டுகள் (650), யானையடிப்பாதை, அபிஷேக நீர் கொண்டுசெல்லும் திருமஞ்சனப்பாதை ஆகியவை உள்ளன. சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் பழநி மலைக்குச் செல்லும் படிக்கட்டுகள், வெட்டுப் படிக்கட்டுகளாக (அங்கங்கே பாறையை வெட்டிச் செய்யப்பட்டவை) இருந்தன.

மக்கள் தடி ஊன்றியபடி மலை ஏறிச்சென்றனர். அப்போது மலைக்கோயிலில் கட்டிடங்கள் அதிகம் இருக்கவில்லை. மாதக் கிருத்திகையின்போது மட்டும் சுமார் நூறு பக்தர்கள் சேர்ந்து மலை ஏறிச்சென்று இறைவனுக்குத் தங்கள் கையாலேயே அபிஷேக ஆராதனை செய்துவந்தனர். ஒளி விளக்குகள் இல்லாததாலும் பாம்பு பயத்தினாலும் இருட்டும் முன் மலையிலிருந்து இறங்கி விடுவது வழக்கம்.

1925ம் ஆண்டு இப்போதுள்ள 650 படிகள் அமைக்கப்பட்டன. பண்டைய மலைப்பாதையில் வெட்டியிருந்த வழிக்கு அருகிலிருந்த முட்காடுகள் எல்லாம் நீக்கப்பட்டு, மூன்று வருடங்களில் புதிய படிக்கட்டுப் பாதை அமைக்கப்பட்டதாம். (பழநியில் வசிக்கும் சப்பாணிப் பண்டாரம் எனும் முதியவர் இந்நிகழ்ச்சிகளை உணர்ச்சி வசத்துடன் நினைவுகூர்ந்தார். இன்று இவர் வசிக்கும் அறையின் வாசல் கதவைத் திறந்தால் பழநி மலைக் காட்சி நம் கண் முன்னே அற்புதமாக விரிகிறது. இன்றளவும் பழநி ஆண்டியின் புகழைப் பாடல்களாக எழுதிவருகிறார் இவர்.)

படிஏறமுடியாதவயோதிகப் பக்தர்களும், மாற்றுத்திறனாளிகளும் பழநி ஆண்டவனைத் தரிசித்து மகிழ, WINCH எனப்படும் மின் இழுவை ரயில்களையும், Rope Car எனப்படும் மின் கம்பிவட ஊர்திகளையும் பழநி மலையில் அமைத்துள்ளனர். இவற்றிற்கான நுழைவாயில்களை கிரிவலப் பாதையிலேயே காணலாம்.

மின் இழுவை ரயில் சுமார் 35 பயணிகளை ஏற்றிக்கொண்டு எட்டே நிமிடங்களில் மலை உச்சியை அடைகிறது. காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை இயக்கப்படும் மூன்று ரயில்களுக்கு அழகான பெயர்களும் சூட்டப்பட்டுள்ளன: முருகா, வெற்றிவேல், திருப்புகழ்!

கடந்த 2004ம் ஆண்டு, 4 கோடி ரூபாய் செலவில் மொத்தம்

எட்டு பெட்டிகளைக் கொண்ட மின் கம்பிவட ஊர்திகளுக்கான கம்பிப் பாதை (320 மீட்டர்) அமைக்கப்பட்டது. உச்சியை அடைய எடுத்துக்கொள்ளும் நேரம், 3 நிமிடங்கள்! ஒரு மணி நேரத்தில் 350 பேர்வரை பயணிக்கலாம். பாதையின் இருபுறங்களையும் பசுமையாக்க இத்தாலிய, கொரிய நாட்டுப் புற்கள் நடப்பட்டிருக்கின்றன. காலை 7 முதல் இரவு 9 மணி வரை (மதியம் 1:30 முதல் 2:30 மணி நீங்கலாக) இவற்றில் பயணிக் கலாம். அதிக கொள்ளவுப் பெட்டிகளுடன் இரண்டாவது கம்பிப்பாதை அமைக்கும் திட்டமும் உள்ளதாம்.

பழநி என்றதுமே பஞ்சாமிர்தம் நினைவுக்கு வரும். வின்ச்சிலிருந்து இறங்கி வெளியேறும்போது கண்ணில் தெரிவது பஞ்சாமிர்த தொழிற்சாலை. பக்தர்களின் உபயோகத்திற்கென இங்கு பஞ்சாமிர்தம் மிகவும் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுகிறது.

கிரிவீதியைச் சுற்றிலும் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப் பட்டு, மலையின் சுற்றுச் சுவர்களும் உயர்த்திக் கட்டப்பட்டுள்ளன. பயணிகள் நலனுக்கென விசாலமான கான்கிரீட் பாதையும், ஆங்காங்கே கட்டணக் கழிப்பிடங்களும் குளியலறைகளும் கட்டப்பட்டுள்ளன. கிரிவலப் பாதையை அதன் புனிதம் கெடா மல் சுத்தமாக வைத்துக்கொள்வது நம் ஒவ்வொருவருடைய பொறுப்பாகும்.

முருகனைப் போற்றி அன்பால் குவியாக் கரங்களும், அவன் பதாம்புயத்தை வணங்காத் தலையும் தனக்கு இப்படி வாய்த்தனவே என்று வருந்தும் அருணகிரி நாதர் ஒரு பாடலில்,

'விருப் பொடு உன் சிகரமும் வலம் வருகிலன்'

என்று நொந்து கொள்கிறார். குமரப் பெருமான் உறையும் மலைகளை அன்புடன் வலம் வரவேண்டும் என்று கூறுகிறார். இறைவன் ஆலயத்தை வலம் வருவதுவே கால்கள் உண்டானதன் பெரும் பயனாகும் என்பதை அப்பர் பெருமானும் பாடியுள்ளார்:

"கால்களால் பயன் என்ன? கறைக் கண்டன் உறை கோயில்
கோலக்கோபுர கோகரணம் சூழா கால்களாற் பயன் என்?"

பழநிப் பெருமான், மலைக்கொழுந்து ஈசனுடனும் உமையுடனும் உறையும் பழநிமலையை நாமும் விருப்பொடு வலம் வந்து வணங்குவோம்!

பழநிமலை ஏறி யானையடிப் பாதையில் செல்லும்போது, வள்ளியை வேடவடிவில் வந்து முருகன் தழுவியது, இடும்பன் மலைகளைத் தூக்கி வருவது ஆகிய காட்சிகளைச் சுதை வடிவச் சிற்பங்களாகக் காணலாம். வள்ளிசுனை எனும் நீர்நிலையும் உள்ளது. யானையடிப்பாதை வந்தடையும் இடத்திற்கருகே அரசமரத்தடியில் வீற்றிருக்கும் செல்வ விநாயகரைத் தரிசிக்கலாம். யாககுண்டம் அமைக்கப்படும்போது, அதற்குரிய மண் இவ்விநாயகர் அருகே எடுக்கப்படுவது மரபாகும்.


மலை உச்சியைச் சென்றடையும்போது, ஓதுவார்களின் இனிய தேவார, திருப்புகழ்ப் பாடல்கள் ஒலிபெருக்கிகள் மூலம் நம் செவியை வந்தடைகின்றன. மலையிலுள்ள கல்வெட்டுகள் எண் *5, 6, 7* இவற்றில் தமிழ் ஆண்டுகள், மாதங்கள், நாள், நட்சத்திரம், திதி முதலியவை குறிக்கப்பட்டுள்ளன. இச் சான்றுகளிலிருந்து பழநி முருகன் கோயிலில் தமிழ் வழிபாட்டு முறை முற்காலத்தில் இடம்பெற்றிருந்தது என்பதை அறியமுடிகின்றது என்கிறார் ஆராய்ச்சியாளர் முனைவர் பெ.சுப்பிரமணியம். வெள்ளிக்கிழமை ரேவதி நட்சத்திரத்தன்று மன்னர்கள் தானம் அளித்தனர் என்ற கல்வெட்டுக் குறிப்பைப் பார்க்கும்போது கொடை அளிப்பதற்கும் முருகனை வழிபடுவதற்கும், வெள்ளிக்கிழமையை ஏற்ற நாளாக அம்மன்னர்கள் கருதியிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இன்றும் பழநி முருகன் கோயில் விழாக்கள் தமிழ்மாத நட்சத்திரங்களின் அடிப்படையிலேயே கொண்டாடப்படுகின்றன. பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், தைப்பூசம், திருக்கார்த்திகை, அக்னி நட்சத்திர விழா ஆகியவற்றை உதாரணமாகச் சொல்லலாம். கந்தசஷ்டி விழா, திதியை அடிப்படையாகக்கொண்டு நடத்தப்படுகிறது.

பழநிமலைக் கோயிலில் பூஜையின்போதும் திருவிழாக்காலங் களிலும், 'கட்டியம் கூறுதல்' என்ற சிறப்புத் தமிழ்ப்பாடல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. கட்டியம் என்பது பழநி முருகனின் பெருமைகளையும் வீரத்தினையும் போற்றிப் பாடப்படும் தமிழ் வாய்மொழிப் பாடல்களாகும். நாட்டுப்புறப் பாடல்களிலும், ஓலைச்சுவடிகளிலும் பழநிமலை ஆண்டி, பழநி ஆண்டி, பழநி வேலன், வைகாபுரி ஆண்டி, முத்தையன் போன்ற தமிழ்ச்சொற்களே மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

போகராலே பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆண்டவன் திருமேனித் தொண்டர்கள், முறையே அவரும், அவர் மாணவர் புலிப்பாணியும், அவருக்குப் பின்னர் வந்த தலைமுறையினரான பரம்பரை சைவ மரபினராகவும் இருந்தனர். மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரது *(1623-1659)* தளவாய் ராமப்ப அய்யன் பழநிக்கு தரிசனத்திற்கு வந்திருந்த சமயம், ஆதி சைவ மறையோர்களைத் தருவித்து, அவர்களைப் பூசாரிகளாகவும் முன்னவரைத் திரு அணுக்கத் தொண்டர்களாகவும் நியமித்தார் என்ற விவரம் ராமப்ப அய்யன் செப்புப் பட்டயத்தில் காணக் கிடைக்கிறது' என்று பழநி தேவஸ்தான வெளியீடு *(1960)* குறிப்பிட்டுள்ளது. அருணகிரிநாதரும்,

"நாளிகேரம் வருக்கை பழுத்துதிர்
சோலை சூழ் பழநிப்பதியில் திரு
ஞான பூரண சத்தி தரித்தருள் பெருமாளே"

(சத்தி - வேல்) என்றே பாடுகிறார். ராமப்ப அய்யன் காலத்தில் வடமொழி ஆக்கம் தீவிரப்பட்ட பின்னரே முருகன் 'தண்டாயுதபாணி'



போகர் சமாதி

என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்ற ஒரு பரவலான கருத்து நிலவுகிறது.

தற்போது கோயில் திருவிழா நிகழ்ச்சிகளின்போதும் சிறப்பு வழிபாடுகளின்போதும் முதலில் ஆகமங்களிலிருந்து வடமொழி மந்திரங்கள் சொல்லப்படுகின்றன. பிறகு ஓதுவார்கள் திருமுறைப் பாடல்களைப் பாடுகின்றனர். தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையின்படி 19-10-97 அன்றிலிருந்து பழநி முருகனுக்குத் தமிழ் அர்ச்சனை நடத்தப்பட்டு வருகிறது. எந்த மொழியில் அவனைத் துதித்தாலும் அவன் நம் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளத் தவறுவதே இல்லை என்பது அடியார்கள் அனுபவம். மழை பொய்க்காத காலத்தில் மலை உச்சியிலிருந்து கீழே நோக்கும்போது இயற்கைக் காட்சிகள் நம் கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவர்வனவாக இருப்பதைக் காணலாம். (கடந்த மூன்று ஆண்டுகளாக மழை பொய்த்துவிட்டதால் வரட்டாறு, இடும்பன்குளம், ஷண்முகநதி, சரவணப் பொய்கை எதிலுமே தண்ணீர் இல்லை. வேண்டுதல் காரணமாக முடிகாணிக்கை செலுத்துபவர்கள் கூட குளிப்பதற்குப் போதுமான நீர் இல்லை எனும் சமீபத்திய செய்தி மனதை உருக்குகிறது.) மலைமேல் நிற்கும்போது உடலை வருடும் இதமான காற்று உடலுக்கும் உள்ளத்திற்கும் புத்துணர்ச்சி அளிக்கிறது. கிழக்கே இடும்பன் மலை, தெற்கே

குறிஞ்சி ஆண்டவர் குடியிருக்கும் கொடைக்கானல் மலைத்தொடர், வடக்கே திருஆவினன்குடி ஆகியவற்றை மலைமீதிலிருந்தே கண்டு மகிழலாம்.

கொடிமரத்தின் அருகே விழுந்து வணங்கி கோயிலுக்குள் செல்லும்போது தல விநாயகராக பாலசுப்பிரமணிய விநாயகரைத் தரிசிக்கலாம். பல ஆண்டுகள் முன்புவரை கோயிலை விருப்பம்போல் வலம் வந்து எல்லாப் பகுதிகளையும் தரிசிக்கும்படி வசதி இருந்தது. தற்போது கோயிலின் பாதுகாப்பு கருதி ஏற்படுத்தப்பட்டுள்ள கடும் விதிமுறைகளினால் ஆங்காங்கே தடுப்புக் கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் வடக்கு பாகத்தில் குடி கொண்டுள்ள மலைக்கொழுந்து சிவனையும், அம்மையையும் சுலபமாகச் சென்று தரிசிக்க முடிவதில்லை. இறைவனும் இறைவியும் விநாயகருடன் வீற்றிருக்கும் இந்த இடம்தான் பழநி மலையின் உச்சியாகும் என்பதறிந்து உள்ளம் சிலிர்க்கிறது. கோயிலில் சஷ்டி விழாவின் போது இந்த அம்மையிடமிருந்துதான் முருகப்பெருமான் வேல் வாங்கிச் செல்கிறான்.

உள் சுற்றில் வலம் வரும்போது, தெற்குப் பகுதியில் கயிலாச நாதரையும், சண்டீசரையும் கண்டு வணங்கலாம். தென்மேற்கு மூலையில் போகரது சமாதி விளங்குகிறது. அங்கு அவர் வழிபட்ட தாகக் கருதப்படும் புவனேஸ்வரி அம்மையின் திருவுருவமும், மந்திரச் சக்கரங்களும், மரகத லிங்கமும் வைக்கப்பெற்று வழிபாடு செய்யப்படுவதைக் காணலாம். இங்கிருந்துதான் பழநி ஆண்டவன் சந்நதியில் திருவடிநிலைக்கு ஒரு சுரங்கப்பாதை உள்ளதென்றும் அதில் இறுதியாகச் சென்ற போகர் திரும்பிவரவில்லை என்றும் செவி வழிச் செய்திகள் கூறுகின்றன. இக்கோயிலின் தென்பாகத்தில் கன்னிமார் எனும் சப்த கன்னிகைகளின் சந்நதியும் கோயில் உட்பிராகாரத்து ஈசான்ய மூலையில் நவ வீரர்களுக்கு சந்நதியும் உள்ளன. பன்னிரண்டு அழகிய வேலைப்பாடுடைய தூண்களை உடைய மகாமண்டபத்தில் நுழையும் பக்தர்களுக்கு ஆண்டவன் பள்ளியறையையும், சிவலிங்கம், நடராஜப்பெருமான், ஷண்முகர் மற்றும் உற்சவமூர்த்தியாகிய சின்னக்குமரர் ஆகியோரையும் தரிசிக்கலாம்.

இனி நாம் இதுவரை காத்திருந்த அந்தப் பொன்னான தருணம் வருகிறது. ஆயிரங்கோடி காமன் அழகெல்லாம் திரண்டு ஒன்றாகி இலங்கும் அருள்மிகு தண்டாயுதபாணியைத் தரிசனம் செய்ய இருக்கிறோம் என்ற எண்ணத்திலேயே உடல் புளகாங்கிதம் அடைகிறது. பக்தர்களின் 'அரஹரோஹரா' என்ற பேரொலிக்கு இடையே பழநி ஆண்டவனைத் தரிசித்து மெய் மறக்கிறோம்.

"தணியாத சிந்தையும் அவிழ்ந்தவிழ்ந்து
உரை ஒழித்து என் செயல் அழிந்தழிந்தழிய

மெய்ச்சிந்தை வர என்று நின் தெரிசனை படுவேனோ”

- எனும் திருப்புகழ்ப் பாடலை வாய்விட்டுப் பாட ஆசை வருகிறது. அவன் அழகைக் காண, 'நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே', 'கோடாத வேதனுக்கு யான் செய்த குற்றம் என்?' எனும் கந்தர் அலங்கார வரிகள் செவிகளில் ரீங்கரிக்கின்றன. 'பெருகிய கருணைக்கடல் அலம்பு கண்கள்' நம்மை 'வந்து விட்டாயா?' என்று கேட்பது போன்ற கருணைப்பார்வை! ஒப்பற்ற திருமுகமும், புன்னகை தவழும் திருவாயும், மதாணி துலங்கும் திருமார்பும், ஒல்லிய இடுப்பில் வைத்த இடக்கரமும், திருத்தாள்களும், காண்போரைப் பரவசத்தில் ஆழ்த்துகின்றன. போகரால் வடிக்கப்பட்ட ஆண்டவனின் அழகுத் திருமேனி, எண்ணற்ற பழநி அதிசயங்களுள் முதன்மை இடம் பெறுவதாகும் என்பதில் ஐயமேதும் இல்லை.



அனுசக்தியின் ஆற்றல் கொண்டது நவபாஷாணம்



பழநி ஆண்டவன் ஜடை ஆண்டியா அல்லது மொட்டை ஆண்டியா என்ற எண்ணம் பலருக்கு எழுகிறது. மொட்டை ஆண்டிப் படத்தை வீட்டில் வைத்தால் கெடுதல் என்ற மிகத் தவறான எண்ணமும் சிலருக்கு உள்ளது. மூர்த்தியின் திருவுருவத்தை அபிஷேக நேரத்தில் உற்றுக் கவனித்தால் அவன் மொட்டை ஆண்டி அல்ல என்பது புரியும். பாலசுப்பிரமணியக் கவிராயர் கூறும் 'பிடர்பிடந்த புன்குஞ்சியும்' எனும் சொற்களிலிருந்தும் இது விளங்கும். (பொருள்: பிடரியிலே தூங்கும் குடுமி)

"யார் வேண்டினாலும் கேட்ட பொருள் ஈயும் தியாகாங்க சீலனான" பழநி ஆண்டவன் நமக்கு ஒரு நாளும் கெடுதல் செய்யமாட்டான் என்பது உறுதி. கோடானுகோடி செல்வங்களைத் தன் காலடியில் வந்து கொட்டியபோதும், தனக்கென்று ஒரு கௌபீனமும், தண்டமும் மட்டுமே கொண்டு நிற்கும் இப்பால துறவியைக் காண மலை ஏறிவரும் பக்தர்களின் பெரும் எண்ணிக்கையே இதற்குச் சான்று. அவன் முற்றும் துறந்த கோவணாண்டியாக நிற்பதனால்தான் நாம் எல்லாப் பேறுகளையும் பெறமுடிகிறது. பழத்தை நாடியவன், தானே ஞானப்பழமாகி நின்ற கோலத்தை எவ்வாறு வர்ணிப்பது?

பழநி ஆண்டவனின் திருவுருவத்தைப் போகர் கிழக்கு நோக்கியே நிறுவினார் என்றும், பிற்காலத்தில் தேவதச்சன் உதவியால் கோயிலை நிர்மாணித்த சேர அரசன், அதை மேற்கிலுள்ள தனது நாடாகிய இன்றைய கேரளத்தை நோக்கி இருக்கும்படி பிரதிஷ்டை செய்தான் என்றும், அதனாலேயே கேரளம் செழிப்பாக விளங்குகிறது என்றும் சில கருத்துகள் நிலவுகின்றன. திருப்பரங்குன்றத்தில் வடக்கு நோக்கியும், செந்தூரில் தெற்கு நோக்கியும், பழநியில் மேற்கு நோக்கியும், பழமுதிர்சோலை, சுவாமி மலை, திருத்தணி ஆகிய தலங்களில் கிழக்கு நோக்கியும் நிற்கும் முருகப்பெருமான் எல்லாத் திசைகளுமே நல்லவைதான் என்று உணர்த்தத்தானோ அவ்வாறு நிற்கிறான் என்று எண்ணத் தோன்றுகிறது.

பழநிமலை மீது நிற்கும் பாலதுறவியின் உருவத் திருமேனியைப் பற்றிய சில அதிசய செய்திகளைப் பார்ப்போம். கோயில் எழுந்த காலத்தே பழநிமலை, போக சித்தருக்குரிய உறைவிடமாயும் மற்றும் பல சித்தர்களின் சித்துகளால் மிகுந்த நன்மை அடைந்த இடமாயும் விளங்கி இருக்க வேண்டும். உடலுக்கு உறுதி தரும் பல மருந்துகளையும் அவற்றிற்கு ஆதாரமான நூல்களையும் ஆக்கிக் கொடுத்தனர் அச்சித்தர்கள். அருணகிரிநாதரும் தான் எழுதிய சித்து வகுப்பில் எண்ணற்ற தாவரங்கள், மூலிகைகள், பச்சிலைகள் இவை பற்றி முருகன் தனக்கு உபதேசித்ததை மிக விவரமாகப் பாடியுள்ளார்.

இவர்களுக்கெல்லாம் மேற்பட்டு, மக்கள் உடற்பிணியும் உயிர்ப்பிணியும் நீங்கி முக்தி நிலையை அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் ஒப்பற்ற பழநி ஆண்டியின் திருவுருவத்தைப் பேராற்ற லுடன் நவபாஷாணத் திருமேனியாக நிலைபெறச் செய்தருளினார் போகர். நெஞ்சக் கனகல்லை நெகிழ்ந்துருகச் செய்யும் இறைவன் திருமேனியை வடிவமைத்து நமக்குப் பெரும் பேறு கிட்டச் செய்த போகரைப் பற்றிய ஒருசில செய்திகளை நாம் அறிந்திருக்க வேண்டியது மிக அவசியமாகும்.

பதினெண்சித்தர்கள் அவதரிப்பதற்கு முன்னால் நவநாத சித்தர்களே இருந்தனர். இவர்கள் இமயத்தில் வாழ்ந்தனர். காலாங்கி

நாதரைத் தேடி அங்கு சென்ற போகர், அவரைத் தம் குருவாக ஏற்றுக் கொண்டார். நீண்ட தவத்திற்குப் பிறகு, வானமார்க்கமாக சீன தேசம் சென்ற போகர், அங்கிருந்த வண்ணம் எண்ணற்ற நூல்களை எழுதினார் என்றும், பல்வேறு மூலிகைகளைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தார் என்றும் செய்திகள் கூறுகின்றன. அவருக்குத் தெரியாத வித்தைகளே இல்லை என்னுமளவிற்கு அஷ்டமாசித்திகளும் கைவரப்பெற்றிருந்தார் போகர்.

அஷ்டமாசித்திகள் என்பவை எவை?

அணிமா – அணு போல் சிறிதாகுதல்
மகிமா – மேரு போல் பெரிதாகுதல்
லகிமா – காற்றுப்போல் லேசாகுதல்
பிராப்தி – எல்லாவற்றையும் ஆளுதல்
வசித்துவம் – அனைவரையும் வசியப்படுத்துதல்
பிரகாமியம் – கூடு விட்டுக் கூடு பாய்தல்
ஈசித்துவம் – விரும்பியன செய்து முடித்து அனுப்பித்தல்.

போகரின் ஆலோசனைப்படிதான், அவரது சீடரான கருவூர்ச் சித்தர், தில்லை நடராஜப் பெருமானின் திருவுருவத்தைத் தங்கத்தில் வடித்துக் கொடுத்தார். தான் கூறியதற்கு மாறாகச் சிலையில் சிறிது செம்பு கலக்கப்பட்டதை அறிந்து கருவூராரைச் சிறையிலடைத்தான் அரசன் இரணியவர்மன். அதை அறிந்த போகர், சொக்கத் தங்கச் சிலையைப் பார்ப்போர் கண்பார்வை பறிபோய்விடும் என்பதனாலேயே செப்பு கலக்கப்பட்டது போன்ற விஷயங்களை அரசனுக்கு எடுத்துக் கூறி கருவூர்ச் சித்தரை சிறை மீட்டார். அத்துடன் நடராஜப்பெருமானுக்குத் தில்லையில் பெரும் கோயிலை எழுப்பும்படியும் அரசனைப் பணித்தார்.

போகரின் உபாசனைத் தெய்வமான புவனேஸ்வரி அன்னை ஒரு நாள் அவர் முன் தோன்றி அவரைப் பழநிக்குச் செல்லும்படி உத்தரவிட்டாள். “சித்தர்களுள் பெரும் சித்தனான முருகனை நோக்கித் தவமியற்றுவாயாக. அவன் வந்தருளி உன்னை வழி நடத்துவான்” என்று கூறி மறைந்தாள் அன்னை. ஆகாயமார்க்கமாக சென்றுகொண்டிருந்த போகர் தன் அகக்கண்ணால் பழநி மலையைக் கண்டு அதையே தன் பூஜைக்கு ஏற்ற இடமாகத் தேர்ந்தெடுத்தார்.

அவ்வாறு அவர் பழநி மலைக்கு வந்தபோது, அங்கு மாறுபட்ட சில அதிசயக் காட்சிகளைக் கண்டார். அவை வெள்ளைக்காகம், சிவப்பு நாரை, பச்சை மலை மற்றும் சிவப்பு மலை என்பன என்றும், அவை பற்றிய சித்திரங்களைப் பழநிமலை போகர் சமாதியில் காணலாம் என்றும் கூறுகிறார் ஆராய்ச்சியாளர், முனைவர் நடேச கணபதி அவர்கள்.

‘நவம்’ என்றால் ஒன்பது, ‘பாஷாணம்’ என்றால் விஷத்தன்மை உடைய பொருட்கள் அல்லது மருந்துகள் என்று பொருள் கொள்ளலாம்.



நவபாஷாணக் கலவை என்பது 96 வகை மூலிகைச் சாறுகளை உடையது. இதனைத் தயாரிக்க 15 மாதங்களாகும். இக்கலவை நிலைக்கு வந்ததும் காற்றழுத்தத்திற்கு உட்படுத்தி திடப்பொருளாக்குவர். நவபாஷாணத்தைக் கட்டியதும் அது அணுசக்தியின் ஆற்றலைப் பெற்று விடுகிறது என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இதைக் கட்டும் சாஸ்திரத்தை அகத்தியரிட மிருந்து கற்றார் போகர். போகர் நவபாஷாணக் கூட்டிற்கு இரண்டு முறைகளை வகுத்தார் என்பது ஆய்வாளர், முனைவர் மு.குருவம்மாள் அவர்கள் கூறும் கருத்து.

பழநியை அடுத்த பூம்பாறையில், தாவரச் சாற்றினால் உப்பைக் கட்டி சக்திதன்மை மிக்க குழந்தை வேலப்பராகவும், பழநியில் சுண்ணத்தால் கட்டி சிவத்தன்மை மிக்க தண்டாயுதபாணியாகவும் ஆக்கினார் என்கிறார். சுண்ணக்கட்டு நவபாஷாணம் வெளிப் படுத்தும் வெப்பம், மந்திரசக்தி வாய்ந்த பஞ்சபூத வெக்கையாகும். இது நோய்க்கிருமிகளை மாய்க்கும். சந்தனக் காப்பிடும்போது தோன்றும். பழநி ஆண்டவன் தலையில் இரவு வைக்கப்படும் சந்தனம், மறுநாள் காலை பக்தர்களுக்கு மருந்தாகச் சிறு உருண்டைகளாக்கி அளிக்கப்படுகிறது. (இதை உடனே உண்ணும்படி பக்தர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்).

போகர் நிறுவிய நவபாஷாணத் திருமேனி நவகிரகத் தொடர்புடையது என்பர். பாதரசம் (சூரியன்), மதார்சிங்கி(சந்திரன்), தாலிகம்(சனி), லிங்கம்(செவ்வாய்), கந்தகம்(புதன்), வீரம்(ராகு), பூரம்(கேது), வெள்ளை (குரு), மனோசிலை(சுக்கிரன்) எனும் ஒன்பது பொருட்களும் ஒன்பது கோள்களுடன் சேர்ந்து நம்மை வழிநடத்துகின்றன. பழநி ஆண்டியை நவகிரக நாயகன் எனலாம். அவனை வணங்கினால் நவகிரகங்களும் நம் வசப்படும்.

கருமேனி கொண்ட மூர்த்தமாக அமைக்கப்பட்டுள்ளது என்றாலும், ஆண்டவன் சிலையின் உண்மையான நிறம் கரும்பச்சை என்றும், சூரிய ஒளி பட்டால் மட்டுமே இது விளக்கமாகத் தெரிய வாய்ப்புண்டு என்றும் கூறுவர். இத்திருமேனி காற்று, நீர், எண்ணெய், தேன், இவற்றால் கரையாது. நெருப்பினால் பாதிக்கப்படாது. பால், பன்னீர், சந்தனம், விபூதி, பஞ்சாமிர்தம், தயிர் இவற்றால் அபிஷேகப் பிரியனுக்கு அபிஷேகம் செய்யப்படும்போது அவை அனைத்துமே மருத்துவக்குணங்கள் பெறுகின்றன. கண்ணால் தரிசிக்கும்போது நம் உடலில் கதிர் வீசப்படுகிறது. பிரசாதங்களை உண்பதால் நோயற்ற வாழ்வு வாழலாம்.

நவபாஷாணம் கொண்டு, யாருமே செய்திராத சிலையை வடித்த போகர், ஆகம விதிப்படி செய்த சுத்தமான விபூதியால் அதற்கு அபிஷேகம் செய்து அதைத் தன் உடம்பெங்கும் பூசிக் கொண்டார். மலைவாழை, நெய், நாட்டுச்சர்க்கரை, பேரீச்சம்பழம், தேன் எனும் ஐந்து பொருட்களால், ரசாயனம் ஏதும் கலக்காமல் செய்த பஞ்சாமிர்தத்தை ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்து அதையே உணவாக உண்டார். இதனால் உடலும், உள்ளமும் உரம் பெற்று, நீண்டகாலம் நோயற்ற வாழ்வு வாழ்ந்தார். மனித குலத்திற்கு ஏற்படும் அனைத்து நோய்களையும் நீக்கும் சர்வரோக நிவாரணியான நவபாஷாண முருகனை உருவாக்கி, இன்றளவும் அருவமாக இருந்து மக்களுக்குப் பெரும் தொண்டாற்றிவருகிறார் போகர் என்றே கூறலாம்.

பழநி ஆண்டவன் மீது 97 பாடல்களைப் பாடியுள்ள அருணகிரிநாதர், ஒரு பாடலில்,

"குலவு பழநி மலையோனே!
அறமு நிறமும் அயிலும் மயிலும்
அழகும் உடைய பெருமாளே!"

('தமரும் அமரு' - திருப்புகழ்)

என்று விளிக்கிறார். பெருமாள் - பெருமையில் மிக்கவன். பழநி ஆண்டவனிடம் அறம், நிறம், ஞானம்,(அயில்), பிரணவம்(மயில்) அழகு, பெருமை ஆகிய ஆறும் அடங்கியுள்ளன என்கிறார். அழகுத் தெய்வம், முருகன். அழகை விரும்பாதவர்களே இருக்க மாட்டார்கள். எனவே அவனைத் துதிப்போர்க்கு மேற்கூறிய ஆறும் எளிதில் கைவரப்பெறும்.

மற்றொரு பழநிப்பாடலில் ஞானபண்டிதனின் திருவடிச் சிறப்பைப் பற்றிக்கூறுகிறார்.

"பழைய பழநி அமர்வோனே
செறிவும், அறிவும், உறவும் அனைய
திகழும் அடிகள் தரவேணும்"

('கரிய பெரிய' திருப்புகழ்)

செறிவு - நிறைவு, நிறைவும், அறிவும், உறவும் போன்ற உமது அழகிய திருவடிகளைத் தந்தருள்வாயாக என்கிறார். ஞானமே ஆண்டவனது திருவடிகள். இறைவன் திருவடிகளைத் தந்தருள்வானேயானால், ஆன்மா ஞானத்துடன் கலந்து, ஞானமயமாக நின்றுவிடும். ஆன்மாக்கள் என்றும் அற்றுப்போகாத உறவுடன் கூட விரும்புவது அத்திருவடிகளையே.

முத்துஸ்வாமி திட்சிதரின் அரிய க்ருதி ஒன்று தண்டபாணித் தெய்வத்தின் மகிமையை அழகாக விவரிக்கின்றது. 'தண்டாயுத பாணியும்' என்று துவங்கும் அப்பாடலின் பொருள் பின்வருமாறு:-

"தண்டாயுதத்தைக் கையில் ஏந்தியவர். அசுரக் கூட்டங்களைத்

தண்டித்தவர். தேவர்கள் போற்றும் கருணைக்கடல். நூறு கோடி சூரியர்களின் ஜோதி உடையவர். சூரிய மண்டலத்தைப் போல் ஜ்வலிக்கும் குண்டலங்கள் உடையவர்.

புன்னகை உடைய கமலவதனம் உடையவர். ஸ்ரீகிருஷ்ணனை மாமனாகக் கொண்டவர். தேவரும் முனிவரும் பிரம்மனும் மாலும் வணக்கம் செலுத்துபவர். மாயையின் உற்பத்தி ஸ்தானமானவர்.

சிவாம்சமான பிருதிவி தத்துவமானவர். ஆகாச அம்சமாக வியாபித்து பூக்களின் நறுமணத்துடன் விளங்குபவர். தூபங்களின் வாசனையைப் பரப்பும் வாயுவின் அம்சமானவர். தீபாலங்காரத்தின் மூலம் தனது அக்னி அம்சத்தை வெளியிடுபவர். அம்ருதமயமான ரஸங்களில் பிரசன்னமாயிருப்பவர். சண்டிகேஸ்வரராக அவதரித்தவர் இப்படிப்பட்ட மகிமை உடைய தண்டாயுத பாணியை வணங்குவாய் என் உள்ளமே!"

தண்டபாணி சுவாமிகள் பழநித் திருவாயிரத்திலுள்ள அலங்காரத்தில் பின்வருமாறு பாடுகிறார்:

"பண்டு விண்ணோர்குலம் வாழப்புரந்து பழனியிலோர்
தண்டுடன் நின்று விளையாடு மாண்புரைச் சற்குரவற்
கண்டு தொழுது துதிபாடி நெஞ்சிற் கருதும் உண்மைத்
தொண்டு செய்வார்க்கவன் வேலும் மயிலும் துணை செய்யுமே"

தண்டபாணியின் திருவுருவத்தில் ஒரு முகம், ஒரு படைக்கலனாகிய தண்டமும் மட்டுமே உள்ளன. தண்டாயுதம் ஒரு மனிதன் கையில் வைத்திருக்கும் சாதாரண ஊன்றுகோல் போன்றதல்ல. அது சரபத்தையே வெல்லும் திறனுள்ள அண்டபேரண்டப் பறவையையும் வெல்லும் வலிமையுடையது என்பதை,

"அண்டர் பரவு பழனாபுரி வெற்பமர் குகன் கைத்
தண்டம் எளிதென்று இகழேன்மினோ? வன்சரபம் அடும்
சண்ட வல் வேகம் உறுவுண்ட பேரண்டம் சாய்த்ததென
முண்டகத்தான் மறை வல்லோர் அறிய மொழிந்ததுவே"

என்று தண்டபாணி சுவாமிகள் பாடுகிறார்.



அழகனின் அலங்காரங்கள்



பழநி ஆண்டவன் மீது பாடிய 'பழனிப் பிள்ளைத் தமிழ்' எனும் நூலில் தண்டபாணியின் திருவுருவச் சிறப்பைப் பின்வருமாறு பாடுகிறார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.

"அயில்வேற் படையும், திருத்தண்டும்
அகலத்தொடு திண்கையில் தாங்கி
அங்கை மலரொன்று இடப்பாகத்து
அவிரும் கடிமீது அமைதர வைத்து
எயில் வேவுற தக்கவர் மகவென்று
யாரும் அறியும்படி முழுநீற்று
இயக்கம் காட்டிக் கண்டிகையும்

ஏற்ற வயின்தோறினி தணிந்து
கயிலைக் கிரியின் இரசிதம் போல்
கவின் கோவணம் கீளொடு தரித்துக்
கழல் தாட்கு அருட் பாதுகை சாத்திக்
கனிவாய் முறுவலொடு நின்றாய்
மயில் வாகனத்தில் ஒருக்கால்முன்
வருக வருக வருகவே
வளம் தோய் பழனி மலைக் குரவா
வருக வருக வருகவே!"

இனி மலைமேல் ஆண்டிக்கு நடக்கும் பூஜைகளைப் பற்றிப் பார்ப்போம்.

விஸ்வரூப தரிசனம்: (காலை 6 மணி)

முருகன் தன்னுடைய திருக்கோலத்தில், அண்டசராசரங்களிலுள்ள அனைத்தையும் காட்டி நிற்பதே அவரது விஸ்வரூப தரிசனம் எனப்படும். முருகன் இத்தரிசனத்தை போர்க்களத்தில் சூரபத்மனுக்குக் காட்டி அருளினார். அதைக் காண, நாரதரும் மஹாவிஷ்ணுவும் செந்தூருக்கு எழுந்தருளினார் என்கிறது தலபுராணம். துவார விநாயகர் தீபாராதனையும், பள்ளியறை தீபாராதனையும் முடிந்த பின்னர் மூலவருக்கு தீபாராதனை செய்யப்படும். பின்னர் இறைவன் திருமேனியில் சாத்தப்பட்டிருக்கும் ராக்கால சந்தனமும், கௌபீன தீர்த்தமும் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படும். திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களை, ஓதுவார்கள் அமைதியான காலை வேளையில் பாடுவதைக் கேட்க புல்லரிக்கும்.

விளா பூஜை:

விளா பூஜையின்போது பழநி ஆண்டவன், தாமே தமது ஆத்மார்த்த மூர்த்தியாகிய சிவபெருமானை பூஜித்து வழிபடுவதாகக் கொள்வது ஐதீகம். ஆண்டவனுக்கு இடது பக்கத்தில் ஸ்படிக லிங்க வடிவில் ஈஸ்வரனும், அம்பிகையும், சாளக்கிராமமும் ஒரு பேழையில் வைக்கப்பட்டுள்ளன. முதலில் ஆத்மார்த்த மூர்த்திக்கு அபிஷேகங்கள், தூப, தீப, நைவேத்தியமும், ஏக தீபாராதனையும் செய்யப்பட்டு பிரசாதம் வழங்கப்படும். ஏனைய கால பூஜைகளில் ஆத்மார்த்த மூர்த்திக்குத் தனி அபிஷேகம் இல்லை. இக்காலபூஜையில், பழநி ஆண்டவருக்குக் காவி உடையோடு வைதீக கோலத்தில் அலங்காரம் செய்யப்படும். ஓதுவார்கள் பஞ்சபுராணங்கள் பாடுவர்.

சிறுகால சந்தி: (காலை 8 மணி)

ஆண்டவருக்கு அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனைக்குப் பின் நைவேத்தியம், ஏகதீபாராதனை காட்டி, பிரசாதம் வழங்கப்படும்.

இப்பூஜையின்போது பழநி ஆண்டவருக்குக் குழந்தை வடிவில் அலங்காரம் செய்யப்படும். முருகன் திருக்கோலங்களுள் அவரது குழந்தைக்கோலம் தனிச் சிறப்புடையது. பாலமுருகன் என்று கூறுவது மரபு. குழந்தையாக முருகன் விளங்கும் கோலத்தினை, கந்தர் அலங்காரச் செய்யுள் ஒன்று அழகாகச் சித்திரிக்கிறது.

"திருந்தப் புவனங்கள் ஈன்ற பொற்பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில் ஏறி, அறுவர் கொங்கை
விரும்பி, கடலழ, குன்றழ, சூர் அழ, விம்மி அழும்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவன் என்று ஓதும் குவலயமே".

பொருள்: உயிர்கள் யாவும் மலங்கள் நீங்கி மேன்மை பெறும்படி புவனங்களை ஈன்றவளும் பொற்பதுமை போன்றவளுமாகிய அம்பிகையின் அழகிய முலைப்பாலை உண்ட குமரனை, சரவணப் பொய்கையில் தாமரைப் பூக்களான தொட்டிலில் படுத்தவனும், சூரன் ஒழியப் போவதனால்தான் அழிவுறுவோம் என்று கடல் அழவும், சூரனுக்குக் கவசமான தன்னை வேல் துளைக்கப்போகிறது என்று கிரௌஞ்ச மலை அழவும், நம் வாழ்நாளைக் குலைக்கவல்ல பாலன் வந்துவிட்டானே என்று சூரன் விம்மி அழவும், இளம் குருத்து போன்றவனும் ஆகிய முருகப்பெருமானை உலகோர் குறிஞ்சிக் கிழவன் என்று கூறுகின்றனர்.

காலசந்தி: (காலை 9 மணி)

சிறுகால சந்தியினைப் போலவே வழிபாடு நிகழும்.

உச்சிக்காலம்: (பகல் 12 மணி)

ஆண்டவருக்கு அபிஷேக அலங்கார அர்ச்சனைகள் செய்த பின்பு நைவேத்தியம் செய்து பதினாறு வகையான தீபாராதனைகள் செய்யப்படுகின்றன.



1. அலங்கார தீபம் 2. நட்சத்திர தீபம் 3. ஐந்துமுக தீபம் 4. கைலாச தீபம் 5. பாம்பு வடிவ தீபம் 6. மயில் தீபம் 7. சேவல் தீபம் 8. யானை தீபம் 9. ஆடு வடிவ தீபம் 10. புருஷாமிருக தீபம் 11. பூரணகும்ப தீபம் 12. நான்குமுக தீபம் 13. மூன்று முக தீபம் 14. இரண்டு முக தீபம் 15. ஈசான தீபம் 16. கற்பூர தீபம். பின்னர் வெண்சாமரம், கண்ணாடி, சேவற்கொடி, விசிறி, ஆலவட்டம். இக்காலத்தில் ஆண்டவனுக்குக் கிரீடத்தோடு கூடிய வைதீக அலங்காரம் செய்யப்படும். தீபாராதனைக்குப் பின்னர் தேவாரம் இசைத்தலும், கட்டியம் கூறலும் நடைபெறும். சிறப்புத் தினங்களில் இவற்றோடு கந்தபுராணம் சொல்லலும் வேதம் ஓதுதலும், நிகழும். உச்சிகால அன்னதான அறக்கட்டளை ஒன்றும் பழநி ஆண்டவர் கோயிலில் எற்படுத்தப்பட்டுள்ளது. அன்னதானத் திட்டத்தின் கீழ் அதற்கென பக்தர்களிடமிருந்து வசூலிக்கப்படும் குறிப்பிட்ட தொகை வங்கியில் முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டியில் அன்றாடம் மலைக்கு வரும் பக்தர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படுகிறது.

சாயரட்சை (மாலை 5.30 மணி)

ஆண்டவனுக்கு அபிஷேக, அலங்கார அர்ச்சனைகள் செய்து முடிக்கப்பட்டதும் நைவேத்யம் செய்யப்படும். பதினாறு வகை தீபாராதனைகளும் சிறப்பு உபசாரங்களும் நடைபெற்ற பின் பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கப்படும். ஆண்டவனுக்கு அரச கோலத்தில் அலங்காரம் செய்யப்படும்.

இராக்காலம் (இரவு 8 மணி)

ஆண்டவருக்கு அபிஷேக அலங்கார அர்ச்சனைக்குப்பின் நைவேத்யம் செய்து, ஏக தீபாராதனை முடிந்த பின்னர் அன்பர்களுக்குத் தினை மாவு முதலான பிரசாதங்கள் வழங்கப்படும்.

"தெள்ளித் தினை மாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே"
(கந்தர் கலிவெண்பா)

"தெள்ளு தினை மாவுக்கு அவா உற்ற மோகனே
சிறுதேர் உருட்டி அருளே"
(பிள்ளைத் தமிழ்ப் பாடல்)

எனும் வரிகளிலிருந்து முருகன் தினைமாவை விரும்புகிறான் என்று புரிந்துகொள்ளலாம்.

இராக்கால பூஜையில் தூய சந்தனம் இறைவன் திருமேனியில் சாத்தப்பெறுகிறது. இதுவே காலையில் விஸ்வரூப தரிசனத்தின்போது, உடற்பிணியும் உள்ளப் பிணியும் நீக்கும் அருமருந்தாக அன்பர்களுக்கு வழங்கப்படுகிறது. மலையிலுள்ள ஷண்முகர், உற்சவரான

சின்னக் குமரர் ஆகியோருக்கும் நைவேத்யமும் தீப ஆராதனையும் செய்யப்படுகிறது.

இராக்கால பூஜையின்போது ஆண்டவரை விருத்தனாக அலங்காரம் செய்வர். விருத்தன் எனும் சொல் வயோதிகன் எனப் பொருள்படும். இவ்வடிவத்தில் முருகன் வள்ளிக்கும் வேடர்களுக்கும் காட்சி கொடுத்ததை அருணகிரிநாதர் பாடுகிறார்.

"குறவர் கூட்டத்தில் வந்து கிழவனாய்ப்புக்கு நின்று
குருவி ஓட்டித் திரிந்த தவமானைக்
குணமதாக்கிச் சிறந்த வடிவுகாட்டிப் புணர்ந்து
குமரகோட்டத்தமர்ந்த பெருமாளே"
('அறிவிலாப்பித்தன்' திருப்புகழ்)

இராக்கால தீபாராதனைக்குப் பின்னர் சுவாமியைப் பள்ளியறைக்குத் தங்க அல்லது வெள்ளிப் பல்லக்கில் எழுந்தருளச் செய்வார்கள். திருக்கோயிலின் அன்றாட வரவு செலவு படிக்கப் படுகிறது. காலையில் திறக்கப்படும் கோயில் திருவாயில், இரவு பள்ளியறைக்கு முன் மூடப்படுவதில்லை. பள்ளியறையில் சுவாமியை ஊஞ்சலில் இருத்தி ஊஞ்சல் பாட்டு, தாலாட்டுப் பாடல்கள் பாடப்படுகின்றன. பழநியாண்டவர் பள்ளியறை ஊஞ்சலில் அமரும் பொழுது பாடப்படும் பாடல் இது என்று உரையாசிரியர் குகஸ்ரீரசபதி அவர்களால் குறிப்பிடப்பட்ட பாடல் இதோ:

"இல்லறமும் துறவறமும் தூண்களாக
இகபர சாதனப் பொரு சீர் விட்டமாக
நல்லறம் ஆதிய நான்கும் வடங்களாக
நழுவரும் சத்தியமதுவே பலகையாக
வல்ல சக்தி ஒராறும் போற்றி ஆட்ட
மாயன் மக்கள் இருவருடனும் ஆடிலூசல்
பல்லவச் செஞ்சடை சிவனார் தவப்பேறான
பழநி நகர் குழகர் மகிழ்ந்தாடீர் ஊசல்"
(வண்ணச்சரபம் தண்டபாணி பிள்ளைத்தமிழ்)

"யோகியாய் விளங்கும் ஆண்டவன் போகியாய் இருந்து உயிர்கட்குப் போகத்தைப் புணர்க்கும் திருவருட் குறிப்பை உணர்த்தவே பள்ளியறை விழா தினமும் நடத்தப்படுகிறது" என்று குறிப்பிடுகிறார் புலவர் சே.த.ரா அவர்கள். மகாதீபாராதனை பைரவ பூஜை இவற்றிற்குப் பிறகு சந்நிதி திருக்காப்பிடப்படுகிறது.

கார்த்திகை முதலான சிறப்பு நாட்களில் கால பூஜைகள் தொடங்கும் நேரம் மாறுபடும். இக்காலங்களுக்கான பூஜைப் பொருட்கள் திருக்கோயிலிலிருந்தும், அறக்கட்டளைகளிலிருந்தும் கிடைக்கின்றன. மார்கழி மாதம் முழுவதும் அன்றாடம் அதிகாலை 4 மணிக்கு மலைக்கோயில் நடைதிறப்பு நடைபெறும். திருப்பள்ளி எழுச்சியை முன்னிட்டு முப்பது நாட்களும் திருப்பாவை

திருவெம்பாவைப் பள்ளி எழுச்சிப் பாடல்கள் கோயிலில் ஒலிபரப்பப்படுகின்றன. ஆங்கிலப் புத்தாண்டு இம்மாதத்தில் வருவதால் எண்ணற்ற பக்தர்கள் அதிகாலை முதல் மலை ஏறி இறைவனை வழிபட்டு அருள் பெறுகின்றனர்.

மாலை வேளையில் தங்கத்தேரில் இறைவன் வலம் வருவதைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும். பழநி ஆண்டிக்கு அரோஹரா எனும் பக்தர்கள் கோஷம் மலையையே அதிரவைப்பது போல் கேட்கிறது. ஆண்டவன் சின்னக்குமரன் தங்கமயில் ஏறி உள்திருச்சுற்றில் வலம் வருவதும் பின்னர் தங்கத்தேர் ஏறி வெளித்திருச்சுற்றில் வலம் வருகின்ற திருக்காட்சியும் அனைவரும் கண்டு இன்புறவேண்டிய காட்சிகளாகும். தமிழகத்தில் முதன் முதலாகப் பழநி திருக்கோயிலில்தான் தங்கரதம் செய்யப்பட்டு சுவாமி புறப்பாடு நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. பக்தர்களின் வசதியை முன்னிட்டு ஒரே நாளில் எத்தனை நபர்கள் வேண்டுமானாலும் சுவாமி புறப்பாடு கட்டணம் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

கி.பி.1300ம் ஆண்டில் பாண்டிய அரசன் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் தன் பெயரால் ஒரு சிறப்பு சந்தி பூஜை ஏற்பாடு செய்தான். அதற்கு 'அவணி வேந்த ராமன் சந்தி' என்று பெயர். இந்தப் பூஜைக்கு வேண்டிய பிரசாதங்களுக்காக ஒரு ஊரையே

தானமாகக் கொடுத்தான் என்பதிலிருந்து பண்டைக்காலத்தில் பழநி கோயில் எவ்வளவு புகழ் பெற்றிருந்தது என்பதும், மன்னன் கோயில் மீது எத்தனை அன்பு வைத்திருந்தான் என்பதும் விளங்குகிறது. மூன்று கால சந்திகளிலும் பூஜையும் மகா பூஜையும் நடக்கவும், திருஅமுது, திருநந்தா விளக்கு, திருமாலை, திருமஞ்சனம் முதலியவைகளுக்காகவும் வைகாவூர் நாட்டு ரவிமங்கலம் தானமாகக் கொடுக்கப்பட்ட செய்தியும் கல்வெட்டுகளில் உள்ளது.

முருகப் பெருமானை நீராட்டுவதற்கான தீர்த்தம் எடுப்பதற்காகத் திருக்குளம் ஒன்று இருந்தது பற்றியும், அது 'சுப்ரமண்ய சுவாமி திருமஞ்சனக் குளம்'என்று அழைக்கப்பட்டது என்பதையும் கல்வெட்டு எண் 2 குறிப்பிடுகிறது. மலையின் தெற்கு பாகத்தில் திருமஞ்சனப்படி என்ற சிறிய படி வழிப்பாதை இருக்கிறது. இங்கு ஒரு தனிக்குளம் இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

மலைமேல் ஆண்டியின் பல மகிமைகளையும், அவனுக்கெனவே ஆண்டு முழுவதும் விழாக்கோலம் காணும் பழநியைப் பற்றியும் மேலும் காண்போம்.

அரசனும் அவனே! ஆண்டியும் அவனே!



இளமையை விரும்புவோர்க்குப் பாலமுருகனாகவும், முதிர்ந்த அறிவை விழைவோர்க்கு விருத்தனாகவும், சுகபோகங்களை விரும்புவோர்க்கு அரசனாகவும், ஞானத்தை நாடுபவர்களுக்கு ஞானதண்டாயுதபாணியாகவும் ஒரே நாளில் தரிசனம் தந்து அருள்பாலிக்கும் பழநி ஆண்டவனின் பெருமையை எவ்வாறு விவரிப்பது? உன் தந்தையோ திரிபுரத்தை எரித்த சிவப்பரம் பொருள். தாய் உமையோ மலையரசனின் புதல்வி; மாமனோ

கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து மக்களை ரட்சித்தவன். மிகுந்த செல்வம் உடையவள் உன்மாமி, உனக்குப் பெண் கொடுத்தவர்கள் தேவலோகத்தையும் வேடர்குலத்தையும் ஆள்பவர்கள், இருந்தும் நீ ஏன் இப்படி ஆண்டியானாய் முருகா? என்று பாடுகிறார் கவிஞர் ஒருவர். அரசனாகவும் ஆண்டியாகவும் தோன்றி செல்வத்தின் நிலையாமையையும், பாலனாகவும் விருத்தனாகவும் காட்சியளித்து இளமையின் நிலையாமையையும் உணர்த்தும் ஞானபண்டிதனல்லவா நம் பழநியாண்டவன்!

மலைமேல் ஆண்டவனுக்கென விமரிசையாகப் பழநியில் நடத்தப்பெறும் திருவிழாக்களைப் பற்றி இனி பார்ப்போம். பெரும்பாலான நாட்களிலும் மலைமேல் சுவாமி தங்கரத ஊர்வலம் வருவதால் எப்போதுமே பழநி விழாக்கோலம் பூண்டு விளங்குகிறது. பல்வேறு இடங்களிலும் வாழ்கின்ற மக்கள் ஒரு இடத்தில் ஒன்று சேர்ந்து இன்பத்தில் திளைக்க வேண்டும் என்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டவை திருவிழாக்கள். குறிப்பாக ஆன்மிகத் தொடர்புடைய விழாக்கள், மக்களுக்கு இறை உணர்வை மங்காமல் இருக்கும்படித் தூண்டிவிடுபவையாகும்.

உலகாயுத விஷயங்களைச் சற்று மறந்து இறைவனைப் பற்றிய இடையறாத தியானத்திலிருக்க இவ்விழாக்கள் உதவுகின்றன. பல வாழ்க்கை நலன்களை நமக்களித்த இறைவனுக்கு நன்றி கூறவும் இத்தருணங்கள் ஏற்றவை. வானியல் கோட்பாடுகளின் அடிப்படையில் கிருஷ்ணபட்சம், சுக்கிலபட்சம் ஆகிய இருபிரிவுகளோடு பன்னிரு மாதங்கள், 27 நட்சத்திரங்கள் கொண்ட சந்திர நாட்காட்டி அறிவிக்கும் நாட்களில் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. சஷ்டி விழா மட்டும் திதிக்கணக்கின்படித் துவங்கப்படுகிறது.

1.சித்ரா பௌர்ணமி

முதல் தமிழ் மாதமான சித்திரையில் மல்லி, முல்லை, கடம்பமலர் ஆகியவை பூத்துக்குலுங்கி மணம் வீசுகின்றன. சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்துடன் கூடிய பௌர்ணமி நாளான சித்ரா பௌர்ணமியன்று பழநி ஊர்க்கோயிலான பெரியநாயகியின் கோயிலிலிருந்து வள்ளி-தெய்வானை சமேதராக முத்துக்குமாரசுவாமி வெள்ளி ரதத்தில் ஊர்வலம் வருவார். இந்த நிறைமதி நாளில் மலைமேல் தங்கரதத்தில் சுவாமி புறப்பாடு நடைபெறும்.

2.அக்னி நட்சத்திர விழா

சித்திரை மாத பிற்பகுதியும் வைகாசி முற்பகுதியும் கூடிய 14 நாட்கள் அக்னி நட்சத்திர காலமாகும். அக்னிப் பொறியில்

தோன்றிய முருகப் பெருமானைப் போற்றி, அக்னி நட்சத்திர நாட்களில், பக்தர்கள் காலையில் எழுந்து நீராடித் தூய்மை பெற்று மலைவலம் வருகின்றனர். உடலும் உயிரும் ஒருங்கே புத்துணர்ச்சி பெறுகின்றன. இந்நாட்களில் வெளியூரிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கிரிவலத்தில் கலந்து கொள்வது கண்கொள்ளாக் காட்சி. பல பக்தர்கள் ஷண்முக நதியிலிருந்து தீர்த்தம் கொண்டு வந்து இறைவனுக்கு அபிஷேகம் செய்விக்கின்றனர். கொடுமுடியிலிருந்தும் பலர் அபிஷேக நீரைக் காவடியாகக் கொண்டு பாதயாத்திரை செய்து வருகின்றனர். பதினான்காம் நாள் காலையில் பெரியநாயகி அம்மை கோயிலிலிருந்து முத்துக்குமாரர் அடிவாரத்திற்கு வந்தருளி பூக்கட்டி மண்டபத்திற்கருகே பக்தர்களுக்குத் தீர்த்தம் வழங்குவார். பின் இரவில் கிரிவலம் வந்து தன் கோயிலுக்குத் திரும்பும் நாளில் ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கும். முத்துக்குமாரனை வேண்டிப் பாடும்

"வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

களிகண் என்றுனை நம்பலும், நீ எனுள் கனவிற்பல காரணங் கூறலும்

தளை எனக் கலி சூழ்வதும் தேர்ந்துளார் சபையிலாயினும் சார்தரச் சேர்த்திடாய்"

என்று இறைவனிடம் வேண்டுகிறார்.

3.வைகாசி விசாகம்

அனைத்து முருகன் கோயில்களிலும் மாபெரும் விழாவாகக் கொண்டாடப்படும் வைகாசி விசாகம், பழநியில் பத்து நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. விசாக நட்சத்திரத்தில் தோன்றிய முருகப்பெருமானை 'இன்சொல் விசாகா' என்றும் 'அநாதி, பரவஸ்துவும், விசாகனும், விகற்ப வெகுரூபக்காரனும்' என்றும் குறிப்பிடுகிறார் அருணகிரிநாதர்.

சூரபத்மன் மிகுந்த தவத்தின் வலிமையினால், தன்னை



சிவபெருமானது சக்தி தவிர வேறு எந்த சக்தியாலும் அழிக்க முடியாது என்ற வரத்தைப் பெற்றிருந்ததனால், தேவர்களை அவர்களது இருப்பிடத்தையே விட்டு வெளியேற்றுமளவு கொடுமைகள் செய்து வந்தான். எனவே தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான், ஈசானம், தத்புருஷம், சத்யோஜாதம், அகோரம், வாமதேவம் எனும் ஐந்து முகங்களோடு கீழ்நோக்கிய அதோ முகத்தையும் சேர்த்து, ஆறு நெற்றிக்கண்களிலிருந்து ஆறு தீச்சுடர்களை வரவழைத்தார். அக்னி, வாயு, கங்கை இவர்களின் உதவியால் அச்சுடர்கள் சரவணப்பொய்கையைச் சென்றடைய, ஆறு குழந்தைகள் உருவாயின.

கார்த்திகைப் பெண்களால் பாலூட்டப்பெற்ற ஆறு குழந்தைகளையும் பார்வதி ஒருசேர எடுத்தணைத்தபோது முருகப்பெருமான் ஆறுமுகனாகத் தோன்றினான். இக்குழந்தையே பிற்காலத்தில் சூரசம்ஹாரம் செய்து தேவர்களைக் காத்தது. வேல் விருத்தத்தில் அருணகிரியார் இதைப் பாடுகிறார்.

“வெங்காளகண்டர் கைச்சூலமும் திருமாயன்
வெற்றிபெறு சுடர் ஆழியும்
விபுதர்பதி குலிசமும் சூரன் குலம் கல்லி
வெல்லா எனக் கருதியே
‘சங்க்ராம்! நீ ஜெயித்து அருள்’ எனத் தேவரும்
சதுர்முகனும் நின்றிரப்ப,
சயிலமொடு சூரனுடல் ஒரு நொடியில் உருவியே
தனி ஆண்மை கொண்ட நெடுவேல்”
(வேல்விருத்தம் – 2)

கடும் கோடைக்காலத்தில் நடக்கும் இவ்விழாவில் வெப்பத்தைப் பொருட்படுத்தாமல், பக்தர்கள் அபிஷேகப் பிரியனைக் குளிரவைக்க குடம் குடமாகப் பால் கொண்டு வந்து முருகனுக்கு அபிஷேகம் செய்கின்றனர். பழநி ஊர்க்கோயிலிலும் மிகப்பெரிய அளவில் வைகாசி விசாக விழா நடைபெறும். ஏழாம் நாளன்று தேர்த்திருவிழா கோலாகலமாக நடைபெறுகிறது. அருணகிரியார் பாடுகிறார்:

“லோக நாயகி தந்த வாழ்வே!
தோளாலும் வாளினாலு மாறிடு
தோலாத வான நாடு சூறைகொள்
சூராரியே! விசாகனே! சுரர் தம்பிரானே”

(‘ஆராத காதல்’ – திருப்புகழ்)

(தோள் வலிமையாலும், வாள் வலிமையாலும் மாறுபட்டவனும், யாவரிடத்திலும் தோல்வியடையாதவனும், தேவருலகைச் சூறையிட்டவனுமாகிய சூரபத்மனை அடக்கியவரே! விசாக மூர்த்தியே! தேவர்கள் வணங்கும் தனிப்பெரும் தலைவரே!)

4.ஆனி அன்னாபிஷேகம்:

ஒவ்வொரு ஆண்டும், ஆனி கேட்டை நட்சத்திரத்தில் மலைக் கோயிலிலும், மூல நட்சத்திரத்தில் அடிவாரம் திருஆவினன்குடிக் கோயிலிலும், ஊர்க்கோயிலில் பூராடம் நட்சத்திரத் திலும், பெரியாவுடையார் கோயிலில் உத்திராடம் நட்சத்திரத்திலும் மூலவர்களுக்கு அன்னாபிஷேகம் நடைபெறும். அன்னாபிஷேகப் பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது.

5.ஆடி லட்சார்ச்சனை

ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதத்தில் அருள்மிகு பெரியநாயகி அம்மன் திருக்கோயிலில் லட்சார்ச்சனை நடைபெறும். அம்மனுக்கு மகாஅபிஷேகம் நடைபெறும். சுவாமி வெள்ளிரதத்தில் உலா வருவார்.

6.நவராத்திரி விழா

நவராத்திரி பூஜைக்காலங்களில் 10 நாட்கள் மலைக்கோயிலில் தங்கரதப் புறப்பாடு இல்லை. ஆண்டவனுக்கு ரட்சாபந்தனம் மட்டும் நடைபெறும். ஆனால் பெரியநாயகி அம்மையின் கோயிலில் பத்து நாட்களும் பெரும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. விஜயதசமி அன்று அம்பிகை ‘அபராஜிதா’ (தோற்கடிக்க முடியாதவள்) எனும் பெயரில் வணங்கப்படுகிறாள். ஊருக்குச் சற்று வெளியே உள்ள கோதமங்கலம் கோடீஸ்வரர் கோயிலுக்குச் சென்று முத்துக்குமரர் சப்பரத்தில் தந்தப் பல்லக்கில் வந்து அம்பு போடும் விழாவில் கலந்து கொள்கிறார். வன்னிமரத்தை அக்னிதேவியாக வரித்து சுற்றிலும் அம்புகளை வீசுகின்றனர். மகிஷனை அம்பிகை வதம் செய்வதைக் குறிப்பால் உணர்த்தும் காட்சி. (இதை வன்னிகாசுர வதம் என்று பலரும் தவறாகக் குறிப்பிடுகின்றனர் என்றும் ஒரு கருத்து உள்ளது)



கந்தசஷ்டியும் கருணைக்குமரனும்...



தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டிய முருகனைப் போர் வீரனாகச் சித்திரிக்கும் சூரசம்ஹார விழாவான கந்தசஷ்டி விழாவைக் கொண்டாடாத முருகன் கோயிலே இல்லை எனலாம். தேவர்களின் வேண்டுகோளின்படி சிவபெருமான் முருக அவதார காரணமாகிறார். ஐப்பசித் திங்கள் வளர்பிறைக் காலத்தின் முதல் ஆறு நாட்களும் தேவர்கள் உண்ணாவிரதமிருந்து முருகனை இடையறாது துதிக்கிறார்கள்.

சூரபத்மனை ஜெயிப்பதற்காக அன்னை பராசக்தி வேல் கொடுக்கிறாள். அருணகிரிநாதர் இதை அருமையாகப் பாடுகிறார்.

"பம்பரமே போல ஆடிய
சங்கரி, வேதாள நாயகி,
பங்கய சீபாத நூபுரி, கரசூலி
பங்கமிலா நீலி, மோடி,
பயங்கரி, மாகாளி, யோகினி,
பண்டு சுராபான சூரனொடு எதிர்போர்கண்டு
எம்புதல்வா! வாழி! வாழி!
எனும்படி வீறான வேல்தர என்றுமுளானே!

('கொம்பனையார்' திருப்புகழ்)

தாரகாசுரன், சிங்கமுகன் ஆகியோரை அழித்த பின் ஆறாம் நாளான சஷ்டி அன்று முருகப்பெருமான் சூரசம்ஹாரம் செய்து, அவனைச் சேவலும் மயிலும் என இருகூறாக்கித் தன் அருகிலேயே என்றென்றும் இருக்கும்படி வைத்துக்கொண்டான். இதையே திரும்ப நடித்துக் காட்டும் விழாவாகக் கந்தசஷ்டி விழா ஆண்டுதோறும் நடைபெறுகிறது.

"கடற் ஜலந்தனிலே ஒளிசூரனை
உடற்பகுந்து இரு கூறெனவே அது
கதித் தெழுந்தொரு சேவலுமாமயில்
விடும்வேலா"

('மனத்திரை' - திருப்புகழ்)

கந்த சஷ்டி தத்துவத்தையே ஒரு பாடலின் பிற்பகுதியில் கூறி நம்மை அசர வைக்கிறார் அருணகிரிநாதர்.

"தருவினாட்டரசாள்வான், வேணுவின்
உருவமாய்ப் பலநாளே" தானுறு
தவசினால் சிவன் ' நீபோய் வானவர் சிறைதீரச்
சகல லோக்கியமே தானாளுறும்
அசுர பார்த்திபனோடே சேயவர்
தமரை வேற்கொடு நீறாயே படவிழுமோதெ'ன்றருள,
ஏற்றமரோடே போய் அவர்
உறையு மாக்கிரியோடே தானையும்
அழிய வீழ்த்தெதிர் சூரோடே அமர் அடலாகி
அமரில் வீட்டியும் வானோர் தானுறு
சிறையை மீட்டரனார் பால்மேவிய
அதிபராக்ம வீரா! வானவ பெருமாளே"

கற்பகத்தரு உள்ள அமராவதிக்கு அரசனான இந்திரன் சூரனுக்குப் பயந்து மூங்கில் (வேணு) வடிவத்தில் பலநாட்கள் செய்த தவத்திற்கு இரங்கி, சிவபிரான் உன்னைப் பார்த்து "நீ சென்று தேவர்களின் சிறையை நீக்கும் பொருட்டு எல்லாவிதமான உலக இன்பங்களையும் அனுபவித்து வரும் அசுர அரசனாகிய சூரபத்மனுடன் அவனுடைய பிள்ளைகளையம் சுற்றத்தாரையும் வேலாயுதத்தால் அவர்கள்

தூளாகும்படி அழியத் தாக்குவாயாக" என்று திருவாய் மலர்ந்து சொல்ல, அவ்வறிவுரையை ஏற்றுக்கொண்டு, போரிடச் சென்று அவ்வசுரர்கள் வசித்து வந்த கிரௌஞ்ச மலையுடன் அவரது சேனைகளும் அழிந்து விழும்படிச் செய்து, எதிர்த்து வந்த சூரனுடன், வலிய போர் செய்து அவனை அப்போரில் மாளச் செய்தும், தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து சிவபிரானிடத்தில் திரும்பி வந்த மகா பராக்ரம வீரனே! தேவர்கள் பெருமாளே" அருணகிரிநாதரின் இப்பாடலைக் கந்தபுராணச் சுருக்கம் என்றே கூறுவார் மறைந்த மாமேதை திருப்புகழ் அடிமை திரு.எஸ்.நடராஜன் அவர்கள்!



பழநியில் கந்த சஷ்டி விழாவின் போது பக்தர்கள் பலவிதமான காவடிகளை எடுத்து வருகின்றனர். ஆறுநாளும் துளசி நீர் மட்டுமே குடித்து உண்ணாவிரத நோன்பு இருப்போர் பலர். குழந்தை வரம் வேண்டுபவர்கள் சஷ்டியின்போது விரதம் இருப்பர். 'சஷ்டியில் (விரதம் இருந்தால் அகப்பையில் (கரு) வரும்' என்ற பழமொழி மருவிப்போய், சட்டியிலிருந்தால் அகப்பையில் வரும் என்றாகிவிட்டது. மலைக்கோவிலிலுள்ள மலைக்கொழுந்து அம்மனுக்கு வெள்ளை புடவை சாத்தி வெள்ளை அரளி முதலான வெண்ணிற பூக்களால் அலங்கரித்து, பராசக்தி சின்னக்குமரருக்கு வேல் கொடுத்து அனுக்ரஹிக்கும் நிகழ்ச்சி நடித்துக் காட்டப்படுகிறது. ஆண்டுக்கொரு நாள் நடக்கும் இவ்விழா நிகழ்ச்சியில் மட்டும்தான் சின்னக்குமரர் மலைக்கொழுந்து அம்மனிடம் சக்திவேல் பெற்று தங்கமயில் வாகனத்தில் புறப்பாடாகி மாலை பாதவிநாயகர் கோயில் வந்தடைவார். பின் ஊர்க்கோயிலிலிருந்து வரும் தங்கமயில் வாகனத்தில் புறப்பட்டு கிரி வீதியில் வந்து சூரசம்ஹாரம் செய்வார்.

வீரபாகு, மலையிலுள்ள வெள்ளி ஆட்டுக்கிடா வாகனத்தில் புறப்படுவார். மற்ற நான்கு வீரர்களும் ஒரு கேடயத்தில் வைக்கப்பட்டு புறப்பாடாகி அனைவரும் சின்னக்குமரரிடம் வந்து சேர்ந்து கொள்வர். ஊர்க்கோயிலிலிருந்து விநாயகர் வெள்ளி மூஷிக வாகனத்திலும் முத்துக்குமாரசாமி வள்ளி தெய்வானை சமேதராய் வெள்ளி மயிலிலும் புறப்பாடாகி மாலை பாத விநாயகர் கோயில் வந்தடைவர்.

கிரி வீதியிலுள்ள நான்கு மயில் சிற்பங்களையொட்டி சூரன் வதை நடைபெறும். தாரகாசுரன் வடக்கு கிரிவீதியிலும், பானுகோபன் கிழக்கு கிரி வீதியிலும், சிங்கமுகன் தெற்கு கிரிவீதியிலும்,



சூரபத்மன் மேற்கு கிரிவீதியிலும் சம்ஹாரம் செய்யப்படுவர். சூரசம்ஹார நிகழ்ச்சி முடியும்வரை முத்துக்குமரர் மீனாட்சி மண்டபத்தில் எழுந்தருளியிருப்பார். சம்ஹாரம் முடிந்ததும் சின்னக்குமரருக்கும், முத்துக் குமரருக்கும் தீபாராதனை காட்டப்படும். பின் சின்னக்குமரருடன் மற்ற வீரர்களும் மலைக்குத் திரும்புகின்றனர். முத்துக்குமரர், வள்ளி தெய்வானையுடன் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட இந்திர விமானத்தில், வெள்ளி மயிலில் ஏறி (மயிலாய் மாறிய சூரபத்மன்) விநாயகருடன் ஊர்க்கோயில் ரதவீதிகளில் வலம் வந்து புறப்பட்ட இடத்திற்கு வந்தடைவர்.

"அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்து உணவாகக்
சூரபத்மாவைத் துணித்த கை அதனால்
இருபத்தெழுவர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன், பழநிக் குன்றிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
என்னைத் தடுத்தாட்கொள்ள என்றனுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனாபதியே போற்றி!

(கந்த சஷ்டிக் கவசம்)

என்று உள்ளம் துதிக்கிறது.

8. திருக்கார்த்திகைத் திருவிழா

திருமயிலையில் ஞானசம்பந்தப் பெருமான், பூம்பாவையை உயிர்ப்பிக்கையில்

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகை நாள்
தளத்தேந்திள முலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்"

என்று கேட்குமளவு பிரசித்தி பெற்றது திருக்கார்த்திகை நாள். ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்தில் வரும் நிறைமதியோடு கூடிய கிருத்திகை நட்சத்திர நாளை திருக்கார்த்திகை என்றும் பெரிய கார்த்திகை என்றும் அழைப்பர்.

அம்பா, துலா, நிதத்னி, அப்ரயந்தி, மேகயந்தி, வர்ஷயந்தி எனும் ஆறு கார்த்திகைப் பெண்கள் குழந்தை முருகனுக்குப் பாலூட்டி ஆதரித்த காரணத்தினால் கிருத்திகை விரதம் மிக உயர்ந்த விரதமாகக் கருதப்படுகிறது. இதனால் முருகன் கார்த்திகேயன் எனும் பெயரையும் பெறுகிறான்.

"முருக, க்ஷடாக்ஷர, சரவண, கார்த்திகை முலைநுகர்
பார்த்திப" என்று அருணகிரியார் பாடுகிறார்.

"குமரகுர கார்த்திகைப் பெருமாளே"

(பிறவியலை - திருப்புகழ்)

"முருக, சரவண, மகளிர் அறுவர் முலை நுகரும் அறுமுக"

(சீர்பாத வகுப்பு)

முருகனுக்கு ஆறு கார்த்திகைப் பெண்களுடைய இந்த நெருங்கிய தொடர்பினை ஆறுமுகங்களும் குறிப்பிடுகின்றன என்றும் கொள்ளலாம். "மகிழ்ச்சியால் மக்கள் ஏற்றிய விளக்குகள் அடுக்கடுக்காய் இலவ மலர்கள் போல் அமைந்துள்ளன" என்று சங்ககாலத்திலேயே ஔவையார் வர்ணித்திருப்பதிலிருந்து இத்திருநாளின் தொன்மை நமக்கு விளங்குகிறது.

பழநியில் பத்து நாட்கள் கொண்டாடப்படும் இவ்விழா சேக்கிழார் திருக்கூட்டத்தாரால் முதல்நாள் துவக்கி வைக்கப்படுகிறது. சின்னக் குமாரர் நாள்தோறும் தங்க விமானத்திலும் கார்த்திகையன்று தங்க மயில் வாகனத்திலும் மலையின் உட்பிராகாரத்தில் வலம் வருவார். வெளிப்பிராகாரத்தில் தங்கரதத்தில் உலா வருவார். கார்த்திகை தீபம் எனும் கார்த்திகை ஜோதியாகச் சொக்கப்பனை ஏற்றுவது சிறப்பாக நடைபெறுகிறது.

"தீபமங்கள ஜோதி நமோ நம"
"தீப விளக்கம் காண எனக்கு உன் சீதள
பத்மம் தருவாயே"
"விளங்கு தீபம் கொண்டு உனை வழிபட அருள்வாயே"

என்று பலவிதமாகத் துதிக்கிறார் அருணகிரியார்.

ஒவ்வொரு கார்த்திகைதோறும் மலைக்கோயிலில் திருக்கோயில் சார்பில் திருவிளக்குபூஜை நடைபெறுகிறது. பூஜையில் கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் காணிக்கைக் கட்டணம் செலுத்தி கலந்து

கொள்ளலாம். பௌர்ணமியிலும் திருவிளக்கு பூஜை நடத்தப்பட்டு வருகிறது.

9.மார்கழி திருப்பள்ளி எழுச்சி நாட்கள்

மார்கழி மாதம் முழுவதும் பழநியில் திருப்பள்ளி எழுச்சி திருநாட்களாகக் கொண்டாடப்படுகின்றது. அன்றாடம் அதிகாலை நான்கு மணிக்கு மலைக்கோயில் திறக்கப்படுகிறது. முப்பது நாட்களும் திருப்பாவை, திருவெம்பாவை பள்ளி எழுச்சிப் பாடல்கள் கோயில்களில் ஒலிபரப்பப்படுகின்றன. ஆங்கிலப் புத்தாண்டு தினத்தன்று அதிகாலை முதல் பக்தர்கள் பழநி ஆண்டவனை வழிபடுகின்றனர்.

10. தைப்பூச திருவிழா

பத்து நாட்கள் விழாவாகப் பழநியில் கொண்டாடப்படுவது தைப்பூசத் திருவிழா. சிவபெருமான் தனது ஐந்தொழில் நடனமான ஆனந்த தாண்டவம் ஆடிய திருநாளே தைப்பூச நன்னாள் ஆகும். தாரகாசுரனை வென்றுவர, அன்னை முருகனுக்கு வேல் எடுத்துக்கொடுத்த நன்னாளும் இதுதான் என்றும் கூறுவர். பக்தர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கேரளாவிலிருந்தும் காவடி எடுத்துக்கொண்டு பாதயாத்திரையாக வருவது இவ்விழாவின் மிகப் பெரிய சிறப்பாகும். திண்டுக்கல்லிலிருந்து பழநிவரை பக்தர்களுக்கு நடந்துவர வசதியாகச் சாலையையொட்டி தனி நடைபாதை உள்ளது. விழாவின் கொடியேற்றம் பெரிய நாயகி அம்மன் கோயிலில் நடைபெறுகிறது. பலவித வாகனங்களிலும் திருத்தேர்களிலும் ஊர்வலம் வரும் ஆண்டவனைக் காணக் கண்கோடி வேண்டும்.

தினந்தோறும் ஊர்வலம்,
உள்ளந்தோறும் சந்தோஷம்

பழநி ஆண்டவன் பேரில் 'தாய்-மகள் ஏசல்' எனும் நாடகப் பாங்கில் அமைந்த நூலில் பழநியில் நடைபெறும் தேர்த்திருவிழாக்கள் பற்றிய அழகிய பாடல் ஒன்று வருகிறது.

'பச்சைத் தேரோடப் பவளத்தேர் நின்றசைய
சித்திரைத் தேர் ஓடி வரும் தென்பழநி வேலவனே!
எருக்கிலைக்குத் தண்ணிகாட்டி எத்தனைப் பூ பூத்தாலும்
மருக்கொழுந்து வாசமுண்டோ? மலைப்பழநி வேலவனே"

- என்கிறது அப்பாடல். இன்று பழநியில் சின்னக்குமரர் மரத்தேர், வெள்ளித்தேர், தங்கத்தேர் எல்லாவற்றிலும் ஊர்வலம் வருவதைக் காணலாம். தந்தப் பல்லக்கு, வெள்ளி ஆட்டுக்கிடா, வெள்ளிக்

காமதேனு வாகனம், தங்கக் குதிரை வாகனம், தங்க மயில் வாகனம், தெப்பத்தேர் போன்றவற்றில் தினந்தோறும் ஊர்வலம் வரும் ஆண்டவனைக் கண்டு பக்தர்கள் உளமகிழ்கின்றனர். இதுதவிர ஆறு, ஏழு, எட்டாம் நாட்களில் பக்தர்கள் கேட்டு பயன்பெறுவதற்காக கலை நிகழ்ச்சிகள் மற்றும் சொற்பொழிவுகள் திருக்கோயில் சார்பில் நடைபெறுகின்றன.

பூம்பாவையை எழுப்பிய திருமயிலைத் திருப்பதிகத்தில் திருஞானசம்பந்தர் பாடுகிறார்.

"மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரத்தமர்ந்தான்
நெய்ப்பூசு வொண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியே பூம்பாவாய்"

11. மாசித் திருவிழா

ஆண்டுதோறும் மாசிமாதத்தில் பழநியில் எழுந்தருளியுள்ள மாரியம்மன் திருக்கோயிலில் மாரியம்மன் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பழநி நகரம் மற்றும் பழநி வட்டாரத்திலுள்ள கிராம மக்கள் அனைவரும் இத்திருவிழாவில் பங்கு பெறுகின்றனர். தேரோட்டமும் தீச்சட்டியான பூவோடு எடுப்பதும் விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

12. பங்குனி உத்திரம்

பங்குனி உத்திர நன்னாள் பல தெய்வத் திருமணங்கள் நடந்த திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. பழநியில் இவ்விழா, பத்துநாள் வைபவம். கொடுமுடியிலிருந்து பக்தர்கள் தீர்த்தக்காவடி எடுத்துவந்து பழநி ஆண்டவருக்கு நீராட்டு செய்விக்கின்றனர். விழாவிற்கான கொடியேற்றம் திரு ஆவினன்குடிக் கோயிலில் நடைபெறுகிறது. அசுரர்களை வெற்றிகொண்ட முருகப்பெருமானுக்கு இந்திரன் பங்குனி உத்திர நாளில் தெய்வானையைத் திருமணம் செய்து கொடுத்தான். திருவாவினன்குடியில் முருகன் தேவசேனையுடன் சிலகாலம் தங்கிச் சென்றான் என்கிறது திருமுருகாற்றுப்படை.

கொடியேற்றம் உட்பட்ட முதல் பத்து நாட்களும் ஊர்க்கோயிலிலுள்ள முத்துக்குமார சுவாமி வள்ளி தெய்வானையுடன் காலையில் தந்தப் பல்லக்கிலும் மாலையில் சப்பரம், வெள்ளிக் காமதேனு, வெள்ளி ஆட்டுக்கிடா, தங்கமயில், வெள்ளி யானை, வெள்ளி ரதம், மரத்தேர், தங்கக்குதிரை, வெள்ளிப்பிடாரி, மயில் வாகனம் ஆகியவற்றில் உலா வருகிறார்.

பக்தர்களால் நிகழ்த்தப்படும் காவடி ஆட்டமும், கரகாட்டமும் பார்க்கப் பரவசம் ஊட்டும். நாட்டுப்புற மக்கள் மிகுதியாகப் பங்கு பெறுவதால் இது நாட்டுப்புற விழா என்றும் அழைக்கப்படுகிறது.

ஐந்தாம் திருநாளன்று மலைக்கோயிலில் சுவாமி தங்க ரதத்தில் உலா வருகிறார். விழாவின் ஏழாம் நாளன்று (பங்குனி உத்திரம்) முக்கிய நிகழ்ச்சியாகத் திருத்தேரோட்டம் நடைபெறுகிறது. 'பாசி படர்ந்த மலை பங்குனித் தேர் ஓடும் மலை' என்கிறது நாட்டுப்புறப் பாடல் ஒன்று. விழாவின்போது பத்து நாட்களும் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியன திருக்கோயிலால் நடத்தப்படுகின்றன.

ஆண்டு முழுவதும் நடக்கும் விழாக்களில் பல்வேறு இன மக்கள் ஒன்றாகக் கூடி இறையுணர்வில் லயிக்கின்றனர்; சமூக நல்லிணக்கமும் ஒருமைப்பாட்டுணர்வும் மக்கள் மனத்தில் எழ விழாக்கள் காரணமாக அமைகின்றன. ஆன்மிக அதிசயம் அநேகம் நிகழ்கின்ற இடம் பழநி.

இஸ்லாமிய அன்பர்களும் கூட்டமாக வந்து பழநி பாவாவை வணங்கி கர்ப்பக்ருஹத்தின் பின் சுவர்களில் சந்தனம் சாத்தி வழிபடுகின்றனர்.

இனி,இலக்கியங்களில் வரும் பழநி ஆண்டவன் பற்றிய குறிப்புகளை ஆராய்வோம்.

பழநித் திருவாயிரம்

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் முருகபக்தர் வண்ணச்சரம் தண்டபாணி சுவாமிகள் (1839 - 1898). இவரது இயற்பெயர் சங்கரலிங்கம். 'வண்ணம்' எனும் சந்தப் பாக்களைப் பாடும் வல்லமை கொண்டிருந்ததால் 'வண்ணச் சரபம்' சுவாமிகள் என்றும், பழநி ஆண்டியைப் போலவே கௌபீனம், தண்டம் இவற்றுடன் எப்போதும் காட்சி அளித்ததால் 'தண்டபாணி சுவாமிகள்' என்றும் அழைக்கப்பட்டார். அருணகிரிநாதரைப் போலவே தல வழிபாட்டை மேற்கொண்ட சுவாமிகள், பழநியிலும் மடம் அமைத்துப் பலகாலம் தங்கி பழநி ஆண்டவன் மேல் பல நூல்களை இயற்றினார். வெண்பா மாலை, வெண்பா அந்தாதி, அலங்காரம், குருபரமாலை, பதிற்றுப்பத்தந்தாதி, ஒருபா ஒருபது, நவமணிமாலை, சித்திமாலை, நவரசம், நடுவொலியந்தாதி, வகுப்பு, வண்ணம், பிள்ளைத்தமிழ், கலம்பகம், யமக அந்தாதி, திரிபு மஞ்சரி எனும் பிரிவுகளைக் கொண்டு தண்டபாணிக் கடவுளைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்ட 'பழநித் திருவாயிரம்'எனும் நூலை இயற்றினார். (1973ம் ஆண்டு, பழநி கோயில் நிர்வாகத்தினர், இந்நூலின் புதிய பதிப்பை வெளியிட்டனர்.) இவற்றுள் ஒன்றாகிய பழநி அலங்காரத்தில் பழநியின் சிறப்புகள், முருகனின் பெருமைகள், தோற்றப்பொலிவு, அவனது வாகனம்,கொடி, கருவிகள் ஆகியவற்றை விரிவாகப் பாடியுள்ளார்.

தன் உள்ளக் கனவிற்கு முருகனின் பல உருவங்கள் காட்சி தந்தாலும், பழநி முருகனைப் போன்று பிற திருவுருவங்களிடம் தனக்கு அபிமானமில்லை என்று உறுதியாகப் பாடுகிறார்.



"எவ்வகைத் துயரம் நான் எய்திடினும், என் இதயத் தென்றும்
தெவ்வடும் வேலான் கொண்ட திருஉரு அனந்தத்துள்ளும்
எவ்வமில் பழநிக் குன்றில் இலங்கு உரு மேலாம் என்னும்
அவ்வபிமானம் மட்டும் அகன்றிடல் அரிதாம் அம்மா
என்னுடல் ஆவி மூன்றும் ஏற்றவன், பழநிக் குன்றில்
மன்னு சற்குருவே என்கை மறுக்க நும் சரதம் ஆமால்"

(பழநிக் குருபர தத்துவம்)

பழநிமலை முருகன், தீயமனத்தினர் தொண்டுபுரிந்தாலும் வேண்டிய இன்பம் அளிப்பான் என்பதை

"பாதாளவாசிகள் அஞ்சுறக்கூவும் பசுமயிலோன்
வேதாள பூதங்கள் இன்புறப்போர் செயும் வேற்படையான்
கூதாளமும் புனைவான் பழனாபுரிக் கோயில் எந்தை
தீதாளர் தொண்டு புரிந்தாலும் வேண்டி சீர் நல்குமே"

- என்று பாடியுள்ளார்.

பழநி மலையில் வீற்றிருக்கின்ற முருகப் பெருமான் தன் திருக்கைகளால் இந்திரன் முதலான தேவர்களைக் காத்தான் என்பதனை "உத்தம சற்குருவாகிப் பழனி வெற்புற்ற செவ்வேள் கைத்தலம் இந்திரர் பற்பலர் காத்தது" என்று குறிப்பிடுகிறார்.

பழனிப் பதிற்றுப்பத்தந்தாதியில்,

"பொடியதனால் முழுக்காடிக் கீளொடு வெண்
கோவணமும் புனைந்து கையில்
தடிபிடித்துப் பழநிவெற்பில் குலவும் அவன்
தனை மறவேன் சரதம் மாதோ"

என்று பழநி முருகனிடம் தனக்குள்ள அன்பை வெளிப்படுத்து கிறார்.



"பண்டு விண்ணோர் குலம் வாழப்
புரந்து பழநியில் ஓர்
தண்டுடன் நின்று விளையாடும்
மாண்டைச் சற்குரவர்
கண்டு தொழுது துதிபாடி நெஞ்சில்
கருதும் உண்மைத்
தொண்டு செய்வார்க்கு அவன்
வேலும் மயிலும் துணை செய்யுமே"

அருணகிரியாரின் கந்தர் அலங்காரச் செய்யுளையொட்டி வண்ணச்சரபம் பாடிய அலங்காரச் செய்யுள்.

பழநி வடிவேலர் சந்நதி முறை:

பழநி ஆண்டவனின் பெருமை கூறும் எட்டுப் பாடல்கள் கொண்ட இந்நூலின் ஆசிரியை அகிலாண்ட நாயகி அம்மாள் ஆவார். பழநி முருகனை வழிபடும் நியதிகள், தீர்த்தச் சிறப்பு, காவடி வகைகள் மற்றும் பிணிதீர்த்து அருள்பாலிக்கும் பழநி ஆண்டியின் திறன் ஆகியவை பற்றிப் பாடியுள்ளார்.

பழநி ஆண்டவர் மயில் விடு தூது

பழநி முருகனைத் தரிசிக்கப் பெற்று அக்காட்சி மறைய, மீண்டும் அந்த அனுபவத்தைப் பெறும் பொருட்டு பழநி முருகனை அழைத்து வரும்படியான மயிலைத் தூது விடுகிறார், ஆசிரியர் நடேச கவுண்டர் அவர்கள். 'கொணர்தி உன் இறைவனையே' என்று பாம்பன் சுவாமிகள் மயிலைத் தூது விடும் பாக்களை இது நினைவுறுத்துகின்றது.

புகையிலை விடு தூது

காளிதாசன் பாடிய மேகசந்தேசத்தைப் பின்பற்றி வண்டு, மயில், கிளி, அன்னம் இவற்றைத் தூது விடும் பாடல்கள் பலவற்றை நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், அதிசயம் அநேகமுற்ற பழநியில், ஒரு புலவர் புகையிலையை ஆண்டவன்பால் தூது விடுக்கிறார் என்பதும் ஒரு அதிசயந்தானே! அவர் பெயர் சீனிச்சர்க்கரைப் புலவர். ஒரு தலைவி புகையிலையை பால தண்டாயுதபாணிபால் தூதனுப்புவதாக அமைந்த இப்பிரபந்தத்தில் 59 கண்ணிகள் உள்ளன. ஆனால், கடைசி ஆறு கண்ணிகளில் மட்டுமே தூதுவிடும் செய்தி உள்ளது. இந்நூலிற்கு உ.வே.சா. அவர்கள் 14-8-1939 அன்று முகவுரை எழுதிப் பதிப்பித்துள்ளார். "பாட்டுடைத் தலைவனான பழநி ஆண்டவருக்குப் புகையிலைச் சுருட்டு நிவேதனமுண்டு என்று

சிலர் சொல்லக் கேட்டதுண்டு. விராலிமலையில் அத்தகைய நிவேதனமுண்டென்று தெரிகிறது. புகையிலை மிகுதியாகப் பயிரிடப்பட்ட இடங்கள் சூழ்ந்த பழநிக்கு அருகில் வசித்த ஒருவர் கேட்டுக்கொள்ள இயற்றியதாகக் கூறப்படுவதும் உண்டு” என்று எழுதுகிறார் உ.வே.சா. அவர்கள்!

“..................... வண்டிசைந்த
பூங்கடப்ப மாலையான் போரசுரர் தங்களுயிர்
வாங்கடப்ப வேலையான் வாலவுருப் – பாங்குபெறு
கந்தன் முருகவேள் காங்கேயன் வள்ளிபுணர்
சொந்த மணவாள துரந்தரிகள் – அந்தம்
தருபழனியுரன் எங்கள் சண்முகவேள் வீதிக்
கொரு பவனி மாமயின் மேலுற்றான் வருபவனி
சேவிக்க யான் போய்த் தெரிசிக்குமவ்வளவிற்
கோவித்து மாரனம்பு கொல்லவே ஆவலுடன்
ஆகினேன் மயக்கம் ஆருரைப்பார் உன்னையன்றி
வாகுபெற நீ போய் வகையாக – ஓசையுடன்
சென்றுரைத்துத் திண்புயமேற் சேர்ந்திலங்கு பூங்கடப்ப
மன்றல் கமழ் தார் வாங்கி வா”

(அடப்ப வேலையான்: அடம்பு படர்ந்த கடற்கரையை உடையவன். வாலஉரு: பாலசுப்பிரமணியத் திருவுருவம். துரந்தரிகன் =துரந்தரன் – காரியத்தை முடிக்கும் ஆற்றலுடையோன். ஆவலுடனாகினேன் - உடனே ஆசையுடையவளாயினேன்.)

பழனாபுரி மாலை

இன்றைக்கு சுமார் 175 ஆண்டுகளுக்கு முன் பழநியில் வாழ்ந்தவர் மாம்பழக் கவிச்சிங்க நாவலர். இவரது இயற்பெயர் பழநியப்பன். திருமலை நாயக்கர் திருக்கோயிற் பணிகள் ஆற்றிவந்த போது இவரது முன்னோர்கள் சிற்பிகளாகப் பணிபுரிந்து வந்தனர். இவர்களது குழந்தை, மாம்பழம் கிடைக்காத காலத்தில் மாம்பழம் வேண்டி அழுதுகொண்டிருந்தது. மன்னர் இது கண்டு, குழந்தைக்குத் தங்க மாம்பழம் ஒன்றைக் கொடுத்தார். அதுமுதல் இம் மரபினருக்கு மாம்பழம் என்ற பெயர் ஏற்பட்டது.

மாம்பழத்தை மூன்றாம் வயதில் பெரிய அம்மை கடுமையாகத் தாக்கிற்று. பழநி ஆண்டவன் சந்நதியில் குழந்தையை வாழை இலையில் படுக்க வைத்து இடைவிடாது துதித்தனர். குழந்தை உயிர் பிழைத்தது. ஆனால், கண்பார்வை பறிபோய் விட்டது. கண்ணில்லாத குழந்தையைக் கல்விசாலைக்கு அனுப்ப முடியாததால் தந்தையார் ஒரு நல்ல நாளில் குழந்தையை மடியில் படுக்க வைத்து உயிரும் மெய்யுமாகிய முப்பது தமிழ் எழுத்துக்களையும் குழந்தையின் முதுகில் எழுதிக் காட்டினர். உடனே அதை முழுவதுமாகக் கிரகித்துக்

கொண்டு கற்பலகையில் எழுதிக்காட்டினான் குழந்தை மாம்பழம். இவ்வாறே தமிழ் எழுத்துக்கள் முழுவதையும் கற்ற மாம்பழத்திற்கு நல்லாசிரியர் பலர் மூலம் இலக்கண இலக்கிய கல்வியை ஊட்டினார் தந்தை. ஒருமுறை சொன்னாலே முழுவதையும் கிரகித்துக் கொள்ளும் திறனைப் பழநி ஆண்டவன் அவனுக்கு அளித்திருந்தது இதன்மூலம் தெரியவந்தது.


புறக்கண்ணை எடுத்துக் கொண்ட இறைவன் அகக்கண்ணைத் திறந்து விட்டிருந்தான்.

தென்மொழி, வடமொழி இரண்டிலும் தேர்ச்சி பெற்ற மாம்பழத்திற்கு சேதுமன்னர் 'கவிச்சிங்கர்' என்ற பட்டத்தை வழங்கினார்; கனகாபிஷேகம் செய்து வைத்தார்.

ஒருநாள், பழநி ஆண்டவனுக்குக் காவடி கொண்டு செல்லும் பக்தர்களுடன் மாம்பழமும் படி ஏறிச் சென்று இறைவன் சந்நிதியை அடைந்தார். பக்தர்களின் 'அரஹரோஹரா' கோஷம். கேட்டுத் தானும் இறைவன் திருமுன் அமர்ந்தார் அருகிலிருந்த சிலர் 'கண்படைத்த நமக்கே பழநி ஆண்டியைக் காணல் அரிது; அப்படியிருக்கும்போது கண்ணில்லாத இவர் என்ன பார்க்கப் போகிறாரோ' என்று எள்ளி நகையாடினர். மனம் நொந்த கவிச்சிங்கர்

பழனாபுரி மாலை எனும் நூலைப் பாடினார். விசயகிரி துரை என்பவர் பழநியில் இருந்த நாள், முருகன் பற்பல அற்புதம் காட்டி அருளினான் என்ற செய்தி அவருக்கு நினைவு வந்தது. "விசயகிரி துரையின் காலத்தில் இங்கு வெகு அற்புதம் செய்தது சத்தியமாயின்





இழித்துப் பேசும் கயவர் கூட்டும் வசைகளை நீக்கி என்னைக் காத்தல் உனக்குப் பெரும் காரியமோ? பழனாபுரி ஆண்டவனே!" என்று உள்ளம் உருகப் பாடினார் கவிச் சிங்கர்.

உடனே கவிச்சிங்கரின் மனக்கண்முன், கருவறையில் பழநி நாதனுக்குச் செய்யப்படும் பாலாபிஷேகம், பஞ்சாமிர்த அபிஷேகம், விபூதிக்காப்பு, அலங்காரவகை அனைத்தும் தோன்றலாயின. கவிஞர், அங்கு நடக்கும்ஒவ்வொன்றையும்பெருத்த குரலெடுத்து கூறிக்கொண்டே வந்தார். இதனைக் கண்ட கயவர்கள் நாணித் தலைகுனிந்து அச்சமுற்று வாய் அடங்கினர். இவ்வாறு நாவலர்க்கே அதிசயம் அநேகம் காட்டிய பழநி ஆண்டவன் அவர் அளித்த எண்ணற்ற பாமாலைகளை (பழநி கோயில் விண்ணப்பம், திருப்பழநி வெண்பா, பழநிப்பதிகம், சிவகிரி யமக அந்தாதி, திருப்பழநி சிலேடை வெண்பா முதலியன) பெருங்காதலுடன் சூட்டிக்கொண்டான்! மாம்பழத்திற்காக உலகை வலம் வந்த முருகனுக்குப் பழநியில் கிடைத்த மாம்பழம்தான் கவிச்சிங்க நாவலர்!

"வேற்று மருந்து ஏன்? விபூதி யொன்றேபோ தாதோ
தேற்று உன்னருள் மாத்திரமிருந்தால் காற்றுலவு
பஞ்சாமே நோயனைத்தும் பார்த்துப் பழநிவள்ளலே
அஞ்சாமே ஆள்வது அறன்."

- பழநி வெண்பா அந்தாதி.

"வாழ்க்கைச் சூழலாலும், வயது மூப்பாலும் வரும் நோய்தீர வேறு எந்த மருந்தையும் நாட வேண்டியதில்லை; உன் விபூதி மட்டும் போதும், காற்றில் பறக்கும் பஞ்சுபோல் நோயனைத்தும் ஓடிவிடும்.

பழநி வள்ளலே!
தண்டபாணித் தெய்வமே!
என்னை உன்னருளால் காக்க வேண்டும்!"

என்று பழநி ஆண்டவனின் விபூதி மகிமையை போற்றுகிறார்.

"தினைத்துணை யேனும் நின்சித்தம் என்பக்கம் திரும்பி விட்டால்
வினைத்துயர் தீர்வதரிதோ? பனிவெவ் வெயிலிலுண்டோ?
நினைத்த வரம் தமியேற்கருள் செய்து முன்னின்றிரட்சி
அனைத்துலகும் பணியும் பழனாபுரி ஆண்டவனே!"

– பழனாபுரி மாலை.

பழநி மலை வாழும் பாலதண்டாயுதா! தானியங்களில் சிறிய அளவான தினையளவிலாவது உன் அருள் எனக்குக் கிடைத்து விட்டால் போதும், முன் வினையால் ஏற்பட்ட துயரம் எல்லாம் ஆதவன் ஒளிபட்டு உருகி அகலும் பனிபோல மறைந்துவிடும். அகிலமெலாம் போற்றி வணங்கும் பழநியிலே ஆட்சிபுரியும் ஆண்டவனே! முருகா! எனக்கு அருள் செய்து ஆண்டருள வேண்டும்."

48 வயது வாழ்ந்து 1884ம் ஆண்டு மாசி மாதம் இறைவன் திருவருளால் தனது இறுதிக் காலத்தை உணர்ந்து,

"என்ன பிழை யான் செய்திருந்தாலும் எண்ணாமல்
அன்னபிழை எல்லாம் அகற்றி இன்னே நின்உபய
பாதநிழல் நல்கி எனைப் பாவித்துக் கொள் சமயம்
நீ குகனே நம்பினேன்"

என்ற பாடலைப் பாடி முருகன் திருவடியடைந்தார், மாம்பழக் கவிச்சிங்கநாவலர்.



"அந்த ஆன்ம லாபம் என்னாலாகாதா?"



மாம்பழக் கவிசிங்கரின் எண்ணற்ற பாடல்கள் அவர் முருகனுடன் பேசும் விதமாக அமைந்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. 'தயாநிதிக் கண்ணிகள்' எனும் அவர் பாடல் தொகுப்பு இத்தகையதொன்று.

"வாராயோ மாமயிலில் வந்து கலிதீர்த்து வரம்
தாராயோ? தென் பழநிச் சண்முக தயாநிதியே!"
"எத்தனை துன்பங்கள்! எளியேன் எப்படிச் சகிப்பேன்
அத்தனையும் தீர் பழநி அப்பா தயாநிதியே"
"உன்னை அன்றி உண்டோ உலகில் எனக்கு உற்ற துணை
என்னை வஞ்சியேல், பழனி எந்தாய் தயாநிதியே"

என்பன போன்ற அரிய கண்ணிகள் பழநிமுருகனுடன் அவருக்கிருந்த நெருக்கத்தை நமக்குணர்த்துகின்றன.

தண்டாயுதபாணி திருவுருவப் புகழை அவர் பாடியுள்ள விதமும் அவரது தனித்துவத்தைக் காட்டுகிறது.

"கடிய விடக்கனி மதுவால் கதித்த தினைப்
புனமானைக் கவர்ந்து பாதை
முடியவிடச் சினக் குறவர்க்கு ஒளிந்து ஓடி
வந்ததனால் முழந்தாள் சோர்ந்ததோ?
மடியவிடக் கய மகர மதனனை நோக்கிய
அரனார் மதலாய்! நாளும்
நெடிய விடக் கரமதனை இடை சேர்த்துத்
தடி ஊன்றி நிற்கின்றாயே!"

(கடிய விடக்கனி = கடி அவிழ்தக்கனி = வாசனைமிக்க மருந்துக் கனியான நெல்லி.

கய மகர மதனன் = மீனக் கொடியை உடைய மன்மதன்)

(வாசனைமிக்க அமுதக்கனிகளின் மதுவானது பாய்ந்து கதித்தெழுந்த தினைப்புனக் காவல் மானான வள்ளி தேவியைத் திருடிக்கொண்டு வந்த பாதை முடிவடைய சினமுள்ள குறவர் கூட்டங்களுக்குத் தப்பி ஒளிந்துகொண்டு ஓடி வந்ததனால் உமது முழந்தாள் சோர்வு அடைந்ததோ? மன்மதனை எரியும்படி நோக்கிய சிவனார் குமாரரே! அதனால்தான் உமது இடது கையை இடையில் சேர்த்துத் தடியை ஊன்றிக்கொண்டு நிற்கின்றீரோ?)

ஸ்ரீபழநி ஆண்டவர் சமூகங் கண்ட பதிகம்:

ஆறுமுக பண்டாரத்தவர்களால் இயற்றப்பெற்ற இந்நூலில் கவிஞர், பழநிஆண்டவர் கோயிலில் நடக்கும் ஆறுகால பூஜைகள், ஆண்டிக்குச் செய்யப்படும் அலங்காரங்கள், அபிஷேகங்கள், உருவச்சிறப்பு மற்றும் கோயில் காட்சிகளை விருத்தமாகப் பாடியுள்ளார்.

அபிஷேக விருத்தம்

"திருமேனி மீது பரிமள மேவு வரதநதி
தீர்த்த அபிஷேகம் கண்டேன்
தினசரி விளங்கவரும் அறுதேசிகாலமிகு
தேனாபிஷேகம் கண்டேன்
தருவாரும் இனிய கனி பிழிரசமும் அபரிவித
சகித அபிஷேகம் கண்டேன்
சந்தானம் விபூதி பன்னீர் புனுகுசவ்வாது
தனிமை அபிஷேகம் கண்டேன்
பருகமிகு பசுநிரைகள் நிதமும் உதவவரு



பாலாபிஷேகம் கண்டேன்
பஞ்சாமிர்தமும் தயில மிஞ்சு திரவிய மாவும்
பரவும் அபிஷேகம் கண்டேன்
குரவும் அடி மருகொடு மல்லிகை உதவும் அத்தரின்
கோல அபிஷேகம் கண்டேன்
குலமணிகள் கலகலென ஒலி பெருகு பழனிமலைக்
குமர குருபர சமுகமே"

வையாபுரிப்பள்ளு:

கி.பி. 16, 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் பழநிப்பதி, பழநிச் சமீன் என்ற சமீன்தார்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. பழநிமலைக்கு விசயகிரி என்ற பெயரும் உண்டு. சமீன் பட்டம் பெற்று ஆட்சி செய்தவர்கள் தம் பெயருடன் விசயகிரி என்றும், பின்னால் சின்னோவன் ஐயன் என்றும் பெயர் சூட்டிக்கொண்டனர். நாளடைவில் இதுவே சின்னோவையன் என்று மருவியது. குமார விசயகிரி வேலச் சின்னோவையன் எனும் சமீன், பழநிப் பெருமான் மீது வையாபுரிப் பள்ளு, தண்டபாணிப் பதிகம், சமயமாலை ஆகிய நூல்களைப் பாடியுள்ளார். பழநி வட்டாரத்திலுள்ள வயல்களிலும் வயல் சார்ந்த இடங்களிலும் உள்ள 30 சிறு தெய்வங்களைப் பற்றியும் அத்தெய்வங்களின் வழிபாட்டு முறைகளைப் பற்றியும் பாடியுள்ளார்.

முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட வையாபுரிப் பள்ளு, வையாபுரி நாட்டு வளத்தினையும், பழநி முருகனின் பெருமையையும் பேசுகிறது.

"சத்துரு சங்காரன் எங்கள் பழநிச் சிவகிரி வேலன்
சந்நிதி தழைக்கக் கூவாய் குயிலே" என்றும்
"திங்கள் மும்மாரி பெய்து எங்கும் வினைவேறவே
செங்கோன்மை தழைத்தோங்கக் கூவாய் குயிலே" என்றும்
"பொங்கும் உயர் வையாபுரி நாடும் கற்பக நாடு போல்
செழித்தோங்கக் கூவாய் குயிலே" என்றும்

பள்ளுப் பாடும் கவிஞரது தெய்வப் பற்றும், நாட்டுப் பற்றும் இப்பாடல்களில் வெளிப்படுகின்றன.

குமார விசயகிரி வேலர் பாடிய சமயமாலை என்னும் நூலில் உள்ள பாடல் ஒன்றில் கி.பி. 1773 இல் பழநிமலைத் திருக்கோயிலில் சீர்திருத்தப் பணி நடைபெற்றதாகத் தெரிகிறது.

"கலியில் நாலாயிரமும் கடந்த பின்னர் எண்ணூறின் மேல்
மலி நந்தன வருடம் மங்கள நேர் தைப்பூசம்
சிலை திருத்தி நாற்பது நாள் திருப்பணிப் பிரதிட்டை செய்து..."

என ஒரு பாடல் கூறுகிறது. மற்றொரு சமயமாலைப் பாடலால், சேர மன்னன் கட்டி வைத்த ஆலயத்தின் வெளிப்பாகத்தில் சுற்றுமண்டபமும், திருச்சுற்று மதிலும், பல சிறுமண்டப அறைகளும் அமைத்து வழிபாடு செய்ததாகத் தெரியவருகிறது.

"சேரர் கோன் கட்டி வைத்த சீராலயம் வெளியில்
நேரிலகு மண்டபமும் நீள் சுற்றுமா மதிலும்,
பேரிலகவே அமைத்துப் பேணறைகள் செய்த என்முன்
வாரிலகு தேவியுடன் வருவாய் இது சமயம் என்பதாம்"

குமாரவேலரது தந்தையார், பழநிப் பிள்ளைத் தமிழ், வருகைப் பத்து, முருகையன் வண்ணம் ஆகிய பலநூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் பிள்ளைத் தமிழிலுள்ள 'சிறுதேர்ப்பருவப்' பாடலை இங்கு பார்ப்போம்.

"இந்திரன் குடை பிடித்திட அகற்கடவுள் வந்
தெதிர் நின்று விசிறி வீச
இமயனுடன் நிருதி வெண்சாமரைகள் முறைமுறை
யிரட்ட, வருணன் வாயுவும்
சந்திரனும் உடைவாளை ஏந்தி நின்றிருபுறந்
தான்நிற்ப அளகை வேந்தன்
தயவினொடு காளாஞ்சி ஏந்த ஈசானன்இது
சரியென்று முறுவல் கூர
மந்திரப்புனல் கொண்டருச்சித்து வேதன் முதல்
மறைமுனிவர் துதிகள் செய்ய
வானகத்தமரர் நறுமலர் பெய்ய, மழகதிர்
மறைத்த கார்மழைகள் பெய்யச்
சிந்தனை மகிழ்ந்து நவமணியினால் ஒளிர்கின்ற
சிறுதேர் உருட்டி அருளே

தென்பழநி நகரிவரு சிவகிரியின் முத்தையன்
சிறுதேர் உருட்டி அருளே

பழநிப் புராணம்:

இன்றளவும் பழநிப் பதியில் தலபுராணத்தை அறிந்துகொள்ள ஆதாரபூர்வமான மூல நூலாகக் கருதப்படுவது பாலசுப்ரமண்யக் கவிராயர் எழுதிய பழநிப்புராணம் என்பதாகும். சுமார் 420 ஆண்டுகளுக்கு முன்பு பழநிமலைக் கோயிலில் தேவார, திருவாசக நூல்களை முறைப்படி ஓதும் தொழில் செய்து வந்த பெரிய கவிராயர் எனும் புலவர் குழந்தைப்பேறின்மையால் மிகவும் வருந்தினார். சக்தி தீர்த்தம், ஷண்முக தீர்த்தம் இவற்றில் நீராடி பழநி ஆண்டவனுக்குகந்த கடம்பு, கழுநீர், வெட்சி மாலைகள் சார்த்தி இடைவிடாது துதித்தனர். அவனருளால் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. குழந்தைக்கு குமரவேள் திருநாமமாகிய பாலசுப்ரமணியன் எனும் பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

திடீரென்று குழந்தைக்குக் கண் ஒளி குறைந்தது. காதும் செவிடுபட்டது. பெரிய கவிராயர், குழந்தையை எடுத்துச் சென்று பழநி நாதனது சந்நிதியில் கிடத்தி "பன்னிரண்டு கண் படைத்தோய்! பன்னிரண்டு (பன்னு இரண்டு) கண் பெற எம் பாலகர்க்குப் பண்ணுவையே" "ஆறிரண்டு செவி படைத்த ஆரமுதே! எங்கள் மகன் மாறிரண்டு செவிநலமே வாய்த்திடவே அருளுவையே" என்று மனமார வேண்டினர்.

இரக்கம் கொண்ட இறைவன், இக்குழந்தை சாதிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்று எண்ணித்தானோ என்னவோ, ஒரு முதியவர் வடிவில் குழந்தையின் கனவில் தோன்றினான். நீறு பூசிய நெற்றி, காவி உடை, கரத்தில் தண்டாயுதம் இவற்றொடு கூடிய ஒரு பேரொளி தன்னை நோக்கி வருவதை குழந்தை கண்டான். தன்னிச்சையாக இரு கைகளையும் குவித்து அவ்வொளியை நோக்கி வணங்கியது. வந்த முதியவர் திருநீற்றை அள்ளி குழந்தையின் உடம்பெங்கும் பலமுறை தடவி, கையில் ஒரு கடப்ப மலரைக் கொடுத்து "கண்ணில் ஒற்றிக்கொண்டு காதில் வைத்துக்கொள்; உன் இடர் எல்லாம் இன்றே ஒழியும்" என்று கூறி மறைந்தார். பெற்றோர் கனவிலும் இதே நிகழ்ச்சி தோன்றியது.

அனைவர் கையிலும் கடப்ப மலர் இருந்தது. கனவில் வந்தவர் பழநி ஆண்டவனே என்றுணர்ந்து, மலர்களைக் குழந்தையின் கண்ணில் ஒற்றிக் காதில் வைத்தனர். சுந்தரரது இரு கண்களையும் ஒளி இழக்கச் செய்த சிவபெருமான், பின் மீண்டும் அவற்றிற்கு ஒளி அளித்தான். குழந்தை பாலசுப்ரமணியனுக்கு ஊனக்கண்ணுடன் ஞானக் கண்ணையும் திறந்து வைத்தான் சிவகுமரன். வளர்ந்து பெரியவனான பாலசுப்ரமண்யம் வடமொழி, தென்மொழி

இரண்டிலும் தேர்ச்சி பெற்றான். மாயாவாதம் எனும் சூழலில் சிக்கியபோது, பழநிமலைத் தரிசனத்திற்காக வந்த திருவாவடுதுறை சுப்ரமண்ய தேசிகர், அவனுடன் வாது புரிந்து நல்வழிப்படுத்தினார். அன்று முதல் நேர்ப்பாதையில் பயணித்த பாலசுப்ரமண்யர் தஞ்சை அரசரிடமிருந்து கவிராயர் பட்டமும், பல விருதுகளும் பெற்றார்.


சேர சமஸ்தானத்தரும், பழநியிலுள்ள பல பெரியோர்களும் முருகனடியார்களும் பழநி மான்மியங்களை விரித்துக் கூறும் வகையில் ஒரு புராணம் இயற்றித் தருமாறு பாலசுப்ரமணியரை வேண்டிக் கொண்டனர். இவ்வேண்டுகோளைப் பெரும் பேறாகக் கருதிய கவிராயர் இயல்பாகவே இருந்த முருகபக்தி காரணமாக நூலை இயற்ற ஆர்வம் கொண்டார். சிவபெருமான் இயற்றியருளிய பதினெண் புராணங்களுள் மிகச்சிறப்பாகத் திகழ்வது கந்தபுராணம். ஒரு லட்சம் கிரந்தங்கள் கொண்ட இப்புராணத்தை சிவனார் முதன் முதலாகத் திருநந்தி தேவருக்கு உபதேசித்தார். அவர் சனற்குமார மகாமுனிவருக்கு இதனைப் போதித்தார். அவர் வேத வியாசருக்குப் போதித்தார். அவர் சூதமகாமுனிவருக்கு இப்புராணத்தைக் கூறினார். நைமிசாரணியத்தில் இருந்த முனிவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சூதமுனிவர் கந்தபுராணத்தை ஓதினார். வடமொழியில் இயற்றப்பெற்ற கந்தபுராணத்தில் இருக்கும் கிரிப்பிரகாச காண்டம் என்ற பகுதியில் பழநித் தலமான்மியம் 24 அத்தியாயத்தின் மேல் கூறப்பட்டுள்ளது. அதனை நன்கு படித்து அறிந்து ஆய்ந்து, பாலசுப்ரமண்யக் கவிராயர், செந்தமிழ் நடையில் பழநித் தலபுராணத்தைப் பாடினார். இதில் 23 சருக்கங்கள் உள்ளன. இறைவனருளால் மூன்றே தினங்களுள் இப்புராணத்தைப் பாடி முடித்தார் என்பது கீழ்வரும் வெண்பாவினால் புரிகிறது.

“கொங்கார் பழநிக் குடியார் முதுக் குறைவோ
ரெங்கார் மயில் கடவுளின் பழநி – மங்காத
நற்புகழைச் செய்யென மூன்றா நாளில் நல்கிட்டான்
சிற்புகழான் மெய்ப்புலவன்றேர்”

பழநிப் புராணம் என்று கவிராயர் பெயரிட்டிருந்தாலும் பழநித் தலத்திற்கு என்று உள்ள ஒரே புராணமாக இந்நூல் திகழ்வதால் ‘பழநித் தலபுராணம்!’ என்று பாராட்டப்படுகிறது. பழநித்தல புராணம் பாடிய பின் இன்னும் பல நூல் இயற்றி பழநி ஆண்டவன் திருவடி அடைந்தார் பாலசுப்ரமண்யர். அவரது குருடும், செவிடும் குணப்படுத்தி அருள்படுத்திய வரலாறும் பழநிக் குமரன் செய்த பல அதிசயங்களுள் ஒன்றாம்.

திருப்பழநிப் பதிகம்:

ராமேஸ்வரத்தை அடுத்த பாம்பனில் பிறந்து, தமிழகத்தின் பல பகுதிகளிலும் முருக பக்தியை நிலைநாட்டி, வான்மீக



முனிவர் தவம் செய்த மருந்தீஸ்வரர் உறையும் திருவான்மியூரில் முக்தி அடைந்த பாம்பன் சுவாமிகளைப் பற்றித் தெரியாதவர்களே இருக்க முடியாது. வாழ்நாளில் 6666 பாடல்கள் எழுதிய பாம்பன் சுவாமிகள், அதி இளமையிலேயே சந்தத் தமிழ்க்கவி சொல்லும் தனித்திறம் படைத்தவராக விளங்கினார். அவர் எழுதிய பரிபூர்ண பஞ்சாமிர்த வண்ணம், குமாரஸ்தவம், ஷண்முக கவசம் போன்ற நூல்கள் எண்ணற்ற பக்தர்களால் பாராயணம் செய்யப்படுபவை. பழநி ஆண்டி மீது அவர் பாடிய நூல்கள், திருப்பழநிப் பதிகம், திருப்பழநித் திருவிளையாடல் என்பன. பழநி ஆண்டவன் சுவாமிகளது வாழ்வில் அதிர்ச்சி தரும் திருவிளையாடல் ஒன்றை நிகழ்த்தினான்.

பாம்பன் சுவாமிகள் இளமையில், அவருக்கு அக்னி தீர்த்தக்கரையில் ஷடாக்ஷர உபதேசம் செய்த ஆசிரியரின் ஆணையை மறுக்க அஞ்சி, அவர் இல்லறம் ஏற்றார். ஆயினும் சின்னஞ்சிறு வயதிலிருந்தே இவருள்ளம் துறவு நிலையையே பெரிதும் நாடியது. கி.பி. 1891 ஆம் ஆண்டு ஆடிமாதம் ஒரு வெள்ளிக்கிழமையன்று தமது நண்பரான அங்கமுத்துப்பிள்ளை என்பவரிடம் “நான் நாளை பழநிக்குச் செல்ல உள்ளேன்” என்றார். “திரும்புவது எப்போது?” என்று நண்பர் கேட்டபோது “சொல்வதற்கில்லை” என்றார் சுவாமிகள்.

“நீங்கள் இப்போது அவ்வாறு செய்யக்கூடாது; இது குகப்பெருமான் கட்டளையோ?” என்று கேட்டார் நண்பர். நண்பர் தம்மைப் பழநி செல்லவிடாமல் தடுத்து விடுவாரோ என்ற அச்சத்தினால் ‘ஆம்’ என்று பொய் கூறிவிட்டார் சுவாமிகள்.

பொய் கூறியபின் சுவாமிகளின் மனச்சாட்சியே அவரை வதைத்து வந்தது. அன்று இரவு தன் வீட்டு மொட்டை மாடியில் அமர்ந்து, ‘அமரர் கோ’ என்ற தனது பிரபந்தம் முதல் ‘அமிர்தமதி’ எனும் பிரபந்தம் வரைப் பாடல்களைப் படித்து ‘முருகா! நீ இவற்றைக் கேட்டருளல் வேண்டும்; நான் நாளை இவ்வூரை விட்டு நீங்கித் துறவு பூண எண்ணியுள்ளேன்’ என்று சிந்தித்துத் தென்புறம் திரும்பினார். உடனே எதிரில் இறைவன் திருவுருவம் தோன்றியது. தம் அனுபவத்தை சுவாமிகள் இவ்வாறு எழுதுகிறார். “அவர் தமது வலக்கரச் சுட்டு விரலை நிமிர்த்தசைத்தார். பற்களைக் கடித்து அச்சுறுத்தினார். அவரது திருமுகம் எரிமுகமாகிக் கோபப் பொறிகளை அள்ளி வீசியது. அவரது திருமேனி விவரம் கூற என் மனம் இசையாது” என்கிறார்.

பேரச்சம் விளைவித்த அந்த திருவுருவத்தைக் காணப் பயந்த அடிகளார், கண்களை மூடிக் கொண்டு “என்னப்பனே! என் இறைவனே! நில புலம் விழைந்து நான் பொய் கூறவில்லை. ஆன்ம லாபம் அடையக் கருதியே அவ்வாறு கூறினேன்.” என்று கதறினார். அதைத் தெரிந்து கொண்ட முருகப்பெருமான், “அந்த ஆன்ம லாபம் என்னாலாகாதா?” என்று திருவாய் மலர்ந்தருளி “இனி நான் வருக என்று கூறும்வரையில் பழநிக்கு நீ வரக்கூடாது; வருவதில்லை என்று கூறு” என்றான். அடிகளாரும் “அப்படியே” என்று வாக்களித்து விட்டார். உடனே வேலிறைவன் திருவுருவமும் மறைந்தது.

பிற்காலத்தில் சுவாமிகள் பழநிப்பதியைத் தரிசிக்கத் துடியாய்த் துடித்ததுண்டு. அதனால் “சிறுமை நீக்குயர் செல்வம், துறவு நோக்கம், பிழை பொறுக்க முறையீடு” எனும் பிரபந்தங்களைப் பாடினார். இவற்றில், “மயிலோன் யான் செய்த பிழை கண்டு என் முன் தோன்றிக்களித்ததே” என்றும், “தெய்வமே! உன் திருவடித் துணை நம்பித் திரியவென்று விரும்பியே துறவுகொண்டேன்” என்றும், ‘சிவகுமரா! என் குறை தீர்த்துப் பொறுத்தாள்வது உன் கடனாகும்’ என்றும் முறையே கூறியுள்ளார். இவ்வாறு பலவிதமாகப் பாடிப்பாடி உருகியும் பழநிக்கு வருமாறு இறுதிவரை அவருக்கு உத்தரவு கிடைக்கவில்லை. இக்கருத்தை வலியுறுத்தித் திருப்பழநிப் பதிகத்தைப் பாடினார் பாம்பன் சுவாமிகள்.

“சிங்கா நன்குதவுந் திருஆறெழுத்தாளா
கங்காளன் குருவே நினையே கருத்தில் வைத்தேன்
மங்கா வாழ்வுடையாய் எனைவாவென்றே அழையாய்
தெங்கார் தென் பழநித் திருக்கோவிலுள்ளாயே”

சூடேன் நின்னடியையன்றித் துதித்து நான் எதையும்
பாடேன் எம்மானே பரமார்த்த சன்யாசி
வாடா விண் மலரே எனைவாவென்றே அழையாய்
சேடார் தென் பழநித் திருக்கோவிலுள்ளாயே!

தந்தார் சித்தர்களுந் தனிஞான விற்பனரும்
வந்தே தாள் பணிய நிற்கும் வரத மாமுனியே
மந்தாரத் திருவே என்னை வாவென்றே அழையாய்
செந்தார்த் தென்பழநித் திருக்கோவிலுள்ளாயே

சந்தா நீறணிந்து கையில் தண்டமொன்றுடைய
கத்தாவாய் எவர்க்கும் பரகதி நல்கைய! பது
மத்தார் பூணழகா எனை வாவென்றே அழையாய்
சித்தா தென்பழநித் திருக்கோவிலுள்ளாயே”

திருப்பழநி ஆண்டவன் தம்மை ஆண்ட நிலைமையை, சுவாமிகள் கடுந்தண்டனையாகக் கருதாது பொய் புகலல் போன்ற குற்றங்கள் செய்யாதவாறு தடுத்தாண்ட மறக் கருணையாகவே பாராட்டினார்.

“பொய் சொலேல் இனிப் பொய் சொலேல் எனப்
பொன்னின் நா அசைத்தோதி ஏகிய
துய்ய சேயடி சேர மாதுதி சொல்லுவவே”
(திரு அலங்கல் திரட்டு)

மற்றொரு அரிய நூல் “பிழை பொறுக்க முறையீடு”

“கன்னலே! இழுதே! கற்கண்டே! தேனே!
கனிந்த முக்கனி ரசமே! இன்
மன்நய விளவே! அமுதமே! ஒழியா
மதுரமே! சீனிச் சர்க்கரையே!
என் உளத்து இயங்கும் இறை எனும் குருவே!
எந்தையே! திருத்துணை கிடைத்த பின்னும்
நிற்கு ஏற்காப் பிசி தனை நவின்றேன்
பிழை பொறுத்தாள்வது உன்கடனே!

(உன்மேலானதுணைகிடைத்தபிறகும்,உனக்குஏற்புடையதல்லாத பொய்யினைக் கூறினேன், என் குற்றங்களைப் பொறுத்து அடிமை கொள்வது உன் கடனே ஆகும்!)

“ஆசை கொள் பாழ்த்த நினைப்பினுள் அயர்வேன்
அதிகமும் ஏழையே! முனிந்து
பேசிய நீதான் என்னைக் கைவிடாது என்
பிழை பொறுத்தாள்வது உன் கடனே!”

திருப்பழநிமலைப் பதிகத்தில், உள்ளம் உருகப் பழநி முருகனை இறைஞ்சுகிறார்.

“ஊழி முடிவு என நவிரம் ஏறும் முதல்வா!
என்றன் ஊறு கெட என்று வருவாய்?
உலகனைத்தும் புகழ் திருப்பழநிமலைமேவும்
ஓங்கார குருநாதனே!”

“தண் ஏறு நின் அடியை நண்ணாத பாவி,
பொய் சாலவும் சொற்ற பாவி,
தக்கோர் இடத்து உறவு பண்ணாத பாவி, வெகு
தவறுகள் இழைத்த பாவி
உள்நேர் இலாத படுபாவி நான் உன் அருள்
உறாது உய்ய இடனும் உண்டோ?
உலகனைத்தும் புகழ் திருப்பழநி மலைமேவும்
ஓங்கார குருநாதனே!”
‘பிடிபட்ட உழை எனக் குழையும் என் நெஞ்சை
நின் பெரியதிருவுள்ளம் அறியும்
பேயினும் கடையனேன் எனினும் உனை நம்பும் எனைப்
பீடையில் நிறுத்தல் முறையோ?
உடலினுக்கு உயிராகி உயிரினுக்கு அறிவாகி
ஒளிர்கின்ற பரமபதியே!
உலகனைத்தும் புகழ் திருப்பழநி மலைமேவும்
ஓங்கார குருநாதனே!”



வேலிறைவனை வணங்குவோரை வணங்குவேன்



பழநி ஆண்டவன், தம்மைப் பழநிக்கு அழைக்க மறுத்துவிட்ட போதிலும், அகத்தியர், சிவகிரி-சக்திகிரி மலைகளை எடுத்து வந்தது முதல், இடும்பனால் அவை 'பழநி' என்ற பெயரில் தென்னாட்டில் நிலைபெற்றது வரையிலான அத்தனை நிகழ்ச்சிகளையும், 80 பாக்கள் அடங்கிய 'திருப்பழநிமலைத் திருவிளையாடல்' எனும் அழகிய தொகுப்பாகப் பாடி அருளியுள்ளார் பாம்பன் சுவாமிகள். சிவகிரியில் குராமர நிழலில் காட்சியளித்த முருகப்பெருமானை இடும்பன்

சித்ரா மூர்த்தி

அடையாளம் கண்டு கொள்ளாத நிகழ்ச்சியைக் குறித்து இவ்வாறு பாடுகிறார்.

"…..பிடர் கிடக்கும் புன்குடுமி அழகு மாசு கவ்வாத கருணைவிழி இரண்டுமதி காந்தி கிளர் முகமு மார்பிற் செவ்வாடகமென அவிர் பூணூலுந் திருகரத்திற்றினார் கோலும் எவ்வாகும் அறுதிறந்த கோவணமு மிலங்க நிற்கும் இளைஞற் பார்த்து,

"சிறுவ நீ தனித்து நிற்ற லெவன் வயவை தப்பி இந்தச் சிலை சேர்ந்தாயோ? மறுவில் நீ திருவனைத்தும் ஒங்கலெனத் திரண்டனவால் இவற்றை மாண்பிற் பெறுவன் நீறுறினும் எனும் ஆசையினாற் போந்தனையோ பேசாய்" என்ன உறுகண் நீறிலியாகு முருகன் அங்ஙன் முகிழ்த்த நகையொன்றே செய்தான்"

பொருள்: பிடர் மீது கிடக்கின்ற சிறுகுடுமி யினழகும், குற்ற மொன்றும் அணுகாத கருணைபொழி கண்ணிணைகளும், பேரொளி வீசும் திரு முகமும், திருமார்பின் செம்பொன்னென விளங்கு பூணூலும், திருக்கரத்தில் வலிய தண்டமும், அரையில் எக்குற்றமுமற்ற கோவணமும் பொலிவுற நிற்கும் இளைஞனை நோக்கி, "சிறுவ! நீ இங்கு தனித்து நிற்றல் யாது குறித்து? வழி தப்பி இம்மலையை அடைந்தனையோ? பல்வகைச் செல்வங்களும் இம்மலைகளென ஒருங்கு திரண்டுள்ளன. ஆதலால் உயிர்க்கிறுதிவரினும் இவற்றைக் கைப்பற்றுவேன் எனும் ஆசையினால் எழிலுடைய நீ இங்கு வந்தனையோ? யாதென்று தெரிவிப்பாயாக?" என்று கேட்க, துன்பமும் நாசமுமற்ற முருகநாதன், அங்ஙனம் குறுநகை மட்டுமே செய்தனன் - (திருவாய் திறந்தொன்றும் கூறினானல்லன்) என்று பாடுகிறார் பாம்பன் அடிகள்!

"உள்ளக்களி" எனும் பாடல் தொகுப்பில்,

"முண்டிதம் இல் சிறுசிகையும், இடையில் அணிகவுசனையும் முழுமதியம் என மிளிரும் முகமும், ஒரு கைத்தண்டும் உரம் உறு புரியும், இளமை உடை உருவும், எழில் தர இல, இருடி சுரர் அடிகள் எவரும் கண்டு நலன் அடைய என அமிர்தம் மழைபொழி பெரிய கருவி கவி பழநிமலை உறை பெரியவன் தொண்டன் என உள எனது மனதில் உளன். இரவு பகல் துணையும் அவன், அணைவும் அவன், நினைவும் அவனே" என்று பாடுகிறார்.

பழநி ஆண்டியைத் தரிசிக்காதபோதிலும் அப்பெருமான் மீது பாம்பன் சுவாமிகள் கொண்டிருந்த பக்தி அளவிடற்கரியது. "வேலிறைவனை வணங்குவோர் எவர் எனினும் அவரை வணங்குவேன்" எனத் "திருவுயர்ந்த ஆறெழுத்தான்" பதிகத்தில் தெரிவிக்கிறார்.

ஏழாம் பாடலில் "திருப்பழநி மலையில் திருக்கோயிலைக் கட்டிய சேர அரசனுக்கு முன்னாளில் ஒப்பில்லாத கதியை அளித்தருளிய பரப்பிரம்மம் ஆன சேயின் திருவடிகளை உள்ளத்தில் நினைத்திடுவார் எவர் ஆனாலும் இவ்வுலகில் அவரே எனக்குக்

கடவுள் ஆவார்" என்கிறார்.


இப்பதிகத்தில் வரும் பத்தாவது பாடலில், பழநிக்கு உத்தரவிடும் போது வருமாறு முருகன் கூறும் செய்தியும் உள்ளது.

"செந்தமிழைச் செவிமடுத்து மகிழும் தேவை
திறல் இடும்பன் உயிர் முருக்கி எழுப்பும் தேவை
புந்தி நிறைவு உடை அருணகிரி சூழ் தேவை
புதர் இகந்த கர வருடம் கடக மாதம்
வந்த ஒரு புகர் இரவில், "பழநிக் கோவில் வர,
இஞ்ஞான்று அருள வில்லை,
அருள்வேம் அந்நாள் பந்தம் அற வருதி" எனப் பணித்துப் போந்த பண்ணவனைப் படர்பவர் எம் பரமர் தாமே"

"செந்தமிழ்ப் பாடலைத் தம் திருச்செவிகளால் கேட்டு மகிழும் கடவுளை, வலிமை உடைய இடும்பாசுரனின் உயிரைக் கொன்று மீண்டும் உயிர் பெற்றெழச் செய்தருளிய கடவுளை, அறிவு நிறைந்த அருணகிரிநாதர் எப்போதும் நினைக்கும் கடவுளை, குற்றமற்ற கரவருடம் கடக மாதம், ஓர் அழகிய இரவில் "பழநிக் கோயிலுக்கு நீ வருவதற்கு இப்போது நாம் அருள் செய்யவில்லை; ஒரு நாள் வருவதற்கு அருள் செய்வோம்; அப்போது உன் பற்று அறுவதற்கு அங்கு வருவாயாக" என்று கட்டளையிட்டருளிச் சென்ற இறைவனை நினைப்பவர் எம் கடவுள் ஆவார்" என்பது இப்பாடலின் பொருள்!

பழநி ஆண்டவனைத் தரிசித்து அவனருள் விழைந்து பெற்ற பல மகான்களது அரிய வரலாறுகளுக்கிடையே, அவரைக் காணப் பெறாத நிலையிலேயும் அவன் அருள் வேண்டிப் பாமாலைகளால் துதித்து நற்கதி அடைந்த பாம்பன் சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு அதிசயிக்கத் தக்கதொன்றாகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர் ஆ. தசரதன் அவர்கள், பழநி ஆண்டவர் பேரிலுள்ள ஓலைச் சுவடிகள் பற்றிய விவரங்களை விரிவாக அளித்துள்ளார். அதன்படி,



பத்துப்பாக்களாலான பதிகங்கள் முதல், பலநூறு பாடல்களாலான புராணங்கள் வரை பழநி ஆண்டவர் பெயரில் பல தமிழ் நூல்கள் பாடப்பெற்றுள்ளன. அவற்றுள் அச்சிடப் பெற்றவை ஒரு நூறுக்கும் மேல் என்றால், அச்சிடப் பெறாதவை அதற்கும் அதிகம் என்று தெரியவருகிறது. அச்சிடப் பெறாத அனைத்தும் ஓலைச் சுவடிகளாகவும், தாள் சுவடிகளாகவும் நிறுவன நூலகங்களிலும், தனியார் நூலகங்களிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.




சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், தமிழ்ப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னை உ.வே.சா. நூலகம் போன்ற நிறுவனங்களில் கண்டறியப்பட்டுள்ள சுவடி களல்லாது, கண்டறியப்படாத தமிழ்ச் சுவடிகளையும் சேர்த்துக் கணக்கிட்டால்ஏறத்தாழ இருநூறுக்கும் அதிகமான, தண்டபாணி சுவாமி மீதான தமிழ்ப் பனுவல்கள் இன்னும் அச்சிடப்படாமல் உள்ளன என அறிந்து கொள்ள முடிகிறது.

பிள்ளைத்தமிழ், தாலாட்டு, நொண்டி நாடகம், கோவை, பள்ளு, மாலை, அந்தாதி, பதிற்றுப் பத்தந்தாதி போன்ற சிற்றிலக்கிய வகைகளிலான பல நூல்கள், பக்திச் சுவை சொட்டும் நூல்களாகும்.

நாட்டுப்புற இசையுடன் பாடப்பெற்ற நூல்களும் தற்காலத்தில் கிடைத்துவருகின்றன என்கிறார் முனைவர் தசரதன். பழநித் தலத்தில் முருகப்பெருமானுக்கும், இடும்பனுக்கும் நடந்த சண்டையை மையமாக வைத்துப் பாடப் பெற்ற செண்பக நாச்சியார் கதைப் பாடல்1என்றநூல் தென் பகுதிகளில் வில் இசையில் பாடப்படுகிறது. இந்நூல் கி.பி.1620 அருதனக்குட்டி அடிகளார் என்பவரால் இயற்றப்பட்டு வில்லில் அரங்கேறியது என்பர். இதைப் போன்றே, வள்ளி-முருகன் திருமணப் பாட்டும் அருதனக் குட்டியாரால் அதே காலகட்டத்தில் பாடப்பட்டது. இக்கதைப் பாடல் களன்றி பழநி ஆண்டவர் மீது பாடப்பெற்றுள்ள காவடிச் சிந்துகள், பழநித் தலத்துடன் தொடர்பு பெறும் போகர் பெயரில் பாடப் பெற்றுள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள், ஞானப் பனுவல்கள் போன்ற அனைத்தும் தொகுக்கப்பட்டால் பழநித் தலம் பற்றி ஈராயிரம் நூல்கள் வெளிப்படும் என்கிறார் திரு. தசரதன்.

பக்தி முதிர்ந்த நிலையில் பழநி ஆண்டவன் மீது பாமாலைகள் புனைந்த பல புலவர்களது வாழ்க்கையைப் பார்த்தோம். ஆனால் பழநி ஆண்டவன் ஆன்மிகத்தில் சிறிதளவும் நாட்டமில்லாத ஒருவர் வாழ்க்கையில் விளையாடி, அவர் வாழ்க்கைப் பாதையையே மாற்றி அமைத்து விட்ட வரலாறு அதிசயிக்கத்தக்க தொன்றாகும். அவ்வதிசய மனிதர் தாம் வள்ளிமலை ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகள்.

அருணகிரிநாதருக்குத் 'தத்துவ தற்பர முற்றும் உணர்த்திய' வேலவன் குடி கொண்டிருக்கும் திருச்செங்கோட்டை அடுத்த பூநாச்சி கிராமத்தில் 1870ம் ஆண்டு பிறந்தவர் அர்த்தநாரி.



செங்கோட்டு மூலவரான அர்த்தநாரீஸ்வரர் அருளால் பிறந்த அருமைக் குழந்தையாக இருந்தபோதிலும் சிறுவன் அர்த்தநாரிக்குப் படிப்பிலும் ஆன்மிகத்திலும் சிறிதளவும் நாட்டமிருக்கவில்லை. 9வது வயதிலேயே மைசூரிலிருந்த ஒரு உறவினருடன், மகாராஜாவின் அரண்மனையில் உதவி சமையற்காரனாக வேலை செய்ய அனுப்பி வைக்கப்பட்டார். சமையல் செய்வதிலும், மல்யுத்தம், குத்துச் சண்டை ஆகியவற்றிலும் வல்லுநராக விளங்கிய அர்த்தநாரி, மகாராஜாவின் அன்பைப் பெற்றார். தான் பயணம் செய்யும் இடங்களுக்கெல்லாம் அர்த்தநாரியை உடன் அழைத்துச் சென்றார்.

35 வயது பிராயம் அடையுமுன்னரே, அர்த்த நாரியின் முதல் மனைவி, அவர் பெற்ற குழந்தைகள் மற்றும் இரண்டாவது மனைவி மூலம் பிறந்த இரு பெண்குழந்தைகள் ஆகிய எல்லோருமே அகால மரணம் எய்தினர். இது அவரது மனத்தில் பெரும் சஞ்சலத்தை ஏற்படுத்தியது. அடுத்தடுத்து வந்த இச்சோதனைகளால் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக அர்த்தநாரிக்குத் தொடர்ந்து வயிற்றுவலி ஏற்பட்டது. மகாராஜாவின் பரிவினால் மிக உயர்ந்த ஆங்கில வைத்தியம் பார்க்கப்பட்ட போதிலும், நோய் குணமாக வில்லை. அரண்மனையில் வேலை செய்து வந்த கொத்தனார் ஒருவர், 'ஒரு முறை பழநிக்குச் சென்று ஆண்ட வனைத் தரிசித்து வந்தால் நோய் தீரும்' என்று கூறியபோது அர்த்தநாரியால் மறுக்க முடியவில்லை.

1907ம் ஆண்டு, மனைவி நாகம்மாள், மகன் ஏழு வயதுச் சிறுவன் நரசிம்மன் இருவருடனும் ஈரோடு வரை ரயிலில் சென்று, பின் பழநியை நோக்கி நடந்தார். 1908ம் ஆண்டு, ஜனவரி 18ம் தேதி, ஒரு தைப்பூச நன்னாளில் பழநி வந்தடைந்தார். வெகு தொலைவிலுள்ள நதிகளிலிருந்து இறைவன் திருமஞ்சனத்திற்காகத் தீர்த்தம் கொண்டு வருவதும், அபிஷேகம் செய்யப்பட்ட பால், பஞ்சாமிர்தம் இவற்றை மட்டுமே உணவாகக் கொள்வதுமாக நாட்கள் நகர்ந்தன. ஒரு மண்டலத்திற்குள் வைத்தியர்களால் குணப்படுத்த முடியாத வயிற்றுவலி முற்றிலுமாக குணமடைந்தது. அத்துடன் இறை வழிபாட்டிலும் அர்த்தநாரிக்கு நாட்டம் அதிகரித்தது.

1908ம் ஆண்டு மே மாதம் பழநிக் கோயிலில் அக்னிநட்சத்திர விழா நடந்து கொண்டிருந்தது. பிராகார உத்சவத்தின்போது, இறைவன் மயில் வாகனத்தில் எழிலுற வர, தேவதாசி அவன் முன்னால் 'வங்கார மார்பிலணி' எனும் திருப்பு கழைப் பாடியபடி நடனமாடிக் கொண்டு வந்தாள். அப்பாடலின் ஒரு பகுதி பின்வருமாறு:

"சிங்கார ரூப மயில் வாகன நமோநமென
கந்தா குமார சிவ தேசிக நமோநமென
சிந்தூர பார்வதி சுதாகர நமோநமென விருதோதை
சிந்தான சோதி கதிர் வேலவ நமோநமென
கங்காள வேணி குருவானவ நமோநமென
திண்சூரர் ஆழி மலை தூள்பட வைவேலை விடு முருகோனே"

'சிங்கார ரூப மயில் வாகனா' என்ற பாடல் வரியைக் கேட்டதுமே அர்த்தநாரி புளகாங்கிதம் அடைந்தார். கண்ணீர் பெருகத் தன்னை மறந்து நின்றார். நினைவு வந்ததும், அருகிலிருந்தவர்களிடம் கேட்டு அது அருணகிரிநாதரின் திருப்புகழ் என்றறிந்து கொண்டார். தமிழ் மண்ணில் பிறந்தவராயினும், இளமைப் பருவத்தை மைசூரிலேயே கழித்ததால் கன்னடம் மட்டுமே அறிந்திருந்தார். மக்களும் அவரை மைசூர் சாமி என்றே அழைத்தனர்.

அபிஷேக தீர்த்தம் கொண்டு வரும் மணி எனும் 8 வயதுச் சிறுவன் அவருக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பதாக வாக்களித்தான். (நம் ஆண்டவனேதான் மணியாக வந்தானோ!) மணியிடமிருந்து வெகு விரைவாகத் தமிழ் கற்றுத் தேறினார் அர்த்தநாரி. அவருக்குத் தெரிந்த ஒரு பெண்மணி சென்னையிலிருந்து திருப்புகழ்ப் புத்தகம் ஒன்றை தருவித்துக் கொடுத்தார். அவர் பிறப்பதற்கு முன் பாம்பு ரூபத்தில் பூநாச்சி வீட்டிற்குள் வந்து அருளிச் சென்ற சிவகுமரன், ஒரு தாசி பாடிய பாடல் மூலமாக எஞ்சிய தன் வாழ்க்கையை அவர் எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும் என்று புரிய வைத்து விட்டான்! 'இரும்புக் கடலை' என்று பலரால் குறிப்பிடப்பட்ட கடினமான சந்தத் திருப்புகழை இசையுடன் பாடக் கற்றுக் கொண்டு அனை வருக்கும் கற்றுத் தரவும் செய்த அர்த்தநாரியை பக்தர்கள் 'திருப்புகழ் சாமி' என்று அழைத்தனர். சுமார் 400 திருப்புகழ்ப் பாடல் களைக் கற்றுத் தேர்ந்து வாய்விட்டுப் பாடவும் செய்தார். தனக்குக் கிடைத்த பொருளை வைத்து ஷஷ்டி தோறும் பஜனையும் அன்னதானமும் செய்தார்.

ஆன்மிகப் பாதையில் மேலும் முன்னேற, திருவண்ணாமலையில் வசித்து வந்த ரமண மகரிஷியைச் சென்று பார்க்கும் படி வெங்கட ராயர் எனும் பெரியவர் அர்த்தநாரிக்குஉபதேசித்தார். அதன்படி நீண்டநாட்கள் பாதயாத்திரை செய்து திருவண்ணாமலையை அடைந்து ரமணரைத் தரிசித்த அர்த்தநாரி, அந்த முதல் அனுபவத்தைப் பின்வருமாறு வர்ணிக்கிறார்: "(அன்று) மலைமேலிருந்த ஆசிரமத்தை அடைந்தபோது, ஒரு சிறு கும்பல் மகரிஷியைத் தரிசிப்பதற்காக வெளியில் காத்திருந்தது. சற்று நேரம் கழித்து வெளியே வந்த ரமணர், ஒரு கௌபீனம் மட்டும் தரித்து, கையில் ஒரு தண்டத்துடன் காட்சி அளித்தார். சொல்லொணா புளகாங்கிதம் அடைந்த எனக்கு அவர் பழநி ஆண்டியாகவே



தோன்றினார்". ரமண மகரிஷியின் ஆசிரமத்தில் சில காலம் தங்கிய அர்த்தநாரியைச் சேஷாத்ரி சுவாமிகளிடம் அனுப்பி வைத்தார் ரமணர். பின்னவரின் பேரன்பிற்கும் அருளுக்கும் பாத்திரமான அர்த்தநாரி, அவர் உத்தரவின்படி வள்ளிமலை சென்று ஆசிரமம் அமைத்து, ஏழை எளியவர்கள், வயலில் வேலை செய்பவர்கள் மற்றும் வேட்டுவச் சிறுவர் சிறுமியருக்கும் கூடத் திருப்புகழ் பாடக் கற்றுக் கொடுத்தார். பிற்காலத்தில் வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட அர்த்தநாரியின் வாழ்க்கையை நல்வழிக்குத் திருப்பிவிட்ட பழநி ஆண்டி வசிக்கும் பழநிப்பதி அதிசயப்பதி என்பதில் ஐயமேதுமில்லை. கீழ்க்காணும் திருப்புகழை, அருணகிரியார் வள்ளிமலை வள்ளலுக்கெனவே பாடி வைத்துச் சென்றாரோ என்று எண்ணத் தோன்றுகிறது!

"பத்தர் கணப்ரிய நிர்த்த நடித்திடு
பட்சி நடத்திய குக, பூர்வ
பச்சிம தட்சிண உத்தர திக்குள
பக்தர்கள் அற்புதம் என ஓதும்
சித்ரகவித்துவ சத்த மிகுத்த திருப்
புகழைச் சிறிதடியேனும்

செப்பென வைத்துலகில் பரவத் தெரி
சித்த அநுக்ரஹம் மறவேனே”

(திருச்செங்கோட்டுத் திருப்புகழ்)

சுவாமிகள் பழநியை விட்டு நீங்கி வெகுகாலம் ஆகிய பின்னரும் பழநி ஆண்டவன் அவருக்கு மற்றுமொரு முக்கியப்பணியை விதித்திருந்தான். 1942ம் ஆண்டு சுவாமிகள் சென்னையில் தங்கியிருந்தபோது அங்கு அவரைத் தேடி வந்த குடும்பங்களுள் ஒன்று ஐந்து வயது சிறுவன் சேதுராமனுடையது. அவனது தாயார், சகோதரி, சகோதரர் ஆகியோர் சுவாமிகளிடம் திருப்புகழ் கற்று வந்தனர்.

1944ம் ஆண்டு பழநியில் நடைபெற்ற திருப்புகழ் மாநாட்டிற்குச் சுவாமிகளுடன் சேதுராமனது குடும்பமும் சென்றிருந்தது.

எல்லோரும் மலைமேல் இறைவனைத் தரிசிக்கச் சென்றபோது சுவாமிகள் ஏழு வயதுச் சிறுவன் சேதுராமனைத் தன்னுடன் இருக்கும்படி கூறினார்.

“மதியால் வித்தகன் ஆகி மனதால் உத்தமனாகி,
பதிவாகிச் சிவஞானப் பரயோகத் தருள்வாயே
நிதியே நித்தியமே என் நினைவே நற்பொருளாயோய்
கதியே சொற்பரவேளே கருவூரில் பெருமாளே”

– என்ற திருப்புகழை ராகதாளத்துடன் பதம் பதமாய்ப் பிரித்துக் கற்றுக் கொடுத்தார். சிறுவன் சேதுராமனுக்கு அதுவே சுவாமிகள் அளித்த உபதேச தீட்சையாயிற்று. அதன்பின் படிப்பிலும், வேறு எதிலும் அவனுக்கு நாட்டம் இல்லாமல் போயிற்று. 1950ம் ஆண்டு மஹாசமாதி அடைந்த வள்ளிமலை சுவாமிகள் சேதுராமன் கனவில் தோன்றி அவனை வழி நடத்தினார். அவன் நாவிலிருந்து பக்திப்பாடல்கள் பெருக்கெடுத்தன. 1952ம் ஆண்டிலிருந்து அருட்கவி சேதுராமன் என அறியப்பட்டான்.

28.2.1953 அன்று இளைஞர் சேதுராமன் பழநி ஆண்டவன் மீது பாடிய எண்ணற்ற பாடல்களுள் ஒன்று இதோ :

“கண்டெதிரில் கொண்டாடி ஒப்பிலியான
கந்தனை நினைக்க அன்பாய் தலைபெறவே நீ,
பண்டு எயினர் பெண் பால் மலைப்புறமேகும்
பங்கய மெய்ப்பைந்தாளினைத் தரவேணும்
மண்டெழில் மிக்கு எண்சீர் மயில்பரி ஏறி
வந்து, உலகைத் தெம்பொடு சுற்றிய வேலா
செண்டெறி நற்செந்தாமரைக் கரவீரா
தென் பழநித் தண்டாயுதப் பெருமாளே”

1969ம் ஆண்டு துறவறம் ஏற்று அருட்கவி சாதுராம் சுவாமிகளாகப் பரிணமித்து 10.3.2000 அன்று சமாதி அடைந்த இப்பெரியார் தம் வாழ்நாளில் பாடிய அருட்கவிகள் சுமார் 15,000 பாடல்களும்

மேற்பட்டவை என்பர்.

கல்வியறிவே சிறிதும் இல்லாத பச்சிளம் பாலகி மரகதவல்லியைத் தன் தண்ணருளால் மழைபோல் பக்திப்பாடல்களைப் பொழிய வைத்த பழநி ஆண்டவன் திருவருளைப்பற்றி இனிப் பார்ப்போம்.



பிடித்திருப்பது உன் கை; எழுதுவது என் செயல்



ஆண்டவன் பிச்சி - இவ்விளம்பர யுகத்தில் தன்னை அதிகம் வெளிப்படுத்திக்கொள்ளாமல் குடத்திலிட்ட விளக்காக வாழ்ந்து மறைந்தவர். 'ஆண்டவன் பிச்சி' என்று மகா பெரியவாளால் பிரியமுடன் அழைக்கப்பட்ட மரகதவல்லி அம்மாள். (ஆண்டவன் பிச்சை என்றும் குறிப்பிடப்படுவதுண்டு) இரண்டு வயதிலேயே தாயை இழந்து, படிப்பு, பாட்டு ஏன் விளையாட்டிலும் கூட நாட்டமில்லாதிருந்த எட்டு வயது மரகதத்திற்குக் குடும்பத்தினர் திருமணம் செய்வித்துப் புகுந்த வீட்டிற்கு அனுப்பிவைத்தனர். அவரது



தந்தைவழிப் பாட்டி சுந்தரி அம்மாள் மட்டும் "இப்பெண்ணிற்கு நல்ல அறிவைக் கொடுப்பாயாக" என்று இடைவிடாமல் முருகனை வேண்டிக்கொண்டிருந்தார்.

பத்து வயதிருக்கும்போது, பிறந்த வீட்டிற்கு வந்திருந்த மரகதத்தின் வாழ்க்கையைத் திசை மாற்றிய ஒரு சம்பவம் நிகழ்ந்தது. முருகப் பெருமான், குழந்தை மரகதத்தின் கனவில் தோன்றி, ஆடும் பரிவேல், அணி சேவலுடன் வந்து அவள் நாவில் பிரணவத்தைப் பொறித்தான். பள்ளிக்கே சென்றிராத, படிப்பறிவு சிறிதுமில்லாத மரகதத்தின் வாக்கில், மடை திறந்த வெள்ளம்போல் பக்திப் பாடல்கள் பெருக்கெடுத்தன. ஷடாக்ஷர மந்திரத்தை அவளுக்கு உபதேசித்து, எப்போதும் ஜபம் செய்யும்படிக் கூறி மறைந்தான் முருகன்.

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது. அடுத்தடுத்து ஒன்பது குழந்தைகளுக்குத் தாயானாள் மரகதம். ஐந்தாவது பிரசவம் மிகக்

கடுமையாக இருந்தது. கந்த சஷ்டிக்கு இரண்டு நாட்கள் முன்பு ஆண் குழந்தை பிறந்தது. கந்த சஷ்டி நாளன்று மாலை, வீட்டிலிருந்த மற்றவர்கள் சூரசம்ஹார விழாவைக் காணச் சென்றுவிட்டனர். இரவு ஜுர வேகத்தில் அரற்றிக்கொண்டிருந்த மரகதத்திற்கு ஒரு கனா வந்தது. அதீத அழகுடன் தோன்றிய முருகன் ஒன்றரை வயதுக் குழந்தையாய் மரகதத்திடம் வந்து 'என்னை எடுத்துக் கொள்' என்று கெஞ்சினான். வாரி அணைத்துக்கொண்ட மரகதம் 'நீ யார்' என்றதும் 'மால் மருகன்' என்றான் குழந்தை. 'எனக்கு ஒரு தாலாட்டுப் பாடேன்' என்று குழந்தை கூறியதுதான் தாமதம், ஆனந்த சாகரத்தில் மூழ்கிய மரகதம், இருநூறுக்கும் மேற்பட்ட பாடல்களை முருகன் மேல் பாடினாள். பிரசவ அறையில் உதவிக்கிருந்த பெண் ஓடிச்சென்று பென்சிலும் காகிதமும் கொண்டு வந்து அப்படியே அவற்றை எழுதி எடுத்துக்கொண்டாள்.

உணர்ச்சி வசப்பட்டு மரகதம் நடுநிசியில் உரக்கப் பாடியது மாமியார் செவிக்கு எட்டியது. கோபத்துடன் உள்ளே எட்டிப் பார்த்தவர், இரண்டு நாளே ஆன குழந்தை அழுது கொண்டிருந்ததைக்கூட கவனிக்காமல் பாடிக் கொண்டிருந்த மருமகளைக் கண்டு 'குழந்தை அழறதுகூடத் தெரியாமல் அப்படி என்ன பாட்டு, ஆண்டிமேல்! ஆண்டியைப் பாடும் உன்னால் இந்தக் குடும்பமே பிச்சை எடுக்கப்போகிறது. இனிமேல் முருகனைப் பற்றிப் பாடவோ எழுதவோ ஏன் பேசவோகூட மாட்டேன் என்று உன் கணவர், குழந்தைகள் மீது ஆணையிட்டுச் சத்தியம் செய்" என்று கோபத்துடன் கூறியதும் பயந்துபோன மரகதம் அப்படியே செய்தாள். அதே வேகத்துடன் மாமியார், அப்பாடல்கள் அடங்கிய புத்தகத்தை ஒரு பெட்டியில் போட்டுப் பெரிய பூட்டையும் மாட்டி விட்டார்.

இந்நிகழ்ச்சிக்குப்பின் 24 வருடங்கள் ஓடிய பின்னரே மரகதத்தின் மாமியார் இறைவனடி சேர்ந்தார். இவ்வளவு காலமும், மனது துடித்தபோதிலும் மரகதம் வாய் திறந்து முருகனைப் பற்றி பேசவோ, வாய் திறந்து பாடவோ செய்யவில்லை. ஆனால், இறைவன் சித்தம் வேறு விதமாக இருந்தது. உறவுப் பெண்மணி ஒருவர் வந்து தான் நடத்தும் பத்திரிகைக்கு ஒரு பாட்டு எழுதித் தருமாறு மரகதத்திடம் கேட்டார். "நான் பாடியே எத்தனையோ வருடங்கள் ஆகிவிட்டனவே" என்று கூறிய மரகதம்மாள், மாமியார் பூட்டி வைத்த பெட்டியைத் திறந்து பார்த்தார். உள்ளே பெரும் அதிசயம் காத்திருந்தது. ஒரு அட்டைப் பெட்டிக்குள் மாமியார் வைத்திருந்த ரூபாய் நோட்டுகள் செல்லரித்துப்போயிருந்தன. ஆனால், ஆண்டியின் மேல் மரகதம்மாள் பாடிய பாடல்கள் அடங்கிய புத்தகம் மட்டும் அப்படியே இருந்தது!

1949 ஜனவரி 21. விடியற்காலையில் அம்மா அருகில்



குழந்தையாகத் தோன்றினான் முருகன். "எல்லாப் பாடல்களையும் எடுத்துக்கொடுத்துவிட்டாயே! மீண்டும் என்மேல் பாட ஆரம்பி." என்றான். கணவர் மீதும் குழந்தைகள் மீதும் ஆணையிட்டிருந்த படியால் அவர்களுக்கு ஏதும் பாதகம் ஏற்பட்டுவிடக் கூடாதே என்று பயந்தாள் மரகதம். "பேனாவைப் பிடித்திருப்பது உன் கை; எழுதுவது என் செயல்" என்று கூறி மறைந்தான் முருகன். அன்று அவன் எடுத்துக்கொடுத்த அடியை வைத்து "அருணோதய சூர்யபிம்பமதுபோல் முகமும்" என்று துவங்கி 108 பாடல்களை எழுதினார் மரகதம்மாள். அதுவே 'ஆத்ம போதம்' என்ற பாடல் தொகுப்பாக வெளிவந்தது.

நாளடைவில், 'திருப்புகழ் மணி' என்று மகா பெரியவாளால் அழைக்கப்பட்ட ஜஸ்டிஸ் டி.எம்.கிருஷ்ணசாமி ஐயரின் நட்பு ஏற்பட்டது. தான் பாடிய பாடல்களை அம்மா அவரிடம் கொடுத்தபோது, மணி அவர்கள் தம் பஜனையில் அவற்றைப் பாட ஆரம்பித்தார். ஒருமுறை அம்மா அவர்கள் திருவண்ணாமலை சென்றிருந்தார். இரவு பூஜை முடிந்து கோயில் சந்நதிகள் அடைக்கப்பட்டுவிட்டிருந்தன. வருத்தத்துடன் நின்றிருந்த அவர் முன்தோன்றிய ஒரு சிறுவன் 'வருத்தப்பட வேண்டாம். நான் தரிசனம் செய்து வைக்கிறேன்' என்று கூறி மூலவருக்கு அர்ச்சனை செய்து பிரசாதமும் வழங்கினான். 'என் பெயர் தண்டபாணி; இங்குதான் வழக்கமாக இருப்பேன்' என்று கம்பத்திளையனார் சந்நதியைச் சுட்டிக்காட்டிய சிறுவன் இருட்டில் சென்று மறைந்தான்.

அடுத்த நாள் கோயில் அர்ச்சகர்களிடம் விசாரித்தபோது அந்தப் பெயருடையவர் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை

என்றனர். மறுதினம் உடல்நலமில்லாமல் படுத்திருந்த ரமண மகரிஷியைத் தரிசிக்கச் சென்றார் அம்மா. அவரைக் கண்டதுமே 'என்ன தண்டபாணி தரிசனம் ஆச்சா?' என்று கூறிப் புன்னகைத்தார் ரமணர். உடனே அம்மா கதறிவிட்டார். "என் தண்டபாணித் தெய்வமே! உன்னை அர்ச்சகப் பையன் என்றெண்ணி ஏமாந்து விட்டேனே! என் கையைப் பிடித்துச் சென்று கம்பத்து இளையனார் சந்நதியைக் காட்டி இங்குதான் இருப்பேன் என்று நீ கூறியதைக்கூடப் புரிந்துகொள்ளாத பாவி ஆகிவிட்டேனே'' என்று பலவாறு புலம்பினார், ஆண்டவன் பிச்சி அம்மா!

ஆண்டவன் பிச்சி பழநி ஆண்டவன் மீது பாடிய ஒரு பாடல் இதோ:

"புழுவெனப் பிறப்பினில் உழலுறும் எனக்குறு
பழவினை தொலைத்திடும் வடிவேலா
கழுவினிலுறச் சமணரை விடு கவித்துவ
கவுணிய குலத்துவப் பெரு வாழ்வே
மழுபிடி கரத்தவர் தருகுஹ! குறத்தியை
மகிழ்வுடன் அணைத்தருள் முருகோனே!
தொழுமடியவர்க்கருள்புரி கர விருப்பொடு
பழனியில் உதித்திடும் பெருமாளே."

தண்டபாணி ஏன் எப்போதும் தன் பக்தைக்குச் சுய உருவத்தை மறைத்துச் சிறுவனாகவே காட்சி அளித்தான்? இக்கேள்விக்கு ஸ்வாமி சங்கராநந்தா அவர்கள் அழகாக விளக்கம் அளிக்கிறார்: "கீதையில் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டும்போது 'அர்ஜுனா! உன்னால் அந்த வைபவத்தை உன் ஊனக்கண்ணால் காண முடியாது. அதற்காக உனக்கு 'ஸக்ஷுஸ்' என்ற ஞானக்கண்ணை அளிக்கிறேன். பிறகு பார்!' என்கிறான். காரணம் மனிதர்களின் ஐம்புலன்களும் ஒரு வரையறைக்குள் அடங்கியவை. அவற்றினால் அதிகமாகச் சக்தி பெருக்கத்தைப் பிறப்பிக்கும் சக்தியோ, ஏற்படும் வீர்யத்தையோ தாங்கிக் கொள்ளும் தன்மையோ கிடையாது. கோடி சூர்யப் பிரகாசமான கடவுளை, மதிய வேளையில் சூரியனின் வெப்பத்தைக்கூட தாங்க முடியாமல் தடுமாறும் மனிதனால் எவ்வாறு காணமுடியும்? எனவேதான் கருணைத் தெய்வமான முருகப்பெருமான் தன் சக்தியை உள்ளடக்கித் தோன்றினான்' என்பது சுவாமிஜி கூறும் விளக்கம்.

திரு.டி.எம்.சௌந்தரராஜன் அவர்கள் பாடிப் பிரபலமாகிய 'உள்ளம் உருகுதையா, முருகா உன்னடி காண்கையிலே, அள்ளி அணைத்திடவே எனக்கோர் ஆசை பெருகுதப்பா' போன்ற உள்ளத்தை உருக்கும் எண்ணற்ற பாடல்களைப் பாடிய ஆண்டவன் பிச்சி அம்மா, முதுமையில் துறவறம் பூண்டு, பின் இறைவனடி சேர்ந்தார்.



கிருபானந்த வாரியார்:

சென்ற நூற்றாண்டில் அங்கிங்கெனாதபடி எங்கும் முருகன் புகழ் முழங்கக்காரணமாக இருந்த மற்றொரு தெய்வீக மனிதர், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளாவர். அவர் வாழ்க்கையிலும் முருகன் தன் திருவிளையாடலை நிகழ்த்திய சம்பவங்கள் பல உண்டு.

1945ம் ஆண்டு, வாரியார் சுவாமிகள் காங்கேயத்தில் உரையாற்றச் சென்றிருந்தார். அதிகாலையில் வழிபாடு செய்துவிட்டு, ஆறுமணிக்கு பழநிக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறினார். அது காலை 11 மணிக்குப் பழநியைச் சேரும். பின் 11.30 மணிக்கு ரயில் ஏறி மாலை மதுரை செல்ல வேண்டும் என்பது அவரது திட்டம். ஆனால் அவர் ஏறிய பஸ் பழநிக்கருகில் வந்தபோது ரயில்வே கேட் மூடப்பட்டிருந்தது. மாட்டு வண்டிகள் பல குறுக்கிட்டபடியால் பஸ், ரயில் நிலையத்தை அடைவதற்குமுன் ரயில் புறப்பட்டுச் சென்றுவிட்டது. எனவே ரயில் நிலையத்திலேயே தங்கிவிட்டு மாலை ஐந்தரை மணி ரயிலில் மதுரைக்குப் புறப்பட்டார் சுவாமிகள்.

முதல் வகுப்பில் சுவாமிகளுடன் பயணம் செய்த ஒரு அன்பர் அவரைப் பார்த்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். "பலமுறை உங்களைச் சந்தித்துப் பேச முயன்றிருக்கிறேன். முடியவில்லை. இன்று பழநி ஆண்டவனே உங்களுடன் கூட்டி வைத்துள்ளான். மாதந்தோறும் கிருத்திகையில், பழநி மலையில் தண்டாயுதபாணிக்கு அடியேன் அபிஷேகம் செய்கின்றேன். தாங்கள் பழநி வந்து ஒவ்வொரு கார்த்திகையிலும் சொற்பொழிவு செய்ய வேண்டும். அதற்கான பொருளை நான் தருவேன்," என்று கூறி நூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார்.

இதனால் கிருத்திகைதோறும் பழநி ஆண்டவனைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் சுவாமிகளும் ஒப்புக்கொண்டார்.

1945 முதல் 1955ம் ஆண்டு வரை சுவாமிகள் பழநியில் விரிவுரைகள் ஆற்றி வந்தார். பழநித் திருப்புகழ் அனைத்திற்கும் உரை நிகழ்த்தினார். குறிப்பிட்ட தினத்தன்று காலை ரயிலைத் தவறவிட்டது பழநி ஆண்டவனின் திருவிளையாடலின் விளைவே என்று உறுதியாகக் கூறலாம்.

குறிஞ்சிக் கிழவன் என்று போற்றப்படும் முருகப்பெருமான், பழநியை அடுத்த கொடைக்கானலில் 'குறிஞ்சி ஆண்டவன்' என்ற பெயரில் எவ்வாறு குடியேறினான் என்பது ஒரு அதிசயமான கதையே!

இந்துமத நம்பிக்கைகளால் பெரிதும் கவரப்பட்ட ஐரோப்பிய பெண்மணி ஒருவர் கொடைக்கானலில் வசித்துவந்தார். இலங்கையைச் சேர்ந்த பொன்னம்பலம் ராமநாதன் என்பவரை மணந்து, தன் பெயரை லீலாவதி என்று மாற்றிக்கொண்டு ஒரு இந்துவாகவே வாழ்ந்துவந்தார், அவர். பழநி ஆண்டவனின் பெருமைகளைப்பற்றிக் கேட்டு, அவனது பரம பக்தையாக விளங்கினார். வீட்டிற்கருகிலிருந்த ஒரு குன்றின் உச்சியில் நின்றுகொண்டு தொலைவில் தெரியும் பழநி மலையைத் தினமும் தரிசிப்பது அவர் வழக்கம். பனி மூடிய சில நாட்களில் குன்றின் காட்சி கிடைப்பது அரிதாக இருந்தது. தான் நிற்கும் இடத்திலேயே பழநி ஆண்டிக்கு ஒரு கோயில் எழுப்பலாமே என்ற எண்ணம் மேலோங்கியது. அதன்படி 1936ம் ஆண்டு கொடைக்கானலில் பழநி ஆண்டவனுக்கு ஒரு அழகிய கோயிலை எழுப்பினார் லீலாவதி. கோயில் மூலவர் குறிஞ்சி ஆண்டவன் என்று அழைக்கப்படுகிறார்.

பழநி தண்டாயுதபாணி கோயிலின் நிர்வாகத்தின் கீழுள்ள உட்கோயில்களுள் இயற்கை அழகும், இறை அழகும் நிரம்பப் பெற்றது குறிஞ்சி ஆண்டவர் கோயில். கோடையில் மிதமான தட்ப வெப்ப நிலையை உடைய கொடைக்கானல் போலவே

பக்தர்களுக்குத் தண்ணருள் பாவித்துக்கொண்டிருக்கிறான் குறிஞ்சி ஆண்டவன். காலை 7.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை சந்நதி திறந்தி ருக்கும். மதியம் 12 மணிக்கு உச்சிகால பூஜையும், மாலை



7.30 மணிக்கு சாயரட்ச பூஜையும் நடைபெறுகிறது. வழக்கமான திருவிழாக்கள் தவிர மே மாதம் ‘மலர் வழிபாட்டு விழா’ எனும் விழாவும் ஒவ்வொரு ஆண்டும் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

பழநிதண்டாயுதபாணிக்கோயிலின் மற்றொருபிரபலமான சார்புக் கோயில், ஒட்டன் சத்திரத்திலுள்ள குழந்தை வேலப்பர் கோயில். ஒரே கல்லில் வடிக்கப்பட்ட குழந்தை வேலப்பர் மயில் மீது அமர்ந்து அடியவர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். பழநியாண்டவர் கோயில் தைப்பூசத் திருவிழாவின்போது திருத்தலப் பயணம் வரும் அடியார் கள் இங்கு தங்கி முதலில் வேலப்பரை வழிபடுகின்றனர். குழந்தை வரம் வேண்டி வருபவர்கள் புளிப்பு மிட்டாய்களை அடியார்களுக்கு வாரி வழங்குகின்றனர். இங்கு தங்கிப் பழநி செல்லும் அடியார்கள் வசதிக்காகப் பழநி கோயில் நிர்வாகம் ஒரு காவடி மண்டபத்தையும் இரண்டு திருமண மண்டபங்களையும் கட்டியுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டி அமைந்த இவ்விடத்தில் 1500 அடி உயரத்தில் ஒரு மலைக்கோயிலும் உள்ளது.

திண்டுக்கல் - பழநி சாலையிலமைந்துள்ள மற்றொரு முக்கிய கோயில் ‘அடையாள வேல்’. சத்ரப்பட்டி எனுமிடத்திலுள்ள இக்கோயில், பாதயாத்திரையாக வருபவர்கள் தவறாமல் தரிசிக்க வேண்டியமுக்கியகோயில்.வைகாபுரிச்சிற்றரசின்எல்லையாகஇருந்த பழநி ஆண்டவரின் அருளாட்சி வேண்டி வேல் மட்டும் நடப்பட்டு பூஜை செய்யப்பட்டு வந்தது. சமீபகாலத்தில்தான் மண்டபங்கள் எழுப்பப்பட்டன. இந்த இடத்தில் வந்து சேரும்போதுதான் தொலைவிலுள்ள பழநிமலை முதன்முதலாகத் தரிசனமாகிறது. வேலுக்கு மறுபெயர் சக்தி. வேலை முருகனாகவே கருத்திற்கொண்டு கோயில் அமைத்து வழிபட்டனர் பண்டைய தமிழர். இன்றைய பழமுதிர்சோலை மலைக்கோயிலில் பல ஆண்டுகளுக்கு முன்பு வேல் மட்டுமே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது என்று கூறுவர். அருணகிரியாரின் வேல் வகுப்பு பாடல் வரிகளில் சிலவற்றை நினைவுகூரலாம்:

“துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்க
இடர் நினைக்கினவர் குலத்தை
முதலறக் களையும் எனக்கொர் துணையாகும் (வேல்)
சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்த பகை அறுத்தெறிய உறுக்கி
எழும் அறத்தை நிலைகாணும் (வேல்)
தனித்து வழி நடக்கும் எனதிடத்தும் ஒரு
வலத்தும் இருபுறத்தும் அருகடுத்து
இரவு பகல் துணையதாகும் (வேல்)

இதுவரையிலும் நாம் குறிப்பிட்ட கோயில்களன்றி பழநிமலைக் கோயில் நிர்வாகத்தினரின் எண்ணற்ற சார்புக் கோயில்களையும் பழநியில் காணலாம். கிரிவீதியிலமைந்துள்ள திருச்சுற்றுக்கோயில்கள், பாதிரி விநாயகர் கோயில், காமாட்சி அம்மன் கோயில், பட்டத்து விநாயகர் கோயில், வேளீஸ்வரர் கோயில், அகோபில வரதராஜப் பெருமாள் கோயில், வேணுகோபால சுவாமி கோயில், லட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் போன்ற பல திருக்கோயில்கள் மலைக்கோயிலின் சார்புக்கோயில்களாகத் திகழ்கின்றன.

பூஜைகள், விழாக்கள் தவிரவும் பழநித் திருக்கோயில் நிர்வாகம் பல்வேறு சமுதாயப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. ஆதரவற்றோருக்கான கருணை இல்லம், நாதசுரம் மற்றும் தவில் இலவசக் கல்லூரிகள், மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச பள்ளிகள், ஆண்கள் - பெண்களுக்கான கலை, தொழில்நுட்பக் கல்லூரிகள், தேவார திருவாசக இசைப்பயிற்சிப் பள்ளி, சித்த மருத்துவமனை போன்ற நிறுவனங்களையும் நடத்தி வருகிறது. விழாக்காலங்களில் ஏற்பாடு செய்யப்படும் நடமாடும் மருத்துவமனையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதுவரையிலும் தீபமங்கள ஜோதியான தண்டபாணித் தெய்வம் குடிகொண்டிருக்கும் பழநித்திருத்தல மகிமை பற்றியும், அவ்விறைவன் பக்தர்கள் வாழ்க்கையில் நிகழ்த்திய அநேக அதிசயங்கள் பற்றியும் படித்து மகிழ்ந்தோம்.

சுவாமி மலையில் நின்றுகொண்டு ‘அதிசயம் அனேகம் உற்ற பழநி’ என்று அருணகிரிநாதர் பாடியதே ஒரு தனி அதிசயம்தான். ஈசுவர சக்தி எல்லாவற்றிலும் ஊடுருவி உள்ளும் புறமுமாக நிற்பதை ‘புருஷ தத்துவம்’ என்பர்; அதுவே பிரபஞ்சமாக விரிந்து அநேக கோடி ஜீவராசிகளாகவும், சேதன, அசேதனப் பொருளாகவும் விளங்கி நிற்கும் போது ‘பிரகிருதி தத்துவம்’ எனப்படும். பிரபஞ்சத்தைச் சுற்றி வந்து பிரகிருதி தத்துவத்தை அறிந்து வந்த முருகன், பின் புருஷ தத்துவத்தை அறிய, மாந்தராகிய நாம் உலகப் பொருட்களிலுள்ள ஆசாபாசங்களைத் துறந்து தவநிலையை மேற்கொள்ள வேண்டும் என்று காட்டி, ஆண்டிக்கோலம் பூண்டு பழநிமலை மேல் நின்றான்.

இவ்வாறு பூரண சரணாகதியை மேற்கொண்ட ஜீவனிடம், பரம்பொருள் தானாகவே ஓடிவந்து அருள்பாலிக்கும் என்பதை விளக்குவதுவே, பரமனும் அம்மையும் முருகனைப் பார்க்க பழநிக்கு வந்தனர் என்பது.

பரம வைராக்கியனாக, ஞானியாக, ஆண்டியாக, தண்டாயுத பாணியாக விளங்கும் ஞானபண்டித சாமி, நம் மனமாகிய திரியில் ஞானச்சுடரை ஏற்றி வைப்பான் என்று உறுதி கூறும் மகா பெரியவாளின் விளக்க உரையுடன் இக்கட்டுரையை நிறைவு செய்வோம்:

“சுப்ரமண்யர், வெளிப் பகையோடு உட்பகைவர் அறுவரையும் அழித்து நம்மை ஜோதி ஸ்வரூபமாக்குகிற சிகர ஜோதி அவர். மலைகளில் எல்லாம் மணிவிளக்காக மேலே நிற்பவர். கைலாச மலையில் ஜோதிர் பொறியாய் உதித்தார். திருப்பரங்குன்ற மலையிலும், திருத்தணி மலையிலும் தேவசேனா - வள்ளி ஆகியோரை மணந்தார். கந்தமாதன மலையில் சூரனை வதைத்தார்; பழநி மலையில் ஆண்டியாய் நின்றார்; சுவாமி மலையில் ஞானமொழி பேசினார். அவர் பெரியரில் பெரியவர்; நாம் சின்னஞ்சிறியர். சின்னஞ்சிறிய நாம், தானியங்களுள் சின்னஞ்சிறிய தினையைக் காட்டி அழைத்தால் அப்பெரியோன் வருவான்; சின்னச்சின்ன தேனீக்கள் சின்ன மலர்களிலிருந்து எடுத்த தேனை விட்டுத் தினை மா பிசைந்து அவருக்கு நைவேத்யம் செய்தால் நமக்கு, மனமலர்ச்சி என்ற தேனின் இனிமையைத் தருவார். தாவர லோகம், இயற்கை அழகு முழுவதற்கும் சாரமாகத் தூய பசு மேய்ந்த உணவெல்லாம் திரண்டு வந்த பசு நெய்யை மாவில் வார்த்து ஜோதி விளக்கேற்றினால் நம் மனத்திரியிலும் அவர் ஞானச் சுடரை ஏற்றி வைப்பார். பரமேஸ்வர ஸ்வரூபமான அவருக்கு அரஹரோஹரா சொல்லி நாம் பாவத்தை எல்லாம் எரித்துப் பரமானந்த ஜோதியாக இருப்போமாக!”



அதிசயம் அனேகமுற்ற பழநி

என்ற இந்த புத்தகம் உருவாக எனக்குப் உறுதுணையாக இருந்த நூல்கள்:

பழனித்தலபுராணம் – பாலசுப்ரமண்யக்கவிராயர்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பு மலர்

முருகவேள் பன்னிருதிருமுறை – டாக்டர் வ.சு.செங்கல்வராயன்



திருமதி சித்ரா மூர்த்தி

தமிழகப் பொதுப்பணித்துறை அதிகாரியாக இருந்த தந்தையின் பல பணி இட மாற்றங்கள் காரணமாக மணிமுத்தாறு, வைகை, ஆழியாறு, தாமிரபரணி, காவிரி ஆகிய நதிகளின் நீருடன் தமிழையும் கலந்து பருகிய இளம் பருவம். வட இந்தியாவில் குடியேறிய பின்னும் கங்கை, யமுனை, ஜீலம் ஆகிய நதிகளின் தொடர்ந்த அரவணைப்பு, புகுந்த வீட்டினரின் திருப்புகழ் ஆர்வம் இவற்றால் உருவானது ஆன்மிக நாட்டம். தமிழகம் திரும்பிய பின் திருப்புகழ் இசைப் பேருரைகளிலும் ஆன்மிகக் கட்டுரைகள் எழுதுவதிலும் மனம் ஒன்றியதன் விளைவு... இதோ உங்கள் கையில் தவழும் நூல் 'அதிசயம் அனேகமுற்ற பழநி'.

பழநி எனும் பெயரைக் கேட்டதுமே விபூதி, பஞ்சாமிர்தம், மலையின் மலைக்க வைக்கும் அழகு, வேலாண்டியாக ஞான தண்டத்துடன் மேற்குத் திசை நோக்கிக் குடிகொண்டிருக்கும் பழநி ஆண்டவன், விநாயகருக்கும் முருகனுக்கும் இடையே நாரதர் நடத்தி வைத்த மாதுளங்கனித் திருவிளையாடல், நவபாஷாணத்தாலான ஒப்பற்ற முருகன் திருவுருவம் எல்லாம் நினைவுக்கு வரும். இங்கு அருள்பாலிக்கும் அழகன் முருகன் நிகழ்த்திய அற்புதங்கள், அவனை தரிசித்த அடியார்கள், புகழ்ந்து பாடிய புண்ணியர்கள் என அரிதான தகவல்களின் வழியே பழநிபதிவாழ் பாலகுமாரன் அருளை உங்கள் இல்லங்களுக்குக் கொண்டு சேர்க்கிறது இந்த நூல்!

சூரியன் பதிப்பகம்

ATHISAYAM ANEHAMUTRA PAZHANI

₹100/-

ISBN 9789385118401

9 789385 118401